## ஜெய்சக்தியின்

# அழகுக்கு அழகானேன்



# அழகுக்கு அழகானேன்!



## ஜெய்சக்தி





1

"நல்ல வாழ்க்கை! நல்ல திருப்பம் காத்திருக்கிறது" என்று தோன்றியது - ரமணனின் அப்பா ஈஸ்வரமூர்த்திக்கு.

"அகிலாண்டம்! எல்லா ரெடியா? பேக்கிங் முடிஞ்சுதா?" என்று குரல் கொடுத்தார்.

"ஆச்சுங்க! இவன் என்ன ஒரு சூட்கேஸ்தான் எடுத்துக்கு வேண்ங்கறான். இரண்டு சூட்கேஸாவது கொண்டு போன்னா, 'இல்ல வேண்டாம் ஒண்ணே ஒண்ணு போதும்' அப்படிங்கறான். என்னத்த பண்றது" என்றார் அகிலாண்டம்.

"அதுசரி போ! அவன் என்ன புது குடித்தனமா போறான். மொதல்ல ஊருக்குப் போய் பாக்கட்டும்டி; புடிக்குதானு பார்ப்போம். ஊர் புடிச்சு அங்க இருந்துக்கறேன்னு முடிவு பண்ணினா அதுக்கப்புறம் இரண்டு சூட்கேஸ் என்ன..! என்னென்ன வேணுமோ எல்லாத்தையும் கொண்டு போய்த் தள்ளலாம்" என்று சிரித்தார் ஈஸ்வரமூர்த்தி.

ரமணன் புன்னகையுடனே இந்த உரையாடலைக் கேட்டுக்கொண்டே தனது அறையில் இருந்து வெளியே வந்தான்.

ஈஸ்வரமூர்த்தி தன் மகனைக் கொஞ்சம் பெருமையோடும், கொஞ்சம் கவலையோடும் பார்த்தார்.

"ஏன்டா! முடிவே பண்ணிட்டியா, முடிவில் எதுவும் மாற்றம் வராதே?" என்று கேட்டார்.

"நல்ல முடிவுதான்ப்பா. மாற்றம் வராதுப்பா. நான்தான் சொல்லிட்டேனே" என்றான் ரமணன்.

ஈஸ்வரமூர்த்தி ரமணனிடம் அப்படிக் கேட்பதற்கு ஒரு காரணம் உண்டு. ரமணன் நல்ல அரசு வேலை கிடைத்தும், அதை விட்டுவிட்டு ஒரு கிராமத்திற்கு ஒரு தனியார் நிறுவனத்தில் பணி செய்யப் போகிறானாம்.

தனியார் நிறுவனம், அரசு நிறுவனத்தைக் காட்டிலும் அதிக சம்பளம் தரத் தயாராகத்தான் இருக்கிறார்கள். ஆனாலும் அரசு வேலை என்றால் ஒரு இரண்டு வருடம் ஓட்டினால் அதற்கு அப்புறம் நிரந்தரமாகிவிடும். அதற்குப் பிறகு யாரும் எதுவும் செய்யமுடியாது. வாழ்க்கை முழுவதும் பாதுகாப்பு என்று நினைத்தார் ஈஸ்வரமூர்த்தி.

ரமணனின் எண்ணமோ வேறு மாதிரி இருந்தது. ஒரு சில விஷயங்களில் தந்தையும் மகனும் ஒத்துப் போவார்கள் என்றாலும் ரமணன் பல விஷயங்களில் தனக்கென்று சில முடிவுகளை வைத்துக் கொண்டு இருந்தான். சில நேரங்களில் அவனுடைய முடிவுகள் அவருடைய முடிவுகளைக் காட்டிலும் சிறப்பாகவே இருந்தாலும் கூட, பல நேரங்களில் அவனது முடிவுகளில் ஒரு சாகச மனப்பான்மை இருப்பதாக அவருக்குத் தோன்றியது.

'ம்... நாமளும் அந்த வயசுல அப்படித்தான் இருந்தோம்' என்று எண்ணிக் கொள்வார். பெரிதாக ஆட்சேபிக்க மாட்டார். 'அவனுடைய வாழ்க்கை அவன் வாழ்ந்துதான் தெரிந்து கொள்ள வேண்டும்' என்று நினைப்பார்.

அந்த ஒரு பக்குவம் அவருக்கு இருந்ததனாலேயோ என்னமோ ரமணனுக்கு பெரிய தொல்லைகள் எதுவும் கொடுக்கவில்லை.

அகிலாண்டம் வேறுமாதிரி.

அகிலாண்டத்திற்குக் குறி எல்லாம், மகன் நன்றாக நேரத்திற்கு சாப்பிட வேண்டும். எல்லா இளசுகளையும் போல அவனும் நன்றாக உடுத்திக் கொள்ள வேண்டும். நாலு இடத்திற்குப் போகவேண்டும். வர வேண்டும். கெட்டிக்காரப் பையன் என்று உற்றார் உறவினரிடையே பேர் எடுக்க வேண்டும். கல்யாணம் வேறு இருக்கிறதே! இதுதான் அவருடைய கவலை. அவருடைய உலகமும் கூட.

ரமணன் அப்பாவின் அருகில் வந்து நின்றான்.

''என்னடா நானும் வேணா கூட வரட்டுமா'' என்றார் ஈஸ்வரமூர்த்தி.

ரமணன் அவரைப்பார்த்து சிரித்தான்.

''அப்பா, என்னப்பா இது... நான் என்ன சின்னப்புள்ளையா, நான் அந்த ஊருக்கு இதுவரைக்கும் போகலைன்னாக் கூட உங்களுக்குத் தெரிஞ்சவங்க நிறையபேர் இருக்காங்கதானே. இல்லைன்னா என்னப்பா அங்க போயி தெரிஞ்சவங்க ஆக்கிக்க வேண்டியதுதானே. வாழ்க்கையில எப்போதும் எல்லோரும் தெரிஞ்சவங்களாவே வந்துட்டு இருப்பாங்களா?'' என்றான்.

''அப்படிப் போடு'' என்று சிரித்தார் அப்பா.

''அது சரிடா, நீ அங்க போயி எல்லோரையும் தெரிஞ்சவங்க பண்ணிப்பே. அதுல ஒண்ணும் சந்தேகம் இல்ல. ஆனா பாத்து! பத்து சொந்தக்காரங்க இருக்கிற ஊரு எதுவும் ஏடா கூடமாப் பண்ணிக்காதே'' என்று சொன்னார்.

''நான் என்னப்பா ஏடாகூடம் பண்ணப் போறேன்'' என்று சிரித்தான் மகன்.

''இல்ல ஏதோ நான் புரிஞ்சுக்கறேன். மகனாச்சுனு ஏத்துக்கறேன் சில விஷயங்களை. எல்லோரும் அப்படி எல்லாத்தையும் புரிஞ்சுக்க மாட்டாங்க. ஏத்துக்கவும் மாட்டாங்க'' என்றார்.

மறுபடியும் மகனை ஆழமாகப் பார்த்தார்.

அவனும் அதேபோல ஆழமாக பார்த்தான். ''ஏத்துக்கக் கூடிய கருத்துக்களை நான் ஏத்துக்கறேன் அப்பா! நான் எப்படி ஏத்துக்கறேனோ அது போல அவுங்களுக்கு மறுக்கறதுக்கும் உரிமை இருக்கில்ல. அதை புரிஞ்சுக்கறதுக்கு என்னால முடியும்பா.''

''அந்த தைரியத்துலதாண்டா உன்னை ஊருக்கு அனுப்புறேன்'' என்று மறுபடியும் சொன்னார்.

லட்சுமிபுரத்திலே அவனுக்கு வேலை கிடைத்திருக்கிறது என்ற உடனேயே அகிலாண்டத்திற்கு ஒரே மகிழ்ச்சி. ஏனென்றால் கல்யாணத்தைப் பற்றி பேசினாலேயே மகன் பிடி கொடுக்க மாட்டேன் என்கிறான். வயது இருபத்தேழு முடிந்து இருபத்தெட்டு ஆகிவிட்டது. அரசு வேலையும் வேண்டாம் என்று வந்து விட்டான். தனியார் கம்பெனிகளில் வேலை பார்க்கிறேன் என்று கிளம்பிவிட்டான். அதற்கு அவன் சொல்லுகிற காரணம் தான் விசித்திரமான காரணம்.

அரசு வேலைகளில் இருந்தால் தன்னுடைய கொள்கைகளை நிலை நாட்ட



முடியாதாம். தன்னுடைய கருத்துக்களை சுதந்திரமாக சொல்லமுடியுதாம். தனியார் நிறுவனம் என்றால், அதில் அவனுடைய கருத்துகளை சுதந்திரமாக சொல்லலாமாம். அவன் நிறைய இயக்கங்களில், ஓய்வு நேரத்தை செலவிடுவதற்கு தனியார் நிறுவனம் என்றால் வசதியாக இருக்குமாம். இப்படி ஏதேதோ கருத்துக்களை வைத்துக் கொண்டிருந்தான்.

அகிலாண்டத்திற்கோ, மகனுக்குக் கல்யாணம் செய்யக் கூடிய வயது வந்துவிட்டது. அதற்குப் பெண் பார்க்க வேண்டும் என்பதுதான் ஒரே கருத்தாக இருந்தது.

ஆனால் உறவினர்கள் ஊர், என்று சொன்னவுடனேயே அகிலாண்டத்திற்கு ஒரு வகையில் மனத்திருப்தி ஆகிவிட்டது.

இந்த ஊரில் இருக்கிற வரைக்கும் தான் உறவுக்காரர்கள் வீட்டுக்கு அதிகம் போவதில்லை. வருவதில்லை. அளவாகப் பழகுவான். ஆனால் மிகவும் ஒட்டுதலாக யாரிடத்திலும் பழக மாட்டான்.

உறவுக்காரர்கள் மட்டுமே ஆதரவு என்ற நிலையில் ஒரு ஊருக்கு போகும்போது கண்டிப்பாக உறவுக்காரர்கள் வீட்டுக்குப் போவான். பழகுவான். ஏன் அங்கேயே கூட நான்கைந்து குடும்பங்களில் நல்ல பெண்கள் இருக்கிறார்கள். இவனுக்கு ஏதாவது ஒரு பெண்ணை பிடித்துப் போய் திருமணம் செய்து கொள்கிறேன் என்றுகூடச் சொல்லலாம். அப்படி ஒரு ஆழமான ஆசையை வைத்துக் கொண்டுதான் அகிலாண்டம், லட்சுமிபுரம் என்ற சொன்னவுடனே மிகவும் மகிழ்ந்தார்.

உடனே கணவனிடத்தில் சொன்னார்.

''ஏங்க இப்படி பையன் வரான்னு அவுங்களுக்கு போன்பண்ணி சொல்லலாமா..? ஊருல எங்க ஒண்ணுவிட்ட அண்ணன் இருக்காரே. உங்க சொந்தக்காரங்க இருக்காங்களே எல்லாருக்கும் ஃபோன் பண்ணி சொல்லுவோமா!'' என்றார்.

உடனே ஈஸ்வரமூர்த்தி '' அவன் என்ன சொல்லுவான்னுத் தெரியலையே'' என்றார்.

அவர் நினைத்தது போலவே மகன் ''அப்பா! நான் வேலைக்குப் போறேன். எப்படி இருந்தாலும் எந்த உறவுக்காரர்கள் வீட்டிலேயும் ஒரு மூணு நாளைக்கு மேலே தங்க முடியாது. நான் போய் தனியாகத்தான் இருப்பிடம் பார்த்துக்கணும். பேசாம நானே சமைச்சு சாப்பிட்டுக்குவேன். யாருடைய வீட்லயும் தங்கி சாப்பிடறதா இல்லை. அதனால சும்மா தடபுடல் பண்ணாதீங்க. வேண்ணா ரொம்ப நெருங்கியவங்க யாராவது இருந்தாங்கன்னா அவுங்ககிட்ட இப்படி தம்பி வர்றான்னு வேணா சொல்லிவையுங்க'' என்றான்.

ஈஸ்வரமூர்த்திக்குக் கூட, அதுவே சரியென்று பட்டது. தன்னுடைய நெருங்கிய உறவினரும் மனைவியின் ஒன்றுவிட்ட சகோதரருமான அண்ணாமலைக்கு மட்டும் ஃபோன் செய்து, இந்த மாதிரி மகன் வருகிறான் என்ற செய்தியை சொல்லியிருந்தார்.

ரமணன் அம்மாவிடமும், அப்பாவிடமும் ஆசி வாங்கிக் கொண்டு புறப்பட்டு விட்டான்.

அப்படியொன்றும் அவன் போகிற ஊர் வெகு தூரத்தில் இல்லை. நான்கு மணி நேரப் பயணம். தினமும் வந்து போக முடியாது. அதனால் அங்கேயே தான் தங்கிக் கொள்ள வேண்டும் என்கிற முடிவு எடுத்திருந்தான்.

இப்போது போகும் போது "அப்பா! நான் பைக்கிலேயே போய்க்கிறேன் அப்பா!" என்றான். அப்பாவும் மறுக்கவில்லை. தன்னுடைய ஒரே சூட்கேஸை எடுத்துக் கொண்டு பைக்கிலேயே கிளம்பினான் ரமணன்.

லட்சுமிபுரம் என்ற ஊர் பெற்றோர்கள் பேசும் போது அடிக்கடி காதில் விழுகிற ஊர்தான். அங்கே உறவினர்கள் இருக்கிறார்கள். அவர்கள் ஓரிருமுறை வந்து சென்றதும் கூட உண்டு. இவன் பார்த்துக் கூட பேசி இருக்கிறான். ஆனால் மனதில் தங்கிய உறவுகள் என்று சொல்ல முடியாது. அப்பாவும் அம்மாவும் வேண்டுமானால் அவ்வப்போது போய்விட்டு வருவார்கள். இவன் அப்படி ஒன்றும் உறவுக்காரர்களிடம் உள்ளூரிலேயே தொடர்பு வைத்துக் கொண்டது இல்லை. இனி நான்கு மணிநேர தொலைவில் இருக்கிற ஊருக்கா போய்விட்டு வரப்போகிறான்.

அவனுக்கு இது வரையிலும் அவனுடைய படிப்பு, அவனுடைய வேலை. அவனுடைய சிந்தனைகள், அவனுடைய இயக்கங்கள் என்று அதுவே மனத்திருப்தியாக இருந்தது. இளம் வயது தோழர்கள், வருவார்கள், போவார்கள். அதிலும் அவனுடைய தோழர்கள் எல்லாம் அவனைப் போலவே கருத்தை கொண்டிருப்பதால் சனி, ஞாயிறுகளில் பார்த்தால் சுற்றுச்சூழல் சம்பந்தமான ஏதாவது கருத்து ஏதாவது ஒரு பயணம் என்று போய்க் கொண்டிருப்பான்.

அப்பா கூட "ஏன்டா உன்னோட ரசனைகள் எல்லாம் வேற மாதிரி இருக்கு?" என்று கேட்டால் அதற்கு அவன் சொல்வான். "என்ன வேறமாதிரி இருக்கு. சனி ஞாயிறுல எல்லாரும் சும்மா பிக்னிக் போவாங்க. நாங்க ஒரு காரணத்தோட போறோம். சுற்றுப்புற சூழலைப்பற்றி நாலுபேருகிட்ட சொல்றோம். எவ்வளவு புதிய புதிய இடங்களை பாக்கறோம்னு தெரியுமாப்பா! போக வேண்டிய இடங்களுக்கும் போய்க்கிறோம். சொல்ல வேண்டிய கருத்தையும் சொல்லிக்கிறோம். ஒரே கல்லுல இரண்டு மாங்கா அடிக்கிறமில்லப்பா" என்று சிரிப்பான்.

"அடிப்பீங்கடா, அடிப்பீங்க..! விட்டா நாலுமாங்காக் கூட அடிப்பீங்க"

"ஏம்பா நாலுமாங்காவோட நிறுத்திட்டீங்க. கொத்தாகவே அடிப்போம்" என்பான் அவன். அவரும் சிரிப்பார்.

அந்த மாதிரி உரையாடல்கள் அடிக்கடி நடக்கும். ஆனால் ஏனோ லட்சுமிபுரத்திற்குப் போக வேண்டிய அவசியம் அவனுக்கு இதுவரை வரவில்லை.

ஒரு இரண்டு மணி நேர பயணத்திற்குப் பிறகு அந்த ஊருக்கான வழி மிக அழகாக மாறியது. அந்தப் பாதை ஓரமாகவே கொஞ்சம் மலை ஏறவேண்டியிருந்தது. அந்த பாதை ஓரமாகவே அவனோடு போட்டி போட்டுக் கொண்டு ஒரு ஆறும் ஓடி வந்தது. ஆற்றில் பெரிய அளவில் இப்போது தண்ணீர் இல்லையென்றாலும் கூட, தண்ணீர் வரும்போது பார்க்க மிக அழகாக இருக்கும் என்று தோன்றியது.



**அஞ்சறை பெட்டி**

## தலைமுடி பராமரிப்பு

*1.தலைமுடிக்கு அடிக்கடி ஷாம்பூ, ஹேர் ஆயில் வகைகளை மாற்றாதீர். அது முடியின் ஆரோக்கியத்தையும் பாதிக்கும்.*

நான்கு மணி நேரப் பயணமும் மிக இன்பமாகத்தான் இருந்தது. ஒருபுறம் முழுக்க தோப்புக்கள். ஒருபுறம் ஆறு ஓடிக்கொண்டு இருந்தது. லேசான குன்றுகள் அங்கங்கே தென்பட்டன. அதிலும் அவன் கிளம்பிய நேரம் வேறு அதிகாலை என்பதால், பயணம் மிக இரம்மியமாக இருந்தது.

இரு புறத்தையும் பார்த்து ரசித்துக் கொண்டே எந்த அவசரமும் இல்லை என்பதால், சில இடங்களில் பைக்கை நிறுத்தி விட்டுக் கூட நின்று அந்த அருமையான இயற்கைக் காட்சிகளை ரசித்துக் கொண்டு போய்க் கொண்டிருந்தான்.

அந்த ஊருக்குப் போகிற பாதையில் பாதி தொலைவை கடந்திருப்பான். செல்ஃபோன் அடித்தது வண்டியை ஒரு ஓரமாக நிறுத்தி விட்டு செல்ஃபோனை எடுத்துப் பேசினான்.

"என்ன! சார் கிளம்பிட்டீங்களா" என்ற அந்த கம்பெனியினுடைய மேனேஜர் அந்தப் பக்கமாக இருந்து பேசினார்.

மணியைப் பார்த்தான். எட்டரை மணிதான் ஆகியிருந்தது. எட்டரைமணிக்கே கூப்பிடுகிறாரே என்று ஆச்சரியப்பட்டான்.

"என்ன சார் எட்டரை மணிக்கே கூப்பிடறான்னு நினைக்கறீங்களா? தனியார் கம்பெனின்னா அப்படித்தான் சார். நேரங்காலம் பாக்காம வேலை செய்யணும். நீங்க இங்க வரும் பொழுதே அதுக்கு மனசை தயார் பண்ணிட்டு வாங்க" என்றார் அந்த மேனேஜர்.

" சரிசார்! அதெல்லாம் ஒன்றும் கஷ்டம் இல்ல தாராளமாக செய்யலாம்" என்று சிரித்தான். மேலும் ஒன்றிரண்டு வார்த்தைகள் பேசிவிட்டு செல்ஃபோனை ஆஃப் செய்தான்.

மேனேஜர் என்னதான் பயமுறுத்தினாலும் அவனுக்குத் தெரியும். அவனுடைய வேலைநேரம் குறிப்பிட்ட நேரம்தான் என்பது. அதனால் அதைப்பற்றி அவன் ஒன்றும் அலட்டிக் கொள்ளவில்லை.

அவனுக்குத் தோன்றியது. "இந்த பயணம் மிக அழகாக இருக்கிறது. இந்த பயணத்தின் முடிவில் அந்த ஊரும் அழகாக இருந்தால் மிக நன்றாக இருக்குமே" என்று தோன்றியது.

உடனேயே அவன் மனசு அவனை கேலி செய்தது.

"என்ன நீ கூட, அழகைப் பத்தியெல்லாம் யோசிக்க ஆரம்பிச்சுட்டே" என்று ஏனென்றால் அழகு என்பது பற்றி அவனுக்கு நிறைய கருத்துகள் இருந்தன.

அழகு என்பது பற்றிய அவனுடைய கருத்துக்களைப் புரட்டிப் போடவும், மாற்றுவதற்கான முயற்சிகளும் தான், போகிற இந்த ஊரிலே நடைபெறப்

போகிறது என்பது அவனுக்கு தெரிந்திருக்கவில்லை - தெரிந்திருந்தால் மட்டும் என்ன - அவன் அதைப்பற்றி பெரிதாக கவலைப்பட்டு இருக்க மாட்டான்.

''ஓ.கோ... வாழ்க்கை சுவாரஸ்யமாகத்தான் இருக்கும் போலிருக்கிறது.'' என்று எண்ணிக் கொள்வான். ''பார்ப்போம் ஒரு கை!'' என்றுதான் எண்ணிக் கொள்வான். வாழ்க்கை சுவாரஸ்யமாகவா இருக்கப் போகிறது? பார்க்கலாம்.

''அதோ, லட்சுமிபுரம்!'' ஊர்ப் பெயரின் பலகை தெரிகிறது. அவனது வண்டி அந்த ஊருக்குள்ளே நுழைந்தது.



## 2

''ரமணன்! நல்லபெயர்!'' என்று பாராட்டினார் மேனேஜர்.

ரமணன் புன்னகையுடன் அந்த பாராட்டை அங்கீகரித்துக் கொண்டான்.

''அது..! எங்க அப்பாவுக்கு ரமணமகரிஷியை ரொம்பப் பிடிக்கும். அவருடைய புத்தகங்களை விரும்பிப் படிப்பாரு. அதனால ரமணன் அப்படின்னு பெயர் வைச்சுட்டாரு'' என்று சொன்னான்.

''ஓ.கோ... அப்படியா! அதான் நீங்களும் வித்தியாசமான ஆளா இருக்கீங்க'' என்றார் மேனேஜர்.

''தேங்க்யூ சார். ஆனா ஒரே நாள்ல என்ன வித்தியாசம் கண்டுபிடிச்சீங்கன்னு தெரியல'' என்று சிரித்தான்.

''ஒரு நாள் வேண்டியது இல்லப்பா. ஒரு அரைமணி நேரம் ஒருத்தரோட உட்கார்ந்து பேசினாலே அவங்க வித்தியாசமானவங்களா இல்லையா அப்படிங்கிறதை கண்டுபிடிச்சிர்லாம்'' என்றார் மேனேஜர் ரங்கநாதன்.

''ஓ...கே... சார். நல்லது சார்'' என்றான் ரமணன். விஷயத்துக்கு வருவோமா என்பது போன்ற அந்த ஓ.கே.வை மேனேஜரும் புரிந்து கொண்டார்.

''சரிப்பா, நம்ம சீனியர் சயின்டிஸ்க்கிட்ட உன்னை கூட்டிட்டுப் போறேன். இன்ட்ரொட்யூஸ் பண்ணிவிட்டுடறேன். அவர் என்ன விஷயம் சொல்றார்னு நல்லா வாங்கிக்குங்க. கொஞ்ச நாளைக்கு அவருக்கு கீழே உங்களுக்கு ட்ரெயினிங். அதுக்கப்புறமா நீங்க தனியா விஷயங்களை ஹேண்டில் பண்ணலாம்'' என்றார்.

''சரிங்க சார்!'' என்றான் மகிழ்ச்சியுடன்.

அந்த அலுவலகம் - அலுவலகம் என்பதை விட அது ஒரு ஆய்வகம் என்று சொல்ல வேண்டும். தனியார் கூட இப்படி ஆய்வகம் அமைப்பார்களா, என்கிற கேள்விக்கு விடை போல, ஒரு மிகப்பெரிய தொழில் குடும்பத்தினர் இந்த ஆய்வகத்தை அமைத்திருந்தார்கள். அவர்கள் வேறு வேறு தொழிலில் முதலீடு செய்திருந்தார்கள். அவர்களுக்கு வேறு வேறு வகையில் பணம் வந்து கொண்டிருந்தது.

அதே சமயத்தில் இன்னொரு புறத்தில் சமுதாயத்திற்குத் தேவையான சில விஷயங்களையும் அவர்கள் செய்து கொண்டிருந்தார்கள். அதிலே ஒன்றுதான் இந்த ஆய்வகம்.



இந்தியாவின் மரபு சார்ந்த விஷயங்களையும், மேன்மை பற்றியும் அவைகளை எப்படி நீண்ட காலத்திற்கு ஏற்றபடி பயன்படுத்த முடியும் என்பது பற்றியும் பல் வேறு விதமான ஆய்வுகளை மேற்கொண்டு இருந்தார்கள்.

ஒரு அரசாங்கம் செலவு செய்து அமைக்கக் கூடிய அளவிற்கு மிகப் பெரிய ஆய்வுக்கூடங்களை அமைத்திருந்தனர். நல்ல திறமையான இளைஞர்களை, நல்ல சம்பளம் கொடுத்து ஈர்த்து. அவர்களுக்கு சுதந்திரமும் கொடுத்து அவர்களுடைய திறமைகளையும் பயன்படுத்திக் கொண்டார்கள்.

கோவையில் மிகப் பெரிய அளவில் புகழ் பெற்றது அந்த தொழில் குடும்பம். சொல்லப்போனால் அரசாங்கத்தின் மிகப்பெரிய அங்கமாகக் கூட அது இருந்ததாக சொல்லலாம். அந்தத் தொழில் குடும்பத்தினருடைய கருத்துக்கு அது எந்தக் கட்சி அரசாங்கமாக இருந்தாலும் மதிப்புக் கொடுத்து ஆக வேண்டும் என்கின்ற நிலைமையும் இருந்தது. ஏனென்றால் அவர்கள் சொல்லக்கூடிய விஷயங்கள் ஏதோ ஒரு கட்டத்தில் உண்மையாக மாறிக்கொண்டு இருந்ததை அரசாங்கம் உணர்ந்து தான் இருந்தது.

வெறுமனே சொல்லிக் கொண்டு இருக்காமல் அவர்கள் தங்கள் பங்கிற்கு செலவு செய்து முயற்சிகளை மேற்கொள்ளுவதும் உண்டு என்பதால் அரசாங்கம் அவர்களை நன்றாக போற்றிதான் வைத்துக் கொள்ள வேண்டியிருந்தது.

சொல்வது யாருக்கும் எளிது என்ற கருத்தை அவர்கள் புரிந்து கொண்டு அதற்கு ஏற்ப தங்களுடைய பாணியை அமைத்துக் கொண்டார்கள்.

அன்று முழுவதும் அந்த ஆய்வகத்தினுடைய முக்கியமான அதிகாரிகளை சந்தித்து அவர்களிடம் முக்கியமான விஷயங்களை தெரிந்து கொள்வதற்கே ரமணனுக்கு நேரம் சரியாக இருந்தது.

மேல்மட்டத்தில் பணியாற்றக் கூடிய அதிகாரிகளுக்கு என்று அங்கு ஒரு மெஸ் இருந்தது. அதிலே நல்ல சரிவிகித உணவைக் கூட அளித்தார்கள்.

மேனேஜருடைய உதவியாளர் அன்றைக்கு அவனுடன் கூட இருந்தார்.

''சார்! நீங்க உணவைப் பத்தி கவலைப்பட வேண்டிய அவசியம் இல்லை சார். இங்கேயே உங்களுக்கு நல்ல உணவு கிடைக்கும். காலை டிபன் கூட நேரத்துக்கு வந்தால் இங்கேயே சாப்பிட்டுக்கலாம். அதைப் போலவே நைட்டுக்கு மட்டும் ஏதாவது நீங்க பாத்துக்க வேணும். அதுவும் கூட இங்கிருந்து நேரம் கழிச்சு போனீங்கன்னா இங்கேயே சாப்பிட்டுக்கலாம்'' என்றார்.

ரமணனுக்கு மிகவும் சந்தோஷமாக இருந்தது. பகலுணவைத் தயார் செய்து கொண்டு வருகிற வேலை மிச்சமே என்பதே ஏதோ மிகப்பெரிய சுமை இறங்கினாற் போல இருந்தது.

அவனுக்கு சமையல் ஓரளவுக்குத் தெரியும். நன்றாக செய்வான். அதிலும் பெரிய சுவை வேண்டும் என்கிற எதிர்பார்ப்பு இல்லை. அளவான சுவை இருந்தால் போதும் என்று நினைப்பான். அதனால் அவனுக்கு சமையல் செய்வது கடினம் இல்லை. என்றாலும் கூட அதற்காக நேரம் ஒதுக்க வேண்டி இருக்கும். அந்த நேரத்தை வேறு ஏதாவது காரியங்களில் செலவிடலாமே தன் ஒருவனுக்காக சமைக்க வேண்டுமே என்றெல்லாம் கவலைகள் இருந்தது.

இப்பொழுது அந்த கவலைக்கு இடமில்லாமல் போயிற்று.

"அப்புறம் சார், இன்னொரு விஷயம் மேனேஜர் சொல்லச் சொன்னாரு" என்றார். "இப்போதைக்கு பதினைந்து நாளைக்கு கம்பெனியின் கெஸ்ட்ஹவுஸில் தங்கிக்கலாம். நல்லவேளையாக எந்த வி.ஐ.பிக்களும் வர்லை. அப்படியே வந்தாலும் கூட அவுட்ஹவுஸ்க்குப் போய்விடலாம் பிரச்சினையில்லை. ஆனால் பதினைந்து நாட்களுக்குப் பிறகு நீங்கள் ஏதாவது இருப்பிடம் தேடிக்கொள்ள வேண்டும் என்று நினைக்கிறேன். குவார்ட்டர்ஸ் இருக்கு. ஆனா தற்போதைக்கு காலி எதுவும் இல்லை. ஒருவேளை ஏதாவது காலியானால் கொடுப்பார்கள்" என்றார் அந்த மேனேஜரின் உதவியாளர்.

ரமணனுக்கு அடுத்த விஷயமும் திருப்தியாகப் போனது.

'அப்பாடா... பதினைந்து நாட்களுக்குக் கவலையில்லை. பதினைந்து நாட்களுக்குள் இந்த ஊரில் ஒரு வீடு பிடிக்க முடியாமலா போய்விடும்' என்று எண்ணிக் கொண்டான்.

"ரொம்ப தேங்ஸ் சார்! உடனடியா என்ன பண்றதுன்னு யோசிச்சுட்டு இருக்கேன். பதினைந்து நாட்கள் டைம் கொடுக்கிறீங்களே... போதும். போதும். அதுக்குள்ளே கண்டிப்பா வீடு புடிச்சிருவேன்" என்றான்.

மேனேஜரின் உதவியாளர் சிரித்தார்.

"எதுக்கு சார் சிரிக்கிறீங்க?"

"பரவாயில்லை சார். நானும் வந்ததிலிருந்து பார்த்துட்டு இருக்கேன். நீங்க எல்லா விஷயத்தையுமே லைட்டா எடுத்துக்கறீங்க. பாஸிட்டிவா எடுத்துக்கிறீங்க" என்றார்.

ரமணன் சிரித்தான்.

"அது எங்க அப்பாக்கிட்டே கத்துக்கிட்ட பாடம் சார். எந்த விஷயத்துக்காகவும் ஃபீல் பண்றதனாலேயோ அல்லது அதை தீவிரமாக எடுத்துக் கொண்டு எப்படிடா என்று மலைப்பதனாலேயோ விஷயங்கள் முடிந்துவிடுமா என்ன? பொறுமையாகக் கையாள வேண்டியதுதான் அப்படீம்பார்" என்றான்.

"தட்ஸ் ரியலி குட்!" என்றார் அவர்.

மாலை வரையிலும் அன்றைக்கு அவனுக்கு அறிமுகங்களும் வேலையைப் புரிந்து கொள்வதற்கான விஷயங்களுமாக ஓடியது.

மாலையில் தன்னுடைய ஒரே ஒரு சூட்கேஸை எடுத்துக் கொண்டு பைக்கையும் எடுத்துக்கொண்டு கெஸ்ட்ஹவுஸ் எங்கே இருக்கிறது என்று விசாரித்துக் கொண்டு அப்படியே வெளியே வந்தான்.

வெளியே வந்தவுடன் அவனுக்கு ஒரு ஆச்சரியம் காத்திருந்தது.

முன்னாலே இருந்த கூர்க்கா "சார் உங்களுக்காக யாரோ காத்துகிட்டிருக்காங்க" என்றான்.

நமக்காகவா! என்று வியப்பு.

அங்கே ஒரு வரவேற்பறை இருந்தது. அதில் பெரிய காம்பவுண்டின் நுழைவாயிலுக்கு பக்கத்திலேயே ஒரு கூடாரம் போல அமைத்து இருந்தார்கள்.

அங்கே போய் பார்த்தான். இரண்டு பேர் அவனுக்காக காத்திருந்தார்கள். அதிலே ஒருவர் ஆண். ஆண் சற்று வயதானவர். அவர்களை எங்கோ பார்த்த மாதிரி இருந்தது.



நமது வீட்டுக்கு வந்திருக்காரோ என்று கூடத் தோன்றியது.

தயங்கியபடியே போய் "நீங்க.. நீங்க..." என்று இழுத்தான்.

"என்னப்பா இப்படிக் கேக்கறே! என்னைத் தெரியல? நான் உன்னோட அண்ணாமலை மாமா. உங்க அம்மாவோட க்ளோஸ் ரிலேட்டிவ்ப்பா. பாரு! காலம் எப்படி இருக்குன்னு பாரு. நீங்க... நீங்க...ன்னு தடுமாற்ற நிலைமையில் இருக்கு."

"ஓ அண்ணாமலை மாமாவா நீங்க. சாரி சாரி. நான் அடிக்கடி வெளியூர் போயிடறதால நான் நிறைய உறவுகாரர்களையே பார்த்தது இல்லை. ஒண்ணு ரெண்டு முறை நீங்க வீட்டுக்கு வந்திருக்கும் போது பார்த்து இருக்கிறேன். ஆனா இன்னாருன்னு தெரியல. சாரி மாமா சாரி" என்றான்.

"பரவாயில்லை. பரவாயில்லை. அதனால ஒண்ணும் தப்பில்லை. இந்தக் காலத்து கொழந்தைங்க எல்லாம் படிப்பு படிப்பு மத்த விஷயங்கள்ன்னு அலைஞ்சிட்டு இருக்கீங்க! உங்களைச் சொல்லிக் குத்தமில்லை" என்று சமாதானம் போல் சொல்லிக் கொண்டவர் திரும்பி தன் அருகிலே நின்ற பெண்ணைப் பார்த்தார்.

இளம்பெண் மிக அழகாக இருந்தாள். சுறுசுறுப்பாக இருந்தாள். சுடிதாரில் நிலை கொல்லாதவள் போல உடம்பை அசைத்துக் கொண்டு ஒருவிதமான சிரிப்போடு அவனைப் பார்த்தாள்.

"இது நம்ம பொண்ணு! பானுமதி" என்று மகிழ்ச்சியாக அறிமுகப் படுத்தினார் அண்ணாமலை.

"அப்படிங்களா! வணக்கங்க!" என்றான் ரமணன்

"வணக்கம் அத்தான்!" என்றாள் பானுமதி. அந்த அத்தான் என்ற வார்த்தை ரமணனை கொஞ்சம் லேசாக அசைத்துப் பார்த்தது.

"என்னப்பா முழிக்கிறே! நீ அத்தான் முறைதான் அவளுக்கு. உங்க அம்மா எனக்கு தங்கச்சியில்ல? அப்போ நீ அத்தை மகன் இல்ல? அதான் அத்தான்ங்கறா" என்றார்.

"ஓகோ..!" என்று அவன் அசடுவழிய சிரித்துவிட்டு "அப்புறம்... உட்காருங்க" என்றான்.

"நான் இங்க இன்னைக்குத் தான் சயின்ட்டிஸ்ட்டா ஜாயின் பண்ணியிருக்கேன். இங்க காபி டீ ஃபெஸிலிட்டி இருக்கான்னு தெரியலயே..." என்று அவன் இழுக்க.

"அதெல்லாம் ஒண்ணும் வேண்டாம். நான் இப்போ எதுக்கு வந்துருக்கேன்னு தெரியுமா?" என்றார்.

"சொல்லுங்க மாமா!" என்றான்.

"இப்போ பெட்டியோட எங்கே கிளம்புற?" என்றார்.

"இல்ல மாமா. கம்பெனியிலேயே கெஸ்ட்ஹவுஸ் கொடுத்துருக்காங்க. ஒரு பதினைந்து நாளைக்கு அந்த கெஸ்ட்ஹவுஸ்லேயே தங்கிக்கலாம்னு சொல்லியிருக்காங்க" என்றான்.

"ஓ...!" என்று கொஞ்சம் அயர்ந்து போனார் அண்ணாமலை. பிறகு "ம்... எதுக்கப்பா கெஸ்ட்ஹவுஸ்லே தங்கணும்! நீ நேரா கிளம்பு. நம்ம வீட்டுக்கு வா.

உன்னை நான் அங்க அழைச்சிட்டு போகணும்னுதான் வந்தேன். அழைச்சிட்டு போகலைன்னு வைச்சுக்கோ... உங்க அத்தை கண்ணம்மா என்னை உண்டு இல்லைன்னு பண்ணிடுவா! 'இவர் ஏதாவது சொதப்பி வைச்சுருவாரு. நீ போய் சொல்லிக் கூட்டிட்டு வா என்ன!' என்று சொல்லித்தான் பானுமதியையே அனுப்பி வைச்சருக்கா'' என்றார்.

ரமணன் சிரித்தான். ''இல்ல மாமா... அவுங்க எனக்கு இடம் அலாட் பண்ணிட்டாங்க. வந்த முதல்நாளே நான் அங்க போகலைன்னா நல்லாயிருக்காதே மாமா! ஒண்ணு செய்யறேன். நான் இன்னைக்கு அங்க தங்கிக்கறேன். நாளைக்கு வந்துடறேனே. வந்துட்டு ஒரு நாளைக்கு இருந்துட்டு வரேன். அல்லது ஞாயிற்றுக்கிழமை அப்படி வரட்டுமா'' என்றான்.

''அதெல்லாம் ஒண்ணும் சரிப்படாது. நீ பெட்டியை எடுத்துட்டு வா! இந்தா நம்ம கார் இருக்கு. பெட்டியை கார்ல வை. பின்னாடி பைக்குலேயே வா'' என்றார்.

அங்கே நின்று விவாதம் வைத்துக் கொள்ள வேண்டாம் என்று அவன் கிளம்பினான்.

காம்பௌண்டை விட்டு வெளியே வந்த உடனேயே சொல்லிவிட்டான்.

''மாமா தயவுசெய்து கோபிச்சுக்காதீங்க. நா வந்து உங்களுடைய வீட்டை பார்த்துக்கறேன். கொஞ்சம் இருந்துட்டு கண்டிப்பா நா கெஸ்ட்ஹவுஸுக்குப் போயிடறேன். அதற்குப்பிறகு எப்ப நேரம் கிடைக்குதோ - அல்லது இந்த பதினைந்து நாளைக்குப் பிறகு கண்டிப்பாக ஏதாவது ஏற்பாடு செய்துக்கலாம்'' என்றான்.

அண்ணாமலைக்கும் வேறு வழி இருக்கவில்லை, ஏற்றுக்கொண்டார்.

அந்த வீட்டிற்குப் போய் சேர்ந்தார்கள். வீடு என்று சொல்லக் கூடாது. மிகப்பெரிய பங்களா என்று தான் சொல்ல வேண்டும். சுற்றுப் புறம் முழுக்க கிட்டதட்ட ஒரு அறை அல்லது ஒரு ஏக்கரில் அந்த பங்களாவை வளைத்துப் போட்டிருந்தார் அண்ணாமலை.

உள்ளே நுழைந்தவுடனேயே வலது புறமும் இடதுபுறமுமாக மிக அழகான செடிகொடிகள் இருந்தன. முன்புறத்தில்கூட பெரிய காய்கறித் தோட்டம் இருந்தது. பங்களாவும் நல்ல விசாலமான பங்களாவாக இருந்தது.

இவர்கள் உள்ளே நுழைந்தவுடனேயே தெரிந்ததோ என்னமோ அல்லது காரில் இருந்தே மனைவிக்கு சொல்லியிருப்பாரோ என்னமோ மனைவி கண்ணம்மாள் தயாராக நின்று கொண்டிருந்தாள்.

''வாப்பா! வா வா! உன்னைப் பார்த்து எவ்வளவு நாளு ஆச்சு! சின்னப் பையனா இருக்கிறப்போ பார்த்தது. நாங்க வரப்போ நீ இருக்கறது இல்ல. எங்கயோ வெளி வேலையா போயிடறதா சொன்னாங்க! பாத்தியா சொந்தம் விட்டுப் போகலை. கடவுள் உன்னை இங்கயே கொண்டு வந்து சேர்த்திருக்காரு'' என்று மகிழ்ச்சியாக வரவேற்றார்.

ரமணனுக்கு கொஞ்சம் கூச்சமாக இருந்தது. - என்னது இது. தன்னுடைய வருகையை இவ்வளவு தடபுடல் படுத்துகிறார்களே என்று.

''பரவாயில்லைங்க அத்தை!'' என்று உள்ளே போனான்.

உள்ளே காலை எடுத்து வைக்கும் போதே - ஏனோ தெரியவில்லை



அவனுக்கு ஒரு பெரிய வலைக்குள்ளே தான் சிக்கிக் கொள்கிறாற் போல் ஓர் எண்ணம் தோன்றியது.

''என்னத்தான் தயங்குறீங்க? வாங்க வாங்க! நாங்க உங்களை அப்படியெல்லாம் விட்றமாட்டோம். உள்ள வந்துதான் ஆகணும்'' என்று கலகலவென்று சிரித்தாள் பானுமதி.

சிந்தனையோடுதான் உள்ளே காலை எடுத்து வைத்தான் ரமணன்.



3

விருந்தினர் மாளிகை!

மாளிகை என்றுதான் சொல்ல வேண்டும். ஏனென்றால் இரண்டு பெரிய பகுதிகளாக அந்த விருந்தினர் மாளிகை இருந்தது. அதிலே ஒரு பகுதியில் இவனுக்கு இடம் ஒதுக்கியிருந்தார்கள்.

எல்லா வசதிகளையும் உள்ளடக்கியதாக மூன்று பெரிய அறைகள் அதிலே இருந்தது.

ஒரு ஹால் பக்கத்தில் ஒரு பெரிய படுக்கை அறை. அது இல்லாமல் ஒரு அலுவலக அறை என்று அந்த மாளிகை அமைந்திருந்தது.

பத்து மணி ஆகிவிட்டது - அவன் அங்கு வந்து சேர. நல்ல வேளையாக பத்துமணிக்குத் தான் வரமுடியும் என்று தகவல் கொடுத்திருந்தான்.

அண்ணாமலையும் கண்ணம்மாவும் பானுமதியும், அவனை மிக, மிக அதிகமாக உபசரித்து அந்த உபசரிப்பில் குளிப்பாட்டி விட்டார்கள் என்று தான் சொல்ல வேண்டும். அவனுக்கு ஒரு அளவுக்கு மேல் எப்போதடா தப்பித்து வரலாம் என்று கூட ஆகிவிட்டது.

ஒரு வழியாக அவர்களிடம் விடைபெற்றுக் கொண்டு புறப்பட்டான். வழியில் வரும் போதுதான் தோன்றியது - இந்த பானுமதி மிகப்பெரிய தொல்லையாக இருக்கும் போல் இருக்கிறது என்று. ஏனென்றால், ''அத்தான் அத்தான்'' என்று அவன் பின்னாலேயே சுற்றி அவனை அந்த இரண்டு மூன்று மணி நேரத்துக்குள்ளாகவே படுத்தி எடுத்து விட்டாள் அந்தப் பெண்.

அண்ணாமலை அவனை உபசரித்த விதத்தைப் பார்த்தால் இவன் மனதுக்குள் ஏதோ சந்தேகம் தோன்றியது. இந்த உபசரிப்பு எல்லாம் காரணம் இல்லாமல் செய்யப்படவில்லை என்று அவனுக்குப்பட்டது.

'சரி வந்த இரண்டு மூன்று மணி நேரத்திலேயே முடிவுகள் எடுக்க வேண்டுமா என்ன? பார்க்கலாம். அவர்கள் எப்படி நடந்து கொள்கிறார்கள் என்று பார்த்துவிட்டு அதற்கு பிறகு தான் எப்படி நடந்து கொள்ளுவது என்று முடிவு செய்து கொள்ளலாம்' என்று எண்ணினான்.

விருந்தினர் மாளிகையில் தன்னுடைய பொருட்களை எல்லாம் ஒழுங்காக வைத்து விட்டு கட்டிலில் போய் காலை நீட்டி தலையணையை முட்டுக்கொடுத்து அமர்ந்தான்.

அம்மாவிடமும், அப்பாவிடமும் பேசவேண்டும். பிற்பகலில் உணவு இடைவேளையின் போது ஒரு இரண்டு நிமிடம் பேசினான். நான் நேரம்

கிடைக்கும் போது கூப்பிடுகிறேன் என்று சொன்னான்.

அண்ணாமலை வீட்டிற்குப் போனவுடனேயே ஒரு இரண்டு நிமிடம் பேசினான். அவர்கள் முன்னிலையில் பெரிதாக பேச முடியவில்லை.

இப்போது பேசிவிட வேண்டும் என்று எண்ணிக் கொண்டு போனை எடுக்கும் போதே செல்ஃபோன் சிணுங்கியது. பார்த்தான். புதிய எண். காதுக்கு செல்ஃபோனைக் கொடுத்தான். ''அத்தான் நான் தான் பானு பேசறேன்'' என்று அந்தப் பக்கம் இருந்து உற்சாகமாகக் குரல் கேட்டது.

அந்தபக்கம் இருந்த உற்சாகம் இந்தப் பக்கம் வரவில்லை. இப்போது தானே அங்கிருந்து வந்தோம். அதற்குள்ளாக இந்த பெண் அழைக்கிறதே என்று எண்ணிக் கொண்டான். மிகவும் கஷ்டப்பட்டு தன்னுடைய உற்சாகக் குறைவை அந்த பெண்ணிடம் காட்டாமல் மறைத்துக் கொண்டான்.

''சொல்லுங்க பானுமதி'' என்றான். ''என்னத்தான் பானுமதி அப்படீன்னு நீளமா கூப்புடுறீங்க பானு அப்புடின்னு கூப்பிடுங்க'' என்றாள் அவள்.

''இல்ல பரவாயில்லை நான் இப்படியே கூப்பிடறேன். கொஞ்சநாள் பழக்கம் ஆகட்டும் அப்புறம் பாக்கலாம்'' என்றான்.

அவளுக்கு அந்தபுறம் உச்சி குளிர்ந்து போனது ''ஆஹா... கொஞ்சநாள் பார்க்கலாம்... என்று சொல்கிறாரே'' என்று எண்ணிக் கொண்டாள்.

''இல்லீங்க அத்தான்... பத்திரமா போய் சேர்ந்துட்டீங்களா? கெஸ்ட்ஹவுஸ் எல்லாம் நல்லாயிருக்கா? வசதியா இருக்கா? கெஸ்ட்ஹவுஸ் நல்லாயில்லைன்னா உடனே கிளம்பி இங்கே வந்துருங்க. நமக்கு இங்க வீடு இருக்கும் போது எதுக்காகப் போய் கெஸ்ட்ஹவுஸ்ல போய் தங்கணும்?'' என்றாள்.

''இல்ல. நான் ஹையர் அஃபீஷியல்ஸ்கிட்ட சொல்லிட்டேன். பதினைந்து நாள், நான் இங்கதான் இருந்தாகணும். அதுக்கப்புறமும் கூட நான் தனியாதான் ஒரு இடம் பார்க்கணும்னு இருக்கேன். ஏன்னா நாம நினைச்ச நேரத்துக்கு வருவோம். போவோம். யாருக்கும் தொல்லை இருக்கக் கூடாது'' என்றான்.

''தொல்லையா... நம்மவீட்டுல பின்னாடி தனியா கூட ரூம் இருக்கு. வாங்க அத்தான். நீங்க அங்க கூட தங்கிக்கலாம் அப்படினு அப்பா சொல்லச் சொன்னாங்க.''

''அப்படியா? பார்க்கலாம். யோசிப்போம். இப்போதைக்கு அதைப் பத்தி என்ன?'' என்று சொன்னான்.

''அப்புறம் சாப்பாடு எல்லாம் புடிச்சுதா? எங்க வீட்டு டிபன் பிடிச்சுதா?'' என்றாள்.

''ரொம்ப நல்லாயிருந்தது ரொம்ப நல்லாயிருந்தது'' என்றான்.

''நானே சமைச்சேன்'' என்றாள் ஆர்வமாக. அவனுக்கு தெரிந்தது இந்த ஆர்வமான அறிக்கைக்கு பின்பு அவனுடைய பாராட்டுகள் வேண்டும், என்கிற வேண்டுதல் தொங்கி நிற்கிறது என்று. ''அப்படியா! ரொம்ப நல்லாயிருந்தது'' என்றான்.

உடனே அவள் ''அத்தான்... பாத்தீங்களா நான் சமையல்கூட நல்லாதான் செய்யறேன். நீங்க இங்கயே இருந்தீங்கன்னா நேரத்துக்கு சாப்பிடறதுக்கும் கொடுத்துருவேன். கொண்டுபோறதுக்கும் கூட சமைச்சுக் கொடுத்துருவேன்'' என்றாள்.

''பாக்கலாங்க பானுமதி!'' என்றான்.



## தலைமுடி பராமரிப்பு

*2. தலைமுடிக்கு சோப்பு போட்டு கழுவினால் தலைமுடி உதிரும். பொலிவையும் இழக்கச் செய்யும்.*

''அப்புறம் இன்றைக்கு நிறைய வேலையா அத்தான்?'' என்றாள்.

''ஆமாம்மா. நிறைய வேலை. அதனால கொஞ்சம் சீக்கிரம் ஓய்வு எடுக்கணும். காலையில வேற நேரத்துல கிளம்பணும்'' என்றான்.

''பேச்சை முடி'' என்கிற கருத்து அதுல இருப்பதை பானுமதி புரிந்து கொண்டாலும் - அறியாதவள் போல ''இல்ல ஃப்ரீயா இருந்தீங்கன்னா கொஞ்ச நேரம் பேசலாம்னு பார்த்தேன்'' என்றாள்.

ரமணனுக்கு இதற்குள்ளாக சலிப்பாகிவிட்டது. ஆனாலும் லகுவாக அவளை கழட்டிவிட வேண்டும் என்பதற்காக ''பேசலாம் பானுமதி, நிறைய பேசலாம். நான் இங்கதானே இருக்கப் போறேன். பேசலாம்!'' என்றான்.

அந்த பதில் அவளுக்கு கொஞ்சம் திருப்தியாக இருந்தது போலும். இங்கதான் இருக்கப்போறோம். நிறைய பேசலாம் என்றெல்லாம் சொல்றாரே என்று எண்ணிக் கொண்டு ''அப்படின்னா சரிங்கத்தான். தினமும் ஃபோன் பண்ணுங்க. வாங்க. தினமும் வந்துட்டு போங்க. இல்லைன்னா நானே அங்க புறப்பட்டு கெஸ்ட் ஹவுஸ்க்கு நேரா வந்துடுவேன்'' என்றாள்.

''ஐய்யயோ அப்படியெல்லாம் பண்ணிறாதிங்க நான் வந்துடறேன்'' என்று சொல்லிவிட்டு

''ஓ.கே... பானுமதி குட்நைட்''

அந்தப்பக்கம் ஃபோனை துண்டிக்கிறமாதிரி தெரியவில்லை. அதனால் அவனே துண்டித்துவிட்டு உடனடியாக தந்தையை அழைத்தான்.

''கண்ணா! உன் ஃபோனுக்காகத் தான் உட்கார்ந்து இருக்கோம்டா நானும். அம்மாவும்!'' என்றார் அவர் ஆர்வமாக. இவன் மனம் நெகிழ்ந்தது.

''அப்பா இன்னைக்கு நல்லாப் போச்சுப்பா. ஆபீஸ்ல மேனேஜர் மூலமா அலுவலகத்துல இருக்கிற எல்லாரையும் அறிமுகப் படுத்திக்கிட்டேன். வேலையைப் பத்தி ஒரு ஐடியா கொடுத்தாங்க. நல்லாத்தான் இருக்கும் போலிருக்கு'' என்றான்.

''அப்படியா... சரி. எனக்கென்னப்பா வேணும். எங்க போனாலும் உனக்கு பிடிச்ச வேலையாயிருந்தா சரி'' என்றார்.

''ஆமாப்பா! வேலை ரொம்ப இன்ரஸ்டிங்காதான் இருக்கும் போலிருக்கு. ஆபீஸ் அட்மாஸ்பியர் பிடிச்சிருக்கு. எல்லாரும் நல்லா படிச்சவங்களாயிருக்கிற அதனால கொஞ்சம் நாகரிகமாகத்தான் இருக்கு'' என்றான்.

''நல்லதுப்பா!'' என்றார். ''அப்பா! சாயங்காலமே அந்த அண்ணாமலையும், அவருடைய பொண்ணும் வந்துட்டாங்க'' என்றான்.

அப்பா அந்தப்பக்கம் கலகலவென்று சிரித்தார். ''வந்துட்டாங்களா?

நெனைச்சேன். உங்க அம்மா ரொம்ப ஆசையா சொன்னான்னுதான் ஃபோன் பண்ணி சொன்னேன். ஏம்பா தொல்லையா இருக்கா இல்லை உதவியா இருக்கா?'' என்றார்.

''எப்படி சொல்றதுன்னு தெரியலைப்பா. தொல்லை மாதிரிதான் தெரியுது ஏன்னா ஆபீஸ்க்கு வந்து உடனே வரணும்னு அழைச்சுட்டு போனாங்க. அங்க போனா உபசரிப்போ... உபசரிப்பு. அம்மா, அப்பா, மகள் மூன்றுபேரும் உபசரிப்பில் போட்டு என்னை குளிப்பாட்டிட்டாங்க'' என்று சிரித்தான்.

''அங்க அப்படியொரு குடும்பம் இருக்கறது நல்லதுதானப்பா'' என்றார்.

''இல்லப்பா. இது எவ்வளவு தூரம் நல்லதுன்னுத் தெரியல. ஏன்னா தினமும் வாங்கங்கறாங்க அந்த பொண்ணு வேற ரொம்ப உபசரிக்குது. எனக்கு என்னவோ கொஞ்சம் விலகி இருப்பது நல்லதுதான்னு தோணுது'' என்றான்.

அப்பா மறுபடியும் சிரித்தார். ''கரெக்டா பாய்ண்டை புடிச்சுட்டியேப்பா. உங்க அம்மாவுக்குத்தான் தெரியுமே! எப்படா உனக்கு கழுத்துல ஒரு கட்டுப்போட்டு உன்னை கல்யாண பந்தத்துல சிக்க வைக்கலாம் அப்படிங்கிற ஆசைலதான் இருக்கா. அந்த பொண்ணு நல்லாதானே இருக்கு; அதனால ஒரு எண்ணம் இருக்குமோ என்னவோ'' என்றார்.

''அப்பா தயவுசெய்து புரிஞ்சுக்குங்க. நான் இன்னும் கொறைஞ்சது இரண்டு வருஷமாவது கல்யாணம் பண்ற மாதிரி இல்ல. அதுலயும் என்னுடைய விருப்பு வெறுப்புக்கு ஏற்றமாதிரி பெண் கிடைச்சாதான் பண்ணுவேன்.''

''நான் இப்பவே சனி, ஞாயிறுல வெளிய போனா சங்கடப்படறீங்க இப்படியிருக்கும் போது வர்றவ அதுக்கு மேல சங்கடப்படுவா. கல்யாணம் பண்ணிக்கலைன்னு சொல்லலை. பண்ணிக்கறேன். ஆனா எனக்கு இரண்டு வருடம் கழித்து பெண் பார்த்தாப் போதும்'' என்றான்.

அப்பா மறுபடியும் சிரித்தார்.

''சரிப்பா விடு...! நாகரிகமா எப்படி நடந்துக்கணுமோ நடந்து - எந்த அளவு வெச்சுக்கணுமோ பாத்துக்க. அவ்வளவுதான். அது உனக்குத் தெரியாதா என்ன'' என்றார்.

''எனக்குத் தெரியும்பா. அவங்களுக்குத் தெரியணுமில்ல. பாருங்க பத்துமணிக்கு அந்த பொண்ணு ஃபோன் பண்ணிருச்சு. ஃபோன் பண்ணி தூங்கினீங்களா சாப்பிட்டிங்களான்னு ஒரு நாளுல இவ்வளவு உபசரிப்புங்கறதுனால நாளைக்கு ஏதாவது பிரச்சனைகள் வராம இருக்கணும்னு தோணுதுப்பா. கொஞ்சம் தயவுசெய்து எப்படியாவது அவுங்களை கொஞ்சம் கட்டுப்படுத்தினீங்கன்னா பரவாயில்லையின்னு தோணுது'' என்றான்.

''இல்லப்பா. எடுத்தவுடனேயே இது பற்றி எதுவும் சொல்ல வேண்டாம். கொஞ்சம் வேலையிருக்கற மாதிரி அவுங்கக்கிட்ட சிக்காம இரு. மூணு நாலு நாள் போயிட்டு அப்புறம் வேலையிருக்கிற மாதிரி கொஞ்சம் தூரம் வைச்சுக்க அதுக்கப்புறம் என்ன செய்யறதுனு பாக்கலாம்'' என்றார்.

''ஆமாம்பா! அப்படித்தான் செய்யணும் எதுக்கும் அம்மாகிட்டயு சொல்லிருங்க. இந்த மாதிரி கருத்துக்கள் எதுவும் அந்த குடும்பத்துக்கு கொடுத்துராதீங்க. ஏன்னா அவுங்க அந்த எதிர்பார்ப்போடு பழகினாங்கன்னா



எனக்கு நாளைக்கு மறுக்கிறதுங்கிறது ரொம்ப கஷ்டமா போயிடும்'' என்றான்.

''அது உண்மைதான்பா!'' என்றார்.

''அப்புறம் அம்மாகிட்ட கொடுங்கப்பா பேசணும்'' என்று தாயிடமும் பேசினான்.

''அம்மா எதுக்கும் கவலைப் படாதீங்க. இங்க அருமையான தங்குமிடம், பக்கத்திலேயே வீடுகளும் இருக்கு. நல்ல சாப்பாடு கிடைக்கிறது. இங்க இருக்கக்கூடிய ஆஃபீஸர்ஸ் எல்லாம் நல்லவங்களா இருக்காங்க. எல்லாம் நல்லா இருக்கு. கவலைப்படாதீங்க. என் உடம்பை பாத்துக்கறேன்'' என்று சொன்னான்.

ஒரு தாய்க்கு எதைச் சொன்னால் மனம் குளிருமோ அதை அவளிடத்திலே சொல்லி தாயின் மனதை குளிரவைத்தான்.

''சரிப்பா!'' என்று அவன் சொல்லச் சொல்ல உற்சாகமாக கேட்டுக்கொண்டாள். பிறகு ''அப்புறம் அண்ணாமலை அண்ணன் வந்தாரா?''

''ஆமாம்மா. அண்ணாமலை அண்ணன் வந்து...!'' என்று இவன் சிரித்து விட்டு ''உங்க அண்ணாமலை அண்ணன் வந்து கையோட என்னை இழுத்துட்டுப் போயி அவுங்க வீட்டுல உபசரித்து, உபசரித்து என்னை ரொம்ப கஷ்டப்படுத்திட்டாங்க'' என்று சிரித்தான்.

''ஆமா சிலநேரத்துலப்பா அன்புத் தொல்லைன்னு சொல்லுவாங்கயில்ல அதுமாதிரி'' என்றாள்.

''அம்மா அம்மா இந்த அன்புத் தொல்லை ரொம்பத் தொல்லைம்மா'' என்று மறுபடியும் சிரித்தான் ரமணன்.

'''அம்மா இன்னொரு முக்கியமான விஷயம் அப்பாக்கிட்ட சொல்லியிருக்கேன். நீயும் புரிஞ்சுக்கோ. இங்க இருக்கற எந்த உறவுக்காரங்ககிட்டயும் இந்த கல்யாணக் கருத்தெல்லாம் கொடுத்துறாதீங்க. ஏன்னா எனக்கு எந்த ஐடியாவும் இல்லை. நான் கொறஞ்சது இரண்டு வருஷம் குறையாம கல்யாணம் பண்ணிக்கறதா இல்ல'' என்றான்.

''சரிப்பா சரி! அத பாத்துக்கலாம். இல்ல அவுங்க அப்படி ஒரு நெனப்புல பண்ணிருப்பாங்கனு சொல்லியிருக்க முடியாது. ரொம்ப நாள் கழிச்சு அந்த ஊருக்குப் போயிருக்கே அதனால, அதுக்குத் தகுந்த மாதிரி நாங்களும் சொல்லிக்கறோம்பா'' என்றார்.

மேலும் சற்று நேரம் ''அப்பா, இன்னைக்கு என்ன பண்ணினீங்க'' என்றெல்லாம் அப்பாவிடம் பேசினான்...

''நீ இல்லாம போரடிச்சதுப்பா'' என்று அப்பாவிடம் ''பாக்கலாம்பா ஒரு மாசம் இரண்டு மாசம் பாத்துட்டு நீங்க கூட இங்க வந்துடலாம்பா, அதுக்கேத்தமாதிரி ஏதாவது ஏற்பாடு செஞ்சுக்கலாம்'' என்றான்.

''ஆமாப்பா! அப்படிக்கூட செஞ்சுக்கலாம்'' என்றார் அப்பா உற்சாகமாக. மேலும் சற்று நேரம் தாயிடம் பேசிவிட்டு ஃபோனை ஆஃப் செய்தான்.

ஒரு அளவிற்கு மனது நிறைவாகத்தான் இருந்தது. முதல் நாள் வேலை நன்றாகத்தான் இருந்தது என்று எண்ணிக் கொண்டான். அடுத்த நாள் அலுவலகத்தில் செய்ய வேண்டிய விஷயங்கள் என்ன என்று யோசித்துக்கொண்டு இருந்தான். அந்த நேரத்தில் மறுபடியும் ஃபோன் அடித்தது. ஃபோனை எடுத்தான். அதற்குள் அழைப்பு துண்டிக்கப் பட்டு விட்டது.

யார் கூப்பிட்டிருக்கறார்கள் என்று பார்த்து விட்டு, அந்த எண்ணுக்கு இவன்

அழைத்தான்.

ம்...! அழைத்த உடனேயே அந்தப்பக்கம் ஹலோ! என்று இனிமையான குரல் கேட்டது. இவன் அந்த குரலின் இனிமையில் ஒரு கணம் அமைதியாகி விட்டான். இவ்வளவு இனிமையான குரலா..! என்று தோன்றியது "ஹலோ! அந்த பக்கம் இருந்து ஃபோன் வந்திருந்தது. அதான் யாருன்னு தெரிஞ்சுக்கலாம்னு நீங்க யாருங்க?" என்று கேட்டான்.

"நான் சுரபி பேசறேன். நீங்க ரமணனா?" என்றது அந்த குரல். சுரபி என்னும் பெயர் புதுமையாகவும் அழகாகவும் இருக்கிறது என்று எண்ணம் தோன்ற-

"ஆமா! இது யாரு வீடுங்க?" என்று கேட்டான்.

"இது மயில்வாகனன் ஐயா வீடுங்க" என்றாள் அந்த பெண். பிறகு "ஒரு நிமிடம்" என்று மயில்வாகனன் என்பவரிடம் ஃபோனை கொடுத்தாள்.

"தம்பி நான் மயில்வாகனன் பேசறேன்ப்பா! உங்க அப்பா ஈஸ்வர மூர்த்திக்கும் உங்களுக்கும் நான் தூரத்து உறவு. நீங்க இந்த ஊருக்கு வேலைக்கு வந்திருக்கறதா சொன்னாங்க. காலையில இருந்து உங்களை தொடர்பு கொள்ள முயற்சி பண்றேன். கிடைக்கல. அதனாலதான் இந்த நேரத்துல கூப்பிட்டேன். உங்களுக்கு என்ன உதவி வேணும்னாலும் இந்த நம்பருக்கு ஃபோன் பண்ணுங்க. எங்க தகுதிக்கு முடிஞ்ச உதவிய நான் உங்களுக்கு செய்யறேன்" என்று சொன்னார்.

"அப்படிங்களா ரொம்ப நன்றீங்க ஐயா! தேவைப்பட்டால் மறுபடியும் உங்களை தொடர்பு கொள்ளுகிறேன்" என்று சொன்னான்.

உள்ளே மனதில் தோன்றியது. கொஞ்ச நேரத்திற்கு முன்பாக ஒரு பெண் ஃபோனை எடுத்து பேசினாங்களே அவுங்க யார்? என்று கேட்க வேண்டும் போல் தோன்றியது. அதற்குள்ளாக அவரே தம்பி "ஒரு நிமிஷம் எம் பொண்ணு சுரபி பேசணுமாம் உங்ககிட்ட" என்று கொடுத்தார்.

கொடுத்த உடனேயே சுரபி என்கிற அந்த பெண் "சார். நீங்க சுற்றுப்புறச் சூழல் இயக்கத்துல இருக்கிற ரமணனா?" என்று கேட்டாள்.

"ஆமாம்!" என்றான் அவன். அதற்கு பின் அந்த பெண் பேசிய விஷயங்களெல்லாம் தேனைப் போல அவன் காதுகளிலே பாய்ந்தது.



4

பதினைந்து நாட்கள் ஓடியிருந்தது. ரமணன் அலுவலக வேலைகளில் ஒன்றிவிட்டான். இப்போது கூட முக்கியமான ஃபைலை முடித்துவிட்டு மேனேஜரிடம் அது சம்பந்தமாக பேசிவிட்டு அமர்ந்திருந்தான்.

இந்த பதினைந்து நாட்களில் பானுமதி வீட்டுக்கு ஒன்று இரண்டு முறைதான் போய்வந்தான். எப்படியோ அவள் வீட்டிற்குப் போவதை அது. இது என்று எதையோ ஒரு காரணத்தைச் சொல்லி தவிர்த்துவிட்டான்.

ஒரு நாள் அப்பா அவனை அழைத்து "வரவேயில்லை என்று சங்கடப்படுறாங்கடா. ஒரேடியா போகாம இருக்க வேண்டாம். ஏதோ ஒரு நாள் இடையில் போய் தலையை காமிச்சுட்டு வா" என்று சொன்னார். அதனால் மறுக்க முடியாமல் அவர்கள் வீட்டிற்கு வாரத்திற்கு ஒருநாள் என்று கணக்கு செய்து போய்விட்டு வந்தான்.

ஏனோ தெரியவில்லை பானுமதியும் மேலே விழுந்து பிடுங்கி எடுப்பதை தவிர்த்திருந்தாள். அப்பா ஏதோ சொல்லியிருக்கிறார். நன்றாகத் தான் சொல்லியிருக்கிறார் போலும் என்று எண்ணிக் கொண்டான்.

அதே சமயத்தில் பானுமதி சுத்தமாக விலகி விடவும் இல்லை. அவனிடத்தில் நன்றாகவே பேசினாள். கலகலப்பாகவே பேசினாள். ஆனால் தினமும் ஃபோன் செய்வதை இரவு நேரங்களில் கூட ஃபோன் செய்து அறுத்துத் தள்ளுவதை நிறுத்திவிட்டிருந்தாள்.

அவனுக்கும் அது திருப்தியாகவே இருந்தது. முடிந்தால் இன்றைக்கு பானுமதி வீட்டுக்கு போய்விட்டு வந்துவிடவேண்டும் என்று எண்ணிக் கொண்டு இருந்தான்.

வார இறுதி நாள்களில் வெள்ளிக்கிழமை இரவே தாய் தந்தையரைப் பார்க்க சென்று விடுவான். இந்த இரண்டு நாளும் அவர்கள் கூடவே இருந்தான் அதிகமாக வெளியில் கூட செல்லவில்லை.

"ஒரு மாதம் முழுமையாக வேலையை புரிஞ்சிக்கறேன்பா. அதற்குப் பிறகு இந்த சோஷியல் ஆக்ட்டிவிட்டிஸ் எல்லாம் வச்சுக்கலாம்னு பார்க்கறேன்" என்றான்.

"ஆமாப்பா. அது நல்லதுதான்!" என்றார்.

"வேலை எப்படியிருக்கு?" என்றார்.

"வேலை அருமையா இருக்குப்பா. எதிர்பார்த்ததற்கு மேலேயே ஆர்வம் இருக்குப்பா. அதுவுமில்லாம இந்த வேலை என் கொள்கைகளுக்கு ஒத்துப்போறதால வேலை செய்ய ரொம்ப பிரியமா இருக்குப்பா. பிடிச்ச வேலையா இருக்கும் போது அது வேலையா தெரியாதுப்பா. அது மாதிரி எனக்கு இந்த வேலை ரொம்ப பிடிச்சிருக்கு" என்றான். அவரும் மனம் மகிழ்ந்தார்.

"ரொம்ப நல்லதுப்பா. அப்படி கிடைக்கிறது தான் நல்லது. நிறைய பேரைப் பார்த்தேன்னா வேலை என்பது ஏதோ சாப்பாட்டுக்கு பணம் சம்பாதிக்கற வழி என்கிற சூழ்நிலைதான் இருக்கு. எல்லாருக்கும் பிடிச்ச வேலை கிடைக்கறதில்லை. உனக்கு கிடைச்சிருக்கு. நல்லது" என்றார்.

உண்மைதான். வேலையை வேலையாக கருதிக் கொள்ளாத படி அவன் சுற்றுச் சூழல் ஆர்வத்திற்கு ஏற்றபடியான வேலையாக அந்த சயின்டிஸ்ட் வேலை அமைந்திருந்தால் அவன் மிகவும் மகிழ்ச்சியாகவே இருந்தான். அந்த மகிழ்ச்சியில் தான் பானுமதியைக் கூட பெரிய தொல்லையாக கருதாமல் ஒன்றிரண்டு முறை அவர்கள் வீட்டுக்கும் போயிவிட்டு வந்தான்.

இதனைக்கும் நடுவில் அந்த சுரபியின் குரல் அவன் மனதை ஏதோ செய்து கொண்டேயிருந்தது. மிக இனிமையான குரல்.

வேண்டுமென்றே தான் அவன் சுரபியின் வீட்டுக்குப் போவதை தள்ளிப் போட்டு வந்தான்.

இந்த ஊருக்கு வந்தவுடனேயே பானுமதி என்கிற தலைவலியை இழுத்துப்போட்டுக் கொண்டாகிவிட்டது. இனி இந்த பெண்ணைப் பார்க்கப் போய் அந்த பெண்ணிடத்தில் நட்பு என்று ஆரம்பிதது தான் வந்த வேலையைத் தவிர எல்லா வேலையும் நடக்கிற மாதிரி ஆகிவிடக் கூடாது என்று தோன்றியது.

உள்ளே ஒரு ஓரத்தில் சுரபியின் இனிமையான குரல் மட்டுமல்ல; அவள் பேசிய விதம் கூட அவன் உள்ளத்தில் ஓடிக்கொண்டுதான் இருந்தது. ''நீங்க தான் அந்த சுற்றுச்சூழல் இயக்கத்தைச் சேர்ந்த ரமணனா?'' என்று அவள் கேட்டாள். அப்படிக் கேட்ட பொழுதே அவனுக்கு மகிழ்ச்சி பொங்கியது. ஏனென்றால் பொதுவாக அவனுடைய நண்பர்கள் அவனிடத்தில் அடிக்கடி சொல்லுகின்ற கருத்து இந்த பெண்களுக்கு நகை. புடவை இந்த மாதிரி விஷயங்களைத் தவிர மற்றவற்றில் பெரிதாக ஆர்வம் இருப்பதில்லை என்பதுதான். ஒரு சமுதாயத்தின் பாதியளவு பெண்கள். ஆனால் இந்த பெண்கள் ஏனோ தங்கள் குடும்பம் தாண்டிய விஷயங்களைப் பற்றி யோசிக்கவே மறுக்கிறார்கள்.

பெண்கள் ஒரு எல்லைக்குள்ளேயே தங்களை வைத்துக் கொள்கிறார்கள். என்கிற கருத்தைத்தான் மனதில் வைத்திருந்தார்கள்.

பூபேந்திரன் என்ற நண்பன் இருக்கிறான். அவனிடத்தில் கேட்டான். அவர்கள் நண்பர் வட்டத்திலேயே பூபேந்திரனுக்குதான் கல்யாணமாகியிருந்தது. இவன் கேட்பான்.

''ஏன் பூபேந்திரா, உன் வைஃபையும் கூட்டிட்டு வரலாமில்ல நம்ம கூட்டங்களுக்கு எல்லாம்?'' என்று. அவன் கலகலவென்று சிரிப்பான்.

''நம்ம ராணியம்மா நகைக்கடைக்குக் கூப்பிட்டா வருவா. புடவைக்கடைக்கு கூப்பிட்டா வருவா. இந்த சுற்றுப்புறச் சூழல் சமாச்சாரமெல்லாம் சொன்னா,

'இதப்பாருங்க. இதெல்லாம் உங்க ப்ரண்ட்ஸ்கிட்ட அறுக்கறதோட நிறுத்திக்குங்க எங்கிட்டயும் வந்து அறுக்காதீங்க' அப்படினு சொல்லிடுவா'' என்றான்.

''ஓ... ஹோ!'' என்பான் ரமணன்.

''என்ன ஓ... ஹோ. நீயும் கல்யாணம் பண்ணிப்பாரு. உனக்கும் தெரியும்'' என்று சிரிப்பான்.

ரமணனுக்குத் தோன்றும், 'திருமணமானால் இரண்டு பேருடைய ரசனைகளும் வேறுவேறாக இருந்தால் இப்படித்தான் இருக்குமோ? பெண்கள் இதிலெல்லாம் ஆர்வம் காட்டமாட்டார்களோ? ஆர்வம் காட்டும் பெண்கள் இருக்க மாட்டார்களோ? ஆர்வம் காட்டாவிட்டாலும் குறைந்தபட்சம் கணவன் என்ன சொல்கிறான் என்று கூட கேட்கமாட்டார்களோ?' என்றெல்லாம் அவன் மனதில் சந்தேகம் தோன்றியது.

பூபேந்திரனிடம் அதையும் கேட்டான். அதற்கும் அவன் சிரித்துக் கொண்டு சொல்லுவான்.

''நீ கேட்கிற கேள்விக்கெல்லாம் பதில் சொல்ல முடியாதுப்பா. ஒண்ணு செய்டா. பேசாம ஒரு கல்யாணம் பண்ணிக்கோ. டெஸ்ட் பண்ணிப் பாரு அப்போ உனக்குப் புரியும்'' என்றான்.

''நல்லா இருக்குடா...! இதை எக்ஸ்பரிமெண்ட் பண்றதுக்காக நான்



கல்யாணம்ல்கற பெரிய பந்தத்துல சிக்கணுமா?'' என்பான் இவன்.

அது இப்போது நினைவுக்கு வர தன்னை ஒரு கட்டுக்குள் கொண்டு வந்து விட்டான் ரமணன். இந்த ஊருக்கு வந்து கிடைச்ச ஒரு அறிமுகமே போதும். அதுவே படுத்தியெடுக்கிறது. இன்னொரு அறிமுகத்தை வளர்த்துக் கொண்டு அதில் தொல்லைகள் ஏன் வளர்த்துக் கொள்ளுவது என்று எண்ணிக் கொண்டிருந்தான்.

இவையெல்லாம் சாயங்காலம் வரைதான். இன்றைக்கு ஆறு மணிக்கு அலுவலகத்தை விட்டு கிளம்பி விட்டான். கிளம்பி நேராக தன் கெஸ்ட்ஹவுஸ்க்கு போய்விட்டு அங்கிருந்து வண்டியை எடுத்துக் கொண்டு பானுமதி வீட்டுக்குக் கிளம்பினான்.

அண்ணாமலை, பானுமதி, பானுமதியின் அம்மா எல்லோரும் வழக்கம் போல் அவனுக்காக காத்துக் கொண்டு இருப்பார்கள் என்று எண்ணிக்கொண்டான். வரப்போவதைப் பற்றி தகவல் தெரிவிக்கவில்லை. அங்கு போனதற்கு பிறகு தான் தெரிந்தது. அவர்கள் மூன்று பேரும் எங்கோ வெளியில் போய்விட்டார்கள் என்று.

என்ன செய்வது என்று யோசித்தான். யோசிக்கும் முன்பாகவே சுரபி என்னும் பெண்ணினுடைய நினைவு அவன் முகத்தில் அலைமோதியது.

''அந்த மயில்வாகனன் ஐயாவும் இங்கதான் பக்கத்தில் இருக்கிறேன் என்று சொன்னாங்களே. போய் பார்த்து விட்டு வருவோம்'' என்று எண்ணினான்.

''ஏதோ வீதி சொன்னாரே? என்ன வீதி? நேதாஜி வீதி என்று சொன்னார். சரி அங்கே போய் பார்க்கலாம்'' என்று புறப்பட்டுப் போனான்.

''ஹலோ! வீட்டுல யாரும் இல்லைங்களா'' என்றான். அந்த வீட்டின் முன்பாக நின்று. வீட்டை எளிமையாக கண்டுபிடித்துவிட்டான். வீதியில் ஒன்றிரண்டு பேரிடம் கேட்டவுடனே வீட்டை அடையாளம் காட்டினார்கள்.

வீட்டை கண்டுபிடித்து விட்டான்.

''ஹலோ! வீட்டில் யாரும் இலலீங்களா?'' என்று மறுபடியும் குரல் கொடுத்தான்.

கதவு திறந்தது. ஒரு சின்னப்பெண் நின்று கொண்டிருந்தாள்.

''ஹலோ! வீடு திறந்துதான் இருக்கு. வாங்க'' என்றாள்.

''நான் ரமணன்'' என்று இவன் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்ட உடனேயே அந்தப் பெண் குனிந்து ''நான் எம். அருணா'' என்று ஏர் இந்தியா வணக்கம் போட்டாள்.

ரமணனுக்கு சிரிப்பாக வந்தது. உள்ளே நுழைந்தான். ''அப்படின்னா நான் ரமணன் என்ற பெருமகன்'' என்று மறுபடியும் சொன்னான்.

''பெருமகனா'' என்று சிரித்துவிட்டு ''அப்படின்னா என்னை சிறுமகள்னு சொல்லிக்கலாமா? என்றாள்.

''ஓ...ஹோ...! அப்படியானால் ஒரு பெருமகள் இருக்கணுமே. எம். சுரபி அவுங்க இருக்காங்களா?'' என்றான். ''இருக்காங்களே! உட்காருங்க'' என்று சொல்லிக் கொண்டே அந்த பெண் தன் பார்வையை பின் பக்கமாக ஓட்டினாள்.

ஓட்டுவீடு என்றாலும் ஓரளவு பெரியதாக இருந்தது. முன்னாலே ஒரு பெரிய கூடம் போலே இருந்தது. அதிலிருந்து நடுப்பகுதியிலிருந்து சின்ன நடைபாதை போனது. அதிலே பிற்பகுதியிலே இருந்து ஒரு பெண் வந்தாள்.

அந்த தாழ்வாரத்தின் வலது புற ஓரத்தில் கொஞ்சம் வெளிச்சம் குறைவாக இருந்தது. அவள் அந்த ஓரமாகவே வந்து கதவை முழுதாக திறக்காமல் கதவை ஒருக்களித்தாற் போல் வைத்துக் கொண்டு அந்தப் பக்கம் நின்றபடி பாதி முகத்தை மட்டுமே காட்டினாள்.

ரமணனுக்கு சிரிப்பாக வந்தது.

தன்னிடத்தில் ஃபோனில் பேசும் போது அவ்வளவு தெளிவாவும் அழகாகவும் பேசிய பெண். இங்கே கதவுக்குப் பின்னாலே ஒளிந்து கொள்கிறாளே என்று எண்ணிக் கொண்டான்.

சேட்கவில்லை.

''மேடம் நான் ரமணன்.'' என்றான்.

''சார் வாங்க வாங்க உட்காருங்க'' என்றாள் அவள் அங்கிருந்தபடியே.

''சார் வாங்க வாங்க உட்காருங்க'' என்றாள் அவள் அங்கிருந்தபடியே.

கூடத்தில் ஒரு மர நாற்காலி இருந்தது- நீளமான நாற்காலிகளும் இருந்தன. அவன் அந்தப் பெண்ணைப் பார்த்துப் பேசுவதற்கு வாகாக இருக்கிறாற் போல ஒரு நாற்காலியில் அமர்ந்தான்.

''ரொம்ப சந்தோஷம் சார் நீங்க வந்தது'' என்றாள் அந்த பெண்.

''ஆமாம்! போனவாரமே வரலாம்னு நினைச்சேன். ஆனால் வரமுடியலை'' என்றான்.

''வேலையெல்லாம் பரவாயில்லைங்களா சார்?'' என்றாள்.

''ம்... வேலையெல்லாம் நல்லாப்போகுதும்மா'' என்றவன் ''எங்கே உங்க அப்பா இல்லையா?'' என்றான்.

''அப்பா வெளியே போயிருக்காங்க. வரதுக்கு ஒரு அரைமணி நேரமாகும். அம்மா வெளியூர் போயிருக்காங்க. உட்காருங்க'' என்றாள் மறுபடியும்.

'' ம்.. நான் தான் உட்கார்ந்துட்டனே'' என்று அவன் சிரிக்கவும்தான் அவன் அமர்ந்துவிட்டான் என்பது அவளுக்கு உறைத்தது. ''என்ன சாப்பிடறீங்க?'' என்றாள்.

''மேடம். நான் ஆபீஸ்லேயே டிபன் சாப்பிட்டுட்டுத்தான் கிளம்பினேன். ஒண்ணும் வேண்டாம்'' என்றான்.

''இல்லயில்ல. முதல் தடவையா வந்திருக்கீங்க. கண்டிப்பா ஏதாவது சாப்பிடணும்'' என்றாள்.

உள்ளே சென்று சிறிய தட்டிலே நன்றாக சுற்றப்பட்ட கைமுறுக்கு ஒரு நான்கைந்து அந்த பெண்ணிடம் கொடுத்து அனுப்பினாள்.

அருணா என்று தன்னை அறிமுகப்படுத்திக் கொண்ட அந்த பெண் ''அப்புறம் சார்!'' என்றாள் மறுபடியும். ''அப்புறம்னா எப்புறம்?'' என்றான் இவன்.

''இல்ல. கைமுறுக்குக்கு அப்புறமா என்ன சாப்பிடறீங்க?'' என்றாள்.

''போதும்மா இதுவே போதும்'' என்றான்.

''அப்படியெல்லாம் நாங்க விடமாட்டோம் சார். எங்க வீட்டுக்கு வந்தா எவ்வளவு முடியுமோ அவ்வளவு கஷ்டப்படுத்துவோம்'' என்றாள்.

அவன் சிரித்தான். ''நிஜமா பாருங்க கைமுறுக்கு நானும் எங்க அக்காவும் சுத்தி சுத்திப் போட்டோம்'' என்றாள்.

''சுத்தி சுத்தி போட்டீங்களா? ஒரே இடத்துல நின்னு போடலையா?'' என்றான்



அஞ்சறைப் பெட்டி

## தலைமுடி பராமரிப்பு

*3. தலைக்கு பயன்படுத்தும் ஹேர் பின்கள், கிளிப்புகளை இரவு தூங்கப் போகும் முன் கழட்டி விட வேண்டும்.*

ரமணன்.

அவள் முறைத்து விட்டு இது ஜோக்கா என்று சிரித்தாள். ''இல்ல நீங்க அடிக்கும் ஜோக்குக்கெல்லாம் நான் சிரிக்கும் போது நான் அடிச்ச ஜோக்குக்கு ஏன் சிரிக்கக் கூடாது?'' என்றான் ரமணன்.

அவள் ஒரு விரலால் கன்னத்தைத் தட்டிக் கொண்டு யோசிப்பவள் போல் நடித்துவிட்டு ''பாவம். ரொம்பக் கெஞ்சறீங்க சிரிச்சிரலாம்'' என்று சொல்லிவிட்டு கஷ்டப்பட்டு ஹ! ஹா! என்றாள்.

அவன் மறுபடியும் சிரித்தான். அதற்குள்ளாக சுரபி உள்ளேயிருந்து அருணா என்று அழைத்தாள். அருணா ஓடிப்போய் திரும்பி வருகையில் கையில் ஒரு டம்ளர் இருந்தது அந்த டம்ளரிலே ஹார்லிக்ஸ் கலந்து கொடுத்திருந்தாள்.

ஹார்லிக்ஸ் என்று இவன் சிரித்தான். ''ஆமா! நீங்க சுற்றுப்புறச் சூழல் வல்லுநர் காபி, டீ சாப்பிடுவீங்களோ தெரியல அதிலயும சிலபேருக்கு நைட் டைம்ல காபியோ, டீயோ சாப்பிட்டா தூக்கம் வராது. எல்லாத்தையும் யோசித்துதான் ஹார்லிக்ஸ் கலந்தேன்'' என்று சுரபி சிரித்தாள்.

அந்த பாதி முகம் பார்ப்பதற்கு அழகாக இருந்தது. அவள் சிரித்த சிரிப்பும் காதிலே தேன்போல ஒலித்தது.

''சார்! உங்க சுற்றுப்புறச் சூழல் கட்டுரைகள்ல எனக்கு ரொம்ப ஆர்வம் இருக்கு. அந்த மாதிரி விஷயங்களைப் பற்றி நானும் ரொம்ப படிப்பேன். இங்க கூட நிறைய இயற்கை உரங்களைப் பற்றியெல்லாம் நெறையப் பேருக்கு போய் சொல்லுவேன்'' என்றெல்லாம் சொன்னாள்.

அவன் ஆர்வமானான். ''அப்படியா பரவாயில்லையே இந்த மாதிரி கிராமத்துல இப்படியொரு ஆர்வமா?'' என்றான்.

''சார்! இது நல்லாயில்ல.'' என்றாள் அவள்.

''ஏது!'' என்றான் அவன்.

''இல்ல ஆர்வத்துக்கு கிராமம் என்ன நகரம் என்ன! அது மனிதர்களைப் பொறுத்தததுதானே'' என்றாள்.

''ஆமாமா! நெத்தியடி அடிச்சீங்க'' என்று அவன் சிரித்தான்.

ஒரு பத்து நிமிடம் பேசியிருப்பார்கள். அப்பொழுது வாயிலிலே சர்ரென்று ஒரு கார் வந்து நின்றது. அந்த காரின் கதவைத் திறந்து கொண்டு பானுமதி இறங்கி நின்றாள்.

டிரைவரை உள்ளே அனுப்பினாள். டிரைவர் பதட்டத்துடன் வந்து ''அம்மா உங்களை உடனே கூப்பிடறாங்க'' என்றார்.

ரமணன் ஆச்சரியமாக எழுந்து போக ''அப்பாவும், அம்மாவும் உங்களுக்காக காத்துக்கிட்டு இருக்காங்க'' என்று அழைத்தாள். அவன் ஏதோ சொல்ல

ஆரம்பிக்க

''இல்ல! ஒண்ணும் பேசாதீங்க அத்தான். உடனே புறப்படுங்க'' என்று அவசரப்படுத்தினாள்.

மேலும் எதுவும் ரசாபாசம் நிகழ்வதற்கு முன்பாக ''ஒரே நிமிஷம்'' என்று அவன் உள்ளே போய் சுரபியிடம் ''நான் அவுங்க வீட்டுக்கு போய்ட்டு மறுபடியும் இரண்டு மூணு நாளு கழிச்சு வரேன்'' என்று மெல்லிய குரலில் சொல்லி விட்டு வெளியே வந்தான்.

பார்த்தால் பானுமதி முகத்தில் ஏதோ கோபம் இருப்பது போல தோன்றியது. மெல்லத் திரும்பி வலதுபக்கமாய் பார்த்தான். சுரபியின் முகத்தில் வாட்டமும் ஏக்கமும் இருந்தது போல தோன்றியது.

குழப்பத்துடனேயே காரில் ஏறினான்.



5

''அழகுப் போட்டிகள் எதை நோக்கமாகக் கொண்டுள்ளன. அதிலும் கடந்த சில ஆண்டுகளாக கிழக்கத்திய நாட்டுப் பெண்கள் அழகிகளாகத் தேர்ந்தெடுக்கப் படுகிறார்களே ஏன்? அதற்கு முன்பு கிழக்கத்திய நாட்டுப் பெண்கள் அழகில்லாதவர்களாக இருந்தார்களா? அல்லது இப்போதெல்லாம் மேற்கத்திய நாட்டுப் பெண்கள் அழகு குறைந்தவர்களாக ஆகிவிட்டார்களா? யோசியுங்கள். இது ஒன்றுமேயில்லை. அழகு சாதனங்களின் விற்பனைக்கு கிழக்கத்திய நாடுகளைக் களமாக்குகிற முயற்சி. இது ஒரு பக்கம் என்றால் இன்னொரு பக்கம் டிவி, விளம்பரங்கள் எல்லாம் பெண் சிகப்பழகை நோக்கிச் செல்ல வேண்டும் என்று போதிக்கிறதே ஏன்? மறுபடியும் அதே நோக்கம்தான் அழகு சாதனங்களை விற்பதற்கான உத்திதான் அது.

சிவப்பழகு ஏழு நாட்களில், பதினைந்து நாட்களில், ஒரு மாதத்துக்குள் வந்து விடுமா என்ன? அப்படி வரவில்லையென்றால் என்ன செய்ய? சிவப்பழகு இல்லாத பெண்கள் அழகில் சேர்த்தி இல்லை என்றால் அவர்களை நாடு கடத்தி விடலாமா? அவர்களுக்குக் கல்யாணம் இல்லை என்று சொல்லிவிடலாமா? இதையெல்லாம் பெண்கள் எப்போது புரிந்து கொள்ளப் போகிறார்கள்?''

ஆவேசமாக அல்லாமல் திருத்தமாகத் தனது கருத்துக்களை எடுத்து வைத்துக் கொண்டிருந்தான் ரமணன். பூபேந்திரன் ஆழமாகப் பார்த்துக் கொண்டிருந்தான்.

மொத்தமே முப்பது நாற்பது பேர்தான் அந்த அரங்கில் இருந்தார்கள். ஆனால் ஒவ்வொருவரும் சிறிய அளவில் அமைப்புக்களை நடத்திக் கொண்டிருந்தவர்கள். இங்கே விவாதிக்கப்படும் கருத்துக்களை ஏதாவது ஒரு வழியில் முனைந்து சமுதாயத்துக்கு எடுத்துச் சொல்பவர்கள்.

ரமணன் பேசிய பிறகு வேறு சிலரும் இதே போல வேறு கருத்துக்களை எடுத்து வைத்துப் பேசினார்கள். மாலையில் மீட்டிங் முடிந்த பிறகு ரமணனும் பூபேந்திரனும் காலார நடந்து வந்தார்கள்.



''அப்புறம்... ஊர்ல என்னடா... விசேஷம்? நீயும் போய் ஒரு மாசம் ஆயிருச்சில்லே? அந்த பானுமதி..?'' என்று பூபேந்திரன் இழுக்கும் முன்பாகவே ரமணன் தொடர்ந்தான்.

''நான் பத்துப் பதினைந்து நாளா தப்பிச்சுட்டேன்ப்பா! புரிஞ்சுட்டாங்க போல. யாரும் பெருசாத் தொந்தரவு பண்றதில்லே!'' என்று சிரித்தான்.

''ஏன்... அப்படி ஒதுங்கறே? பானுமதி ஒத்து வருமான்னு பாக்கறது?'' என்றான்.

''இல்லப்பா...! ஒத்து வராது...! ஏன்னா அவுங்க எதிர் பார்க்கறது உள்ளூர்ல வேலை செய்யற ஒரு ஸ்டேட்டஸ் சிம்பலா இருக்குற ஒரு கையடக்கமான மாப்பிள்ளை...!'' என்றான்.

''கையடக்கப் பதிப்பு மாதிரியா?'' என்று சிரித்தான் பூபேந்திரன்.

''அப்படித்தான் வச்சுக்கயேன். அன்னைக்கு சுரபி வீட்டுக்குப் போயிருந்தப்ப அந்தப் பொண்ணு பானுமதி டாமினேட் பண்ணின விதம் எனக்குப் பிடிக்கலே...!'' என்றான்.

''அதானே! இப்பவே இவ்வளவு பொஸஸிவ்வா இருந்தா..?'' என்றான் பூபேந்திரன்.

''அது மட்டுமல்லடா! என்னோட அலைவரிசை வேற. அந்தப் பொண்ணோட அலைவரிசை வேற. ஒத்து வராதுப்பா..!'' என்றான்.

''சொல்லிடப் போறியா?''

''அதுக்கு அவசியமே... வர்லையே! அந்த மாதிரிப் பேச்சுக்கள் வரும்போதுதானே அதைப் பத்திப் பேசணும். அது மட்டும் இல்ல...! இப்போதான் வேலைக்குப் போயிருக்கோம்! அந்த வேலை பிடிச்சுருக்கு! அதுல என்ன செய்யணும்னு பாக்கறதை விட்டுட்டு எதுக்கு விஷப்பரிட்சை?''

''ஆனா... அந்த சுரபியை என்னமோ ரொம்பப் பிடிச்ச மாதிரி தெரிந்ததே?''

''ஆமா...! சுரபி என்கிற பெண்ணோட சிந்தனைகள் பிடிச்சுத்தான் இருக்கு! அது நல்ல நட்பாக் கூட இருக்கலாம். இப்போதைக்கு அவ்வளவுதான்.''

''நல்லதுடா...! ஆனா... பானுமதி வீட்டு நட்பையும் முறிச்சுக்காதே! கல்யாணம்ங்கற பேச்சு வரும்போதுதானே... அது பத்தித் தீவிரமா யோசிக்கணும்'' என்றான் பூபேந்திரன்.

விஷயங்கள் அவர்கள் நினைத்தாற் போல நடக்கப் போவதில்லை என்று அவர்களுக்கு அப்போது புரியவில்லை.

''ஏம்ப்பா! நாலு மணி நேர தூரத்துல நான் இருக்கேன். நீங்க இங்கே! எதுக்குப்பா... பேசாம ஒரு வீடு பாத்தர்லாமா?'' என்றான் ரமணன்.

''நான் கூட அதுதாம்ப்பா... யோசிக்கிறேன்'' என்றார் ஈசுவரமூர்த்தி.

ஒரு முடிவு செய்து கொண்டார்கள்.

அப்பாவுக்கும் தனக்கும் நடந்த முந்தைய நாள் உரையாடலை நினைத்துக் கொண்டே மதிய உணவு இடைவேளையின் போது உணவைக் கொறித்துக் கொண்டிருந்தான் ரமணன்.

பானுமதியின் தொல்லையிலிருந்து விடுபடுவதற்காகவே செல்ஃபோன் [illegible] மாற்றி விட்டிருந்தான் ரமணன். எவ்வளவுதான் மக்காக இருந்தாலும்

இது கூடவா புரியாமல் போயிவிடும்? பானுமதிக்கும் கொஞ்சம் புரிந்தது போலும்.

அவளும் தொல்லைப் படுத்தவில்லை. அவள் அடிக்கடி ஃபோன் செய்த போது தொல்லையாக நினைத்த ரமணனுக்கு ஒரேயடியாக அவள் பத்த நாட்கள் பேசவில்லை என்பதும், தேடி வரவில்லை என்பதும் கொஞ்சம் கஷ்டமாகத்தான் இருந்தது.

'' சரி இன்றைக்குப் போகலாம்'' என்று அவர்கள் வீட்டுக்குப் போனான்.

பானுமதி அவனிடம் அளவாகவே பேசினாள். அவளது கோபம் அவனுக்கு சிரிப்பையே வரவழைத்தது.

''என்ன பானுமதி... கோபம் போலே?'' என்றான்.

''ஆமா...! பின்னே! வேண்டாத விருந்தாளின்னு தெரிஞ்சதுக்கப்புறம் எதுக்கு மேலே விழுந்து பிடுங்கணும்?'' என்றாள்.

''ஐயய்யோ...! அப்படியெல்லாம் நினைக்காதீங்க! ஆஃபீஸ் அவர்ஸ்ல கூப்பிட முடியறதில்லை. அப்புறம் நைட்ல... டயர்டாயிடறது தூங்கிடறேன். வேற ஃபோன் நம்பர் மாத்தினேன். உங்களுக்கு சொல்ல நேரம் கிடைக்கலே...'' என்றான்.

அவள் கொஞ்சம் சமாதானமானாள்.

''நான் வேற காரணம்னு நினைச்சேன்'' என்றாள்.

அவள் எதைச் சொல்லப் போகிறாள் என்று அவனுக்கு ஓரளவு தெரிந்திருந்தது. ஆனாலும் அவளே சொல்லட்டும் என்று காத்திருந்தான். இவன் ஏதும் கேள்விகள் கேட்பானோ என்று காத்திருந்த பானுமதிக்குத் தன் மனதில் இருப்பதைக் சொல்லாமலிருக்க முடியவில்லை.

''இல்லே! எங்க வீடு மறந்து போச்சோன்னு நினைச்சேன்..''

''ஏன் அப்படி நினைச்சீங்க?'' என்றான் வாயைக் கிண்டுவது போல.

''இல்லே! நேதாஜி வீதிதான் இப்போ பிடிக்குது போல!'' என்றாள்.

அவன் சிரித்தான் ''மேடம்! அப்படியான எந்தப் பிடிப்பும் எந்தத் தெரு மேலயும் இதுவரைக்கும் இல்லை...! ஒண்ணு தெரிஞ்சுக்குங்க...! அன்றைக்கு உங்களுடன் வந்தேனே அதுக்கப்புறம் அங்கயும் போகலை...!'' என்றான்.

அவள் முகம் பிரகாசமாகியது.

''அப்படியா?'' என்று உற்சாகமானாள். உபசரிப்பு பலமாகியது.

பேச்சுக்கு நடுவே அவனுடைய தகுதிக்கும் வேலைக்கும் தங்களைப் போன்ற குடும்பங்களோடுதான் பழக வேண்டும் என்றும், நயமாகவும் மறைமுகமாகவும் அவனுக்கு சொல்லப்பட்டது.

ரமணன் உள்ளுக்குள் சிரித்துக் கொண்டான். எதுவும் சொல்லவில்லை. அவன் தன் சம்மதத்தை ஏதாவது ஒரு விதத்தில் காட்டியிருந்தால் பானுமதி பேசாமல் இருந்திருப்பாளோ என்னவோ! அவனது அழுத்தம் அவளுக்குள் மேலும் மேலும் அழுத்தத்தையே ஏற்படுத்தியது. தான் சொல்ல வந்த விஷயத்தை அவனிடம் சொல்லியே ஆக வேண்டும் என்பது மட்டுமல்ல அதை அவன் எப்படியாவது ஏற்றுக் கொள்ளச் செய்ய வேண்டும் என்ற எண்ணமும் அவளுக்குள் ஆழமாகத் தோன்றியது.



அவனும் சும்மாயிருக்கவில்லை. அவளைச் சீண்டுவது போல-

''ஏன் அப்படி நினைக்கறீங்க? ரொம்ப இன்டலிஜெண்ட்டாப் பேசறாங்க! அவங்க சிந்தனைகள் எல்லாம் ரொம்ப ஹை லெவல்ல இருக்கு!'' என்றான்.

''அப்புறம்! வேற எப்படி ஆட்களைக் கவர் பண்ண முடியும்? பேச்சை வச்சுத்தான் கவர் பண்ணணும்!'' என்றான்.

ரமணனுக்கு ''சுருக்''கென்று பட்டது.

''பானுமதி! பெண்கள்தான் பெண்களுக்கு எதிரி. சுரபிக்கு யாரையும் பேச்சால் வசீகரிக்க வேண்டிய அவசியம் இல்லைன்னுதான் நினைக்கறேன்.''

பானுமதி முகத்தில் கோபம் ஏறியது.

''இருக்கு...!'' என்றாள் ஆவேசமாக.

''பானு...!'' என்றான் ரமணனும் குரலை உயர்த்தி.

''சும்மா கோபப்படாதீங்க ரமணன்! அவளை யார் ஏத்துக்குவாங்க...! யாரும் ஏத்துக்க மாட்டாங்க. உங்களை மாதிரி அறிவு ஜீவின்னு யாராவது ஏமாளிங்க... சிக்கினாத்தான் உண்டு'' என்றாள்.

ரமணன் முகமும் சிவந்தது. அவள் அறிவுஜீவி என்ற வார்த்தையை கிண்டலாக உச்சரித்தது போல இருந்தது.

''ப்ளீஸ்! நான் கிளம்பறேன்!''

''கிளம்புங்க... கிளம்புங்க. நேரா.. நேதாஜி ரோடு போங்க! அந்தப் பெண்ணை நேருக்கு நேரா உங்கக்கிட்டே வந்து பேசச் சொல்லுங்க...! அதுக்கான தைரியம் இருக்கான்னு பாருங்க!'' என்றாள்.

ரமணனுக்கு அந்தக் கட்டத்தில் தானும் பானுமதியும் அத்தோடு பேச்சை நிறுத்திக் கொள்ள வேண்டும் என்றும் அதற்கு மேல் பேசுவது ரசாபாசத்தையே வளர்க்கும் என்று தோன்றியது.

''ப்ளீஸ்! அவங்களுக்காக நாம எதுக்குச் சண்டை போட்டுக்கணும்..'' என்றான்.

அந்த வார்த்தைகள் பானுமதியைக் கொஞ்சம் குளிர்வித்தன. இருந்தாலும் முகத்தின் கடுகடுப்பு மாறவில்லை. இவள் சுரபியிடம் என்ன குறை கண்டாள்? எதையோ ஒன்றை மறைமுகமாகச் சொல்கிறாள் என்று புரிந்தது.

''சரி...! நாம எப்பவும ஃப்ரெண்டஸ்தான் ஓ.கே...வா?'' என்றான்.

லாவகமாகவே பேசி விட்டு அந்த இடம் விட்டு நகர்ந்தான்.

வெளியே வந்து தன் குவார்ட்டஸ் நோக்கி வண்டியை செலுத்தியவன் - சற்று தூரம் சென்றவன் ''அதென்ன... பானுமதி சுரபியைப் பார்க்கக் கூடாது என்பது போலவே பேசுகிறாள். அதைச் சொல்ல இவள் யார்?'' என்ற எண்ணம் தோன்ற வண்டியை சுரபியின் வீட்டுக்குத் திருப்பினான்.

சுரபியின் தங்கைதான் வழக்கம் போல் கதவைத் திறந்தாள்.

''ஹலோ... எம். அருணா...!'' என்று அவன் சிரிக்க அவளும் அதே போலக் கிண்டல் செய்தாள்.

''அடடா... நீங்க... ஈ. ரமணனா?'' என்றாள்.

''ஆமா... ஹி...ஹி... ரமணன்..'' என்றான். இருவரும் சிரித்தார்கள்.

வழக்கம் போல சுரபி நடைவையிலேயே நின்றாள்.



## தலைமுடி பராமரிப்பு

4. தலைமுடியில் வாசனை திரவியங்கள், சென்ட்கள் போன்றவை அடிக்கடி பட்டால் தலைமுடி செம்பட்டையாகும். சீக்கிரமே நரைத்து விடும்.

கலகலப்பாகச் சற்று நேரம் பேசினார்கள்.

''சார்! அடுத்த தலைமுறையைப் பத்தி நாம யோசிக்க மாட்டேங்கறோம். நான் அமெரிக்க வரலாறு பத்திப் படிக்கறப்போ படிச்சிருக்கேன். வட அமெரிக்காவில ஆரம்பகாலத்துல போய்க் குடியேறினவங்க ஒரு குழுவா ஒரு ஊர்ல தேவையான வசதிகளை உருவாக்கிட்டு அடுத்த இடத்துக்கு குடி பெயர்ந்துடுவாங்களாம். அவ்வளவு ஏன் இப்ப பெட்ரோலியம் ஏற்றுமதி செய்யும் நாடுகள் என்ன செய்யறாங்கன்னா... இன்னும் சில ஆண்டுகளுக்குப் பிறகு பெட்ரோல் இருப்பு இருக்காதுங்கறது தெரிஞ்சதால நாட்டுக்குத் தேவையான இன்ஃப்ரா ஸ்ட்ரக்சரை உருவாக்கிட்டு இருக்காங்களாம். ஆனா ஏனோ நம்ம நாட்டுல மக்களுக்கும் சரி - பொது வாழ்க்கையில நம்மளை வழி நடத்துறவங்களும் சரி... தொலை நோக்குப் பார்வை குறைவா இருக்கோன்னு தோணுது'' என்றாள்.

ரமணனுக்கு ஏனோ தன் குரலே எதிரொலிப்பது போலத் தெரிந்தது. இவள் சிந்திக்கிற பெண் என்று தோன்றியது.

கலகலப்பாகவும் உற்சாகமாகவும் சற்று நேரம் பேசிய பின் நேரடியாகத் தன் கேள்விக்கு வந்தான்.

''ஏன் சுரபி...! இவ்வளவு பேசற நீங்க ஏன் கட்டுப் பெட்டி போல உள்ளயே நின்னு பேசறீங்க! எதிர்ல வந்து உட்காரக் கூடாதா?'' என்றான்.

''அது கட்டுப் பெட்டித் தனம் இல்லே...! காரணத்தோட கூடின ஒதுங்கல்...!'' என்றாள்.

''அதான் கேக்கறேன்... ஏன் ஒதுங்கணும்?'' ''அப்படியெல்லாம் எதிர்ல உட்கார்ந்து பேசினா

''சார் இது கிராமம்...! அப்படியெல்லாம் எதிர்ல உட்கார்ந்து பேசினா நல்லாயிருக்காதுன்னு காரணம் சொல்லலாம். அது உண்மைதான். அது மட்டுமே உண்மையல்ல...'' என்றாள்.

குரலில் உணர்ச்சி நிறைந்து வழிந்தது. ஏதோ தொண்டையில் விக்கிக் கொள்வது போல அவள் தவிக்கிறாற் போலத் தோன்றியது.

தன் கைக்கடிகாரத்தைப் பார்த்தான் ரமணன். இரவு ஒன்பது மணி.

இந்த நேரத்தில் ஒரு இளம்பெண் ஒரு இளைஞனோடு பேசுவது தேவையற்றதுதான். ஆனால் ரமணன் அந்த மர்மம் என்ன என்று கண்டுபிடிக்க வேண்டும் என்பதில் தெளிவாக இருந்தான்.

''சுரபி... ப்ளீஸ்! என் எதிர்ல வந்து உட்கார்ந்து ஒரு அஞ்சு நிமிஷம் - அஞ்சே நிமிஷம் பேசுங்க...'' என்றான்.

''வேண்டாம்..!'' என்றாள் சுரபி பீதியுடன்.



''ப்ளீஸ்!'' என்றான் ரமணன் ஒன்றும் புரியாதவனாக.

சுரபி தயங்கித் தயங்கி வந்தாள். அருணா ஒரு விதமான கவலை தோய்ந்த முகத்துடன் பார்த்துக் கொண்டு நின்றாள்.

ரமணன் அமர்ந்திருந்த மரநாற்காலிக்கு நேர் எதிராக இருந்த நாற்காலியில் அமர்ந்தாள். அந்தக் கூடத்தில் சுவரோரமாக இருந்த ட்யூப்லைட்டின் வெளிச்சம் பளிச்சென்று அவள் இடது கன்னத்தை நோக்கி அடித்தது.

ரமணன் அதிர்ந்து போனான்!

அவனது அதிர்ந்து போன முகம் பார்த்த சுரபி, கண்ணீருடன் எழுந்தாள்!

''சுரபி...'' என்று அவன் ஏதோ சொல்ல முயற்சிக்கு முன் -

''ப்ளீஸ்... போயிருங்க...!'' என்று உள்ளே ஓடிவிட்டாள்.

என்ன பேசுவது என்று தெரியாமல் திகைத்து நிற்கின்ற ரமணனைப் பார்த்து, அருணா வழக்கமான தனது குறும்புத் தனத்தையெல்லாம் விட்டு விட்டு.

''ப்ளீஸ்!'' என்றாள்.

''போயிருங்க...!'' என்ற வேண்டுகோள் அதிலே இருந்தது.

அதிர்ச்சி மாறாமலே ரமணன் தன் வண்டியில் சென்று ஏறினான்.

எப்படி வந்து சேர்ந்தான் என்றே தெரியவில்லை. பானுமதி ஏனோ அவனைப் பார்த்து கெக்கலி கொட்டிச் சிரிக்கிறாற் போல இருந்தது.

ஆழமான உறக்கம் அவனுக்கு அன்று கிடைக்கவில்லை. அப்படி ஒரு தாக்குதல் அவனுக்குள் ஏற்பட்டிருந்தது.



6

**வீ**டு பெரியதாக இருந்தது. தொட்டிக் கட்டு வீடு.

அப்பாவுக்கும், அம்மாவுக்கும் மிகவும் பிடித்தது. கிராமப் புறத்துக்கே கூடிய அமைதி. நகரத்தைப் போல நெருக்கமாக இல்லாமல் விசாலமான வீதி.

நிறைய செடி, கொடிகள், மரங்கள் என்று சூழ்நிலை ரம்மியமாக இருந்தது. போன வாரம் வந்து பார்த்தவுடனே வீடு அம்மாவுக்கும், அப்பாவுக்கும் மிகவும் பிடித்துப் போயிருந்தது.

''அப்பா...! வீட்ல முதல்ல குடியேறிடலாம். வீட்டுக்காரர் ஏதோ சென்னையில் செட்டிலாகிற மாதிரி ஐடியாவாம். அதனால விக்கறதுக்குக் கூடத் தயாராய் இருக்காங்க போல இருக்கு. ஜாடை மாடையாச் சொன்னாரு. நானும் யோசிக்கறேன்னு சொல்லியிருக்கேன்'' என்றார்.

ஈசுவரமூர்த்தி இன்னும் மகிழ்ச்சியானான்.

''ஆனா... ஓட்டு வீடா இருக்கேப்பா...!'' என்றார்.

''அப்பா.. வீட்டுச் சுவரெல்லாம் பாருங்க! முழுக்கல் சுவரு. திண்ணு திண்ணுனு இருக்கு...! அழகா கான்க்கிரீட் கூரை போட்ரலாம். பங்களா டைப் வேண்டுமானால் முன்னால இருக்கற இடத்துல கட்டிக்கலாம்'' என்றான் ரமணன்.

ரமணன் மிகவும் உற்சாகமாகப் பேசுவதைப் பார்த்த ஈசுவரமூர்த்திக்கு ஒன்று புரிந்தது. மகனுக்கு வீடும், ஊரும் மிகவும் பிடித்துவிட்டது என்று.

''சரிப்பா! தாராளமாச் செய்யலாம். எப்படி இருந்தாலும் எங்க வாழ்க்கை உன்னோடதான். அதனால உனக்கு எது பிடிக்குமோ அது எங்களுக்கும் பிடிக்கும் என்றார்.

''தாங்ஸ்ப்பா...!'' என்று செல்லம் கொஞ்சினான் மகன். தந்தை முகம் மலரச் சிரித்தார்.

வேண்டுமென்றேதான் ரமணன் வாடகைக்கு வீடு பார்த்தான். அதற்கான ஏற்பாடுகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டான். அலுவலக நேரம் போக கிடைத்த கொஞ்ச நேரம் இதற்கே சரியாக இருந்தது.

கிடைத்த வார விடுமுறை நாட்களை அம்மா, அப்பாவைப் பார்ப்பதற்காக செலவிட்டான். அப்போதுதான் லட்சுமிபுரத்திலேயே குடியேறுகிற விருப்பத்தை அம்மாவும், அப்பாவும் வெளியிட்டார்கள். அவனுக்கும் அது ஏற்பதாகவே இருந்தது.

முக்கியமான காரணம் அம்மாவும், அப்பாவும் தன் பிரிவினால் வருந்துகிறார்கள் என்பதுதான். இரண்டாவது காரணம் அம்மாவின் கைச் சாப்பாடு கிடைக்கும். மூன்றாவது அம்மாவும் அப்பாவும் வந்து விட்டால் இந்த உறவினர்களைப் பார்ப்பது, போய் வருவது எல்லாம் அவர்கள் பொறுப்பில் போய் விழும். தனக்குத் தலைவலி இருக்காது என்று நினைத்தான்.

சுரபியின் வீட்டிலிருந்து கிளம்பியபோது அவனுக்குக் கொஞ்சம் - கொஞ்சமென்ன நிறையவே அதிர்ச்சிதான். என்ன இருந்தாலும் சுரபியின் இடப் பக்கத்துக் கன்னத்தைப் பார்த்தவுடனே ஏற்பட்ட அதிர்ச்சியைத் தான் அவ்வளவு வெளிப்படையாகக் காட்டியிருக்கக் கூடாது என்று தோன்றியது.

அதனால்தான் சுரபியும் அதிர்ந்து போய் ''ப்ளீஸ்! உடனே போயிருங்க'' என்று சொல்லிவிட்டாள்.

அப்படியென்ன சுரபியின் முகத்தில்?

தீப்பட்ட அடையாளங்கள் அந்தப் பெண்ணின் முகத்தில் பெரிய வடுக்களை ஏற்படுத்தி இருந்தது. பார்ப்பதற்கே விகாரமாக இருந்தது.

வலது பக்கக் கன்னம் எந்த அளவுக்கு மென்மையாகத் தோற்றமளித்ததோ அந்த அளவுக்கு இடது பக்கக் கன்னம் பார்க்க வொண்ணாததாக இருந்தது.

''பாவம சுரபி! எவ்வளவு அதிசய சிந்தனைகள், பேச்சில் எத்தனை இனிமை! அத்தனையும் இந்த ஒரு விஷயத்தில் அடிபட்டுப் போனதே...'' என்று வேதனையாக இருந்தது. ஆனால் அதே சமயம் அந்தப் பெண்ணின் மீது அனுதாபம்தான் தோன்றியதே தவிர வெறுப்புத் தோன்றவில்லையே!

முதற்கட்ட அதிர்ச்சி முடிந்தவுடனே மனம் சிந்திக்கத் தொடங்கிவிட்டது. அறிவு தெளிவானது. ஆனாலும் ஏனோ கடந்த வாரங்களில் அவன் அந்தப் பெண்ணிடம் பேசவும் இல்லை. தொடர்பு கொள்ளவும் இல்லை.

சுற்றுப்புறச் சூழல் அமைப்பு வேலைகளில், தனது அலுவலகப் பணியில் என்று தன்னை ஆழ்த்திக் கொண்டான். நாட்கள் ஓடின. நேரம் போதாது என்பது போல் ஆகிவிட்டது.

திடீரென்று கார் ஒன்று வந்து நிற்கவும் ரமணனின் சிந்தனை கலைந்தது.

அம்மா அகிலாண்டம் அடுக்களையில் பால் காய்ச்சுவதற்கான ஏற்பாடுகளில் இருந்தார். நல்ல நேரத்துக்குள் பால் காய்ச்சியாக வேண்டுமே. திரும்பிப் பார்த்தா



காரில் இருந்து பானுமதியும் அவளது பெற்றோரும் இறங்கினார்.

''அத்தான்... பர்மனன்டா இங்கயே குடி வந்துட்டீங்களா?'' என்று உற்சாகமாக வந்தாள் பானுமதி.

''வேற வழி?'' என்று இயல்பாகச் சிரித்தான் ரமணன்.

''ஏம்ப்பா... என்னவோ வேறவழி இல்லாம வந்த மாதிரிச் சொல்றே! ஊரு ரொம்பப் பிடிச்சிருச்சு. வேலை ரொம்பப் பிடிச்சிருச்சு... மனுஷங்களை ரொம்பப் பிடிச்சிருக்குன்னு சொல்லித்தானே எங்களயும் இங்கே வரச் சொன்னே!'' என்று சிரித்தார் ஈசுவரமூர்த்தி.

ரமணன் சங்கடமான ஒரு சிரிப்புடன் ''ஏம்ப்பா... இப்படிப் போட்டு உடைக்கறீங்க?'' என்றான்.

பானுமதி கலகலவென்று சிரித்தாள்.

''அத்தான்... பாத்தீங்களா... நீங்க எங்களை வேற வழியில்லாம ஏத்துகிட்டாலும், எங்க மாமாவும் அத்தையும் நாங்க வேணும்னு நினைக்கறாங்க'' என்றாள்.

''ஆமாம்மா... ஆமாம்!'' என்றான் ரமணன்.

சமைப்பதற்குத் தேவையானதும், அவசரத்திற்குப் பயன்படுத்துவதற்கும் தேவையான பொருட்களை மட்டுமே கொண்டு வந்திருந்தார்கள். இரண்டு மூன்று நாட்களில் மற்ற பொருட்களைக் கொண்டு வரலாமென்று முடிவு.

கோயமுத்தூரில் இருக்கும் வீட்டில் தாங்கள் போனால் தங்குவதற்கேற்ற வகையில் இரண்டு அறைகளை மட்டும் வைத்துக் கொண்டு மற்ற அறைகளை வாடகைக்கு விடலாமென்று முடிவு.

பாலைக் காய்ச்சி முடித்தவுடன் ''சிம்பிளா டிஃபன் ஏற்பாடு பண்றேன்'' என்றார் அகிலாண்டம்.

தாயும் மகளும் உதவி செய்ய ஆரம்பித்தனர்.

அப்பாவும், அம்மாவும் இப்படி பானுமதியின் வீட்டாரை அழைத்திருப்பது ரமணனுக்குத் தெரியாது. மெல்லத் தந்தையிடம் -

''ஏம்பா..! இவங்க ஒரு வீட்டை மட்டும் இன்வைட் பண்ணியிருக்கீங்களே! மத்தவங்க வருத்தப் பட மாட்டாங்களா?''

''இல்லப்பா! நீயும் அவுங்க வீட்டுக்குப் போய் வந்துகிட்டு இருக்கே! இந்த ஊருக்கே குடிவந்திருக்கீங்க..! எங்களுக்குச் சொல்லலியேன்னு அவங்க நினைக்கக் கூடாது இல்லே'' என்றார்.

அந்த சமாதானத்திற்குப் பிறகு அவனால் எதும் கூற முடியவில்லை. அந்தத் தனிப்பட்ட அழைப்பால் பானுமதியின் குடும்பத்தாரும் கூட கொஞ்சம் மகிழ்ச்சியடைந்திருந்தார்கள் என்பது வெளிப்படையாகத் தெரிந்தது. அதிலும் பானுமதிக்கு ரொம்பவே மகிழ்ச்சி.

''அத்தை...! அத்தை!'' என்று அகிலாண்டத்தை சுற்றிச் சுற்றிச் வந்தாள்.

அண்ணாமலை அடுக்களைக்குள் வந்தார். ''அம்மா... அகிலாண்டம்...! சமையல் எல்லாம் போதும். மத்தியானத்துக்கு... நம்ம வீட்ல இருந்து சாப்பாடு வந்து. ஃபோன் பண்ணிச் சொல்லியாச்சு. ரெண்டு நாளைக்கு நம்ம வீட்ல இருந்து சாப்பாடு அனுப்பறோம். நீங்க பொருட்களை எல்லாம் ஒழுங்கு

படுத்துங்க'' என்றார்.

''ஐயோ... அந்தச் சிரமம் எல்லாம் உங்களுக்கு எதுக்கு?'' என்று அகிலாண்டம் மறுத்துப் பார்த்தார். அவர் ஒத்துக் கொள்ளவில்லை.

''வாம்மா... நீ...! கூடத்துல உட்கார்ந்து கொஞ்ச நேரம் சொந்த பந்தங்களைப் பத்தியெல்லாம் பேசலாம்'' என்றார்.

பெரியவர்களெல்லாம் அமர்ந்து கலகலப்பாகச் பேசுகையில் பானுமதி ரமணனிடம் வந்து ''அத்தான்! வாங்க... நாம கொஞ்ச நேரம் வீட்டைச் சுற்றிப் பார்க்கலாம்!'' என்றாள்.

''என்னத்தைச் சுற்றிப் பார்க்கறது பானுமதி? எல்லா ரூமும் காலியா இருக்கு...! இனிமேத்தான் பொருட்களைக் கொண்டு வந்து சேர்க்கணும்''

''அப்ப... வாங்க! தோட்டத்தைப் பார்க்கலாம்'' என்றாள்.

ரமணனால் மறுக்க முடியவில்லை. ஏனென்றால் வீட்டுக்காரர் உண்மையிலேயே அழகான ஒரு தோட்டம் அமைத்திருக்கிறார். தனது அப்பாவுக்கு தோட்டக் கலையில் ஆர்வம் என்று சொன்னது அவருக்கு ஒருவகையில் மகிழ்ச்சியாக இருந்தது.

அழகழகான பூஞ்செடிகளுக்கு நடுவே இருந்த ஒரு வேப்ப மரத்தினடியில் நின்றார்கள். ''நல்ல தோட்டம்... இல்லே அத்தான்! எங்க வீட்ல ரெண்டு மூணு வகை ரோஜாச் செடிங்க இருக்கு. கொண்டு வந்து வைக்கிறேன்.''

''ரோஜாப்பூவை வைக்கறதுக்கு ஆள் வேணுமே?''

''ஏன்... அத்தை வைக்க மாட்டாங்களா? இல்லேன்னா சீக்கிரமே ரோஜாப்பூவை வச்சுக்கறதுக்கு ஆள் கொண்டு வாங்க.''

''அது சரி...! ரோஜாப்பூவுக்காக ஆள் கொண்டு வந்து நான் குடும்பச் சுமை சுமக்கணுமா?'' என்றான்.

பானுமதி சிரித்துச் சமாளித்தாள்.

ரமணன் மெதுவான குரலில் கேட்டான்

''பானுமதி...! ஒரு விஷயம் உன்கிட்டே கேட்டுத் தெரிஞ்சுக்கலாமா?''

''கேளுங்க..!'' என்றாள்.

''பத்துப் பதினைஞ்சு நாளுக்கு முன்னாடி சுரபி வீட்டுக்குப் போயிருந்தேன்... அப்போ..!'' என்று இழுத்தான்

''அப்போ..?'' என்றாள்.

''சுரபி முகத்தைப் பார்த்தேன்...'' என்று அவன் இழுக்கவும்... பானுமதி முகத்தில் லேசான ஒரு சந்தோஷம் தோன்றியது போலும். என்ன இருந்தாலும் சுரபி தனக்கு இணையாக மாட்டாள் என்ற எண்ணத்தில் தோன்றிய செருக்கு அது.

''பாத்தீங்களா?'' என்றாள்.

''ஆமா...! எதனால அப்படி?'' பிறவியிலேவா?'' என்றான்.

''நெருப்புக் காயம்!'' என்றாள் பானுமதி.

''அது தெரிஞ்சுது...'' என்றான்.

''என்னமோ... வீர சாகசம் மாதிரி அவங்க சொல்லிக்கிட்டாலும் வேற ஏதோ காரணம் இருக்குற மாதிரித் தெரியுது'' என்றாள்.



எந்த விதமான பிரதிபலிப்பும் இல்லாமல் அவன் தொடர்ந்து பானுமதியின் முகத்தைப் பார்த்தான்.

''ஆமா! நீங்க எங்கயும் விசாரிச்சுராதீங்க. சுரபியோட ஃபிரண்ட் என்கிட்டே சொன்னா! ஏதோ காதல் விவகாரங்கற மாதிரி...'' என்றாள்.

... .... ...!

அவன் மௌனம் அவளுக்குள் இன்னும் ஆர்வத்தைத் தூண்டியது.

''ஆனா... மொதத்மா மறைச்சுட்டாங்க. ப்ளீஸ்! இதைத் தெரிஞ்ச மாதிரி காட்டிக்காதிங்க'' என்றாள்.

''இல்லே... நான் யார்கிட்டேயும் கேட்கமாட்டேன்'' என்றான் ரமணன்.

பானுமதியின் உற்சாகமும் தன்னம்பிக்கையும் அன்று கரை கடந்தாற் போல் பொங்கியது. மிகவும் மகிழ்ச்சியாகக் கிளம்பிப் போனாள்.

அன்றிரவு!

வீட்டு முற்றத்திலே வந்து விழுந்த வெண்ணிலவின் ஒளி, ரமணன் மனத்தைக் கொள்ளை கொண்டது.

முற்றத்தின் நடுவில் வந்து நின்று வானத்தைப் பார்த்து நிலவின் ஒளியைப் பருகி மகிழ்ந்தான்.

ஒரு நீள பெஞ்சைை இழுத்துப் போட்டு அதன் மேல் படுத்துக் கொண்டு வானத்து நிலாவை ரசித்துக் கொண்டிருந்தான். வானத்து நிலவில் தெரிந்த ''வடைசுடும் பாட்டி'' யைப் பார்த்து அவனுக்குள் புன்னகை மலர்ந்தது.

அதே நேரம்...

ஏதோ ஒரு வீட்டில் ''தங்கத்திலே ஒரு குறை இருந்தாலும் தரத்தினில் குறைவதுண்டோ...! உங்கள் அங்கத்திலே ஒரு குறை இருந்தாலும் அன்பு குறைவதுண்டோ..!'' என்ற பழைய பாடல் காற்றில் மிதந்து வந்தது.

அவனுக்கு ஏனோ சுரபியின் நினைவு வந்தது.

கூடவே பானுமதி தன்னிடம் சொன்னது நினைவுக்கு வந்தது. அதில் உண்மையிருக்குமோ என்ற சந்தேகம் கூட ரமணனுக்கு எழவில்லை. அது போல சுரபியின் பேச்சிலும் கூட அது போல ஒரு வடு இருப்பதைப் போலவும் அவனுக்குத் தோன்றவில்லை.

பானுமதி எத்தனையோ விதமாக அவன் வாயைக் கிளறி தன்னைப் பற்றி ரமணன் என்ன கருத்து வைத்திருக்கிறான் என்று அறிய முற்படும் போது ரமணனுக்கு சிரிப்புத்தான் வரும். ஆனால் சுரபி பேசிய ஒவ்வொரு வார்த்தைகளும் அவனுக்குள் அவளைப் பற்றிய மதிப்பை தோற்றுவித்தது.

பானுமதி மறைமுகமாகச் காதல் தோல்வி காரணமாக அவள் செய்த ஏதோ முயற்சியினால்தான் முகத்தில் வடுக்கள் என்ற கருத்தைக் கூறியது அவனுக்குள் எந்த விதமான பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை. மாறாக பானுமதியின் மேல்தான் அனுதாபம் பிறந்தது.

சுரபியின் தோற்றம் அழகு பற்றிய தனது கருத்துக்களுக்கு ஒரு சோதனைக் களமாக இருக்கப் போகிறது என்றுத் தோன்றியது.

சட்டென்று அது புரிந்தது.

சுரபியைத் தனக்குப் பிடிக்கிறது. அந்தத் தழும்புகளோடுக்கூட....!

இந்த ஊரில் வைத்து ஒரு ஆத்மார்த்தமான நட்பு கிடைக்குமானால் அது சுரபியிடம்தான் கிடைக்கும் என்று தோன்றியது. ஆனால் அன்றைக்கு அவள் முகத்தைப் பார்த்ததற்குப் பிறகு அவளைத் தொடர்பு கொள்ளவேயில்லையே!

உறக்கம் வருவதற்கு வெகு நேரமானது. அந்த நேரத்தில் அவன் ஆழ்மனத்தில் பெரிய கேள்வியொன்று எழும்பியது.

அலைக்கழித்தது! கேள்வி கேட்டது! பதில் சொல்லிக் கொண்டது.

கண்டிப்பாக சுரபியின் நட்பைத் தான் விட்டு விடவே கூடாது. கெட்டியாகப் பிடித்துக் கொள்ள வேண்டும் என்றெண்ணிக் கொண்ட போது, அவனை யாரோ எழுப்பினார்கள்.

''தம்பி ரூமுக்குள்ளே வந்து படுடா! பனி ஆரம்பிச்சுருச்சு...''

''என்ன... சுரபி..!'' என்று அவன் உளறிக் கொண்டே எழுந்து அதே வேகத்தில் அறைக்குள் இருந்த கட்டிலில் போய்ப் படுத்தான்.

அப்பா ''சுரபியா?'' என்று கேள்விக் குறியோடு அவனைப் பார்த்தார் என்பதை அவன் அறியவில்லை.



7

அம்மாவின் கைச்சாப்பாடு மனத்தையும் உணர்வையும் மகிழ்வித்திருந்தது.

இந்த வாரம் முழுவதும் அம்மாவின் கைச்சாப்பாடுதான். அதனால் மற்ற யார் வீட்டுக்கும் அவன் செல்லவில்லை. இன்றைக்கு மதியச் சாப்பாடு முடிந்தவுடனே ஒரு திட்டம் வைத்திருந்தான்.

அலுவலகத்தில் 'ஃப்ளெக்ஸி' டைம் என்பார்கள். அது போல் அவரவர் விருப்பப்படி போய்க் கொள்கிற மாதிரியான நேர அமைப்புத்தான். இந்த லட்சுமிபுரத்திற்கு வந்து ஒரு மாதம், அலுவலக வேலையில் ஆழ்ந்திருந்தான். இப்போது அலுவலகத்தை எப்படிக் கையாள்வது என்பது தெரிந்திருந்தது.

வழக்கம் போல் தனது பொதுச் சேவை தொடர்பான செயல்களை ஆரம்பித்து விட்டான். அந்த ஊரில் இருக்கும் மேல்நிலைப் பள்ளிக்குப் போய்த் தலைமை ஆசிரியரை சந்திக்க நினைத்தான்.

அக்கம் பக்கத்தில் உள்ள நான்கைந்து கிராமங்களில் இருந்து மாணவ, மாணவிகள் அந்தப் பள்ளிக்கு வந்து கொண்டிருந்தார்கள். அதனால் ஆயிரம் மரக் கன்றுகள் கொடுத்து மாணவர்கள் மூலமாக எவ்வளவு இடங்களில் முடியுமோ அவ்வளவு இடங்களில் நடச் சொல்ல வேண்டும் என்ற தீர்மானத்தில் இருந்தான்.

தலைமையாசிரியரைப் பார்ப்பதற்கு நேரம் கேட்டிருந்தான். தலைமையாசிரியரும் பிற்பகல் இரண்டு மணிக்கு வரச் சொல்லியிருந்தார். பார்க்கப் போனான்.

''வணக்கம்'' என்றான்.

''வணக்கம் வாங்க... தம்பி...!'' என்று வரவேற்றார் தலைமையாசிரியர் வஜ்ரவேல்.





## தலைமுடி பராமரிப்பு

*5. தலைமுடியை அலச மிகவும் சூடான நீரைப் பயன்படுத்தாதீர்கள். தலைமுடியின் வேர்கள் வலுவிழந்து விடும்.*

''ஐயா..! நான் கே.டி.எம் கம்பெனி ஆய்வகத்தில் சயிண்ட்டிஸ்ட்டா இருக்கேன்'' என்றான்.

''ரொம்ப சந்தோஷம்... தம்பி...! அப்புறம்... சொல்லுங்க..'' என்றான்.

''இல்லைங்கய்யா...! நான் ரொம்ப நாளா. இந்த சுற்றுப்புற சூழல் இயக்கத்தில் ஆர்வமா இருக்கேன்.''

''அப்படியா... உங்க பேரு..?'' என்றார் தலைமையாசிரியர். மனதுக்குள்ளே 'இவரை எங்கேயோ பார்த்திருக்கோமே' என்ற எண்ணமும் ஓடியது.

''என் பேரு ரமணன்'' என்றான்.

''ஆஹா..! இப்பப் புரிஞ்சுது...! சுற்றுப் புறச் சூழல் பற்றிய கட்டுரைகள் எழுதுவீங்க இல்லே? பத்திரிகைகள்ல உங்க ஃபோட்டோஸ் பாத்திருக்கேன். குளோபல் - வார்மிங், மரங்களின் அவசியம் பற்றியெல்லாம் எழுதுவீங்களே...'' என்றான்.

''ம்...!'' என்றான் அவன் தன்னடக்கத்துடன்.

''ஆமா... தம்பி! உங்களை மாதிரி சமூக சேவகர்கள் ரொம்ப அவசியம் தம்பி!''

''சார்... நகரப் புறங்கள்ல... மக்கள் நெருக்கம் அதிகமாயிருச்சு... அதோட இப்ப புறநகர்ப் பகுதிகளில் எல்லாம் விவசாய நிலங்களை அழிச்சிட்டே வர்றாங்க! மலைப்பிரதேசங்கள்ளேயும் மரங்களை வெட்டறாங்க! இயற்கை செம்மையா இயங்கணும்னா... ஒரு விகிதாச்சாரம் இருக்கணும். தாவரங்கள், விலங்குகள், மரங்கள், மனிதர்கள்னு - எல்லாமே ஒன்றை ஒன்று சார்ந்து இயங்குது. அதிலேயும் மரங்கள் நிழல் குடுப்பது மட்டுமில்லாம கார்பன் - டை - ஆக்ஸைடை உள் வாங்கிக்கிட்டு, மனுஷனுக்கு வேண்டிய ஆக்ஸிஜனைக் குடுக்குது. மரங்களை அழிக்கிறது - மனுஷன் தன்னையே அழிச்சுக்கற மாதிரி... அதனாலதான் நாங்க 'மரம் நடு இயக்கம்'னு ஒண்ணு பண்றோம். அதுல ஒரு செயல்பாடு என்னன்னா... ஸ்கூல் பசங்களை அணுகி... மரக்கன்றுகள் குடுத்து ஒவ்வொருத்தரும் குறைஞ்சது ஒரு மரமாவது, அவங்க அக்கம் பக்கத்துல வச்சு வளர்க்கணும்னு சொல்றோம். நீங்க பர்மிட் பண்ணினீங்கன்னா... இந்தப் பள்ளிக் கூடத்துக்கும் ஆயிரம் மரக்கன்றுகள் குடுக்கறோம். இங்க ஆயிரத்துநூறு குழந்தைகள் இருக்காங்கன்னு கேள்விப்பட்டேன்'' என்றான்.

''நல்ல விஷயம்ப்பா! ஆனா.. மேலதிகாரிகள்கிட்டே பர்மிஷன்... வாங்கணுமே...!''

''அதெல்லாம் எங்க பொறுப்பு...! நாங்களே முதன்மைக் கல்வி அதிகாரியைப் பார்த்துப் பர்மிஷன் வாங்கியிருக்கோம். அது மட்டுமில்ல... சுற்றுப் புறச்சூழல் பற்றிய ஒரு கண்காட்சி கூட நடத்தறோம். நீங்க பர்மிட் பண்ணினீங்கன்னா... ஒரு ஞாயிற்றுக்கிழமையில் நம்ம பள்ளிக்கூடத்துல ஒரு அஞ்சு ரூம் குடுத்தீங்கன்னா... போதும்... நடத்திரலாம்'' என்றான்.

தலைமையாசிரியர் மிகவும் மகிழ்ந்தார். அதே சமயம் டெலிஃபோன் ஒலித்தது. தலைமையாசிரியர் எடுத்தார்.

''ஹலோ... சுரபியா? சொல்லும்மா!'' என்றார்.

தலைமையாசிரியரின் குரலில் தெரிந்த வாஞ்சையைப் பார்த்து அவனுக்கும் மகிழ்ச்சியாக இருந்தது.

அந்தப் பக்கம் சுரபி என்ன சொன்னாளோ தெரியவில்லை.

''நல்லதும்மா...! அப்புறம்... நீ அடிக்கடி சொல்லுவியே ரமணன் சாரைப் பற்றி... அவரே இப்ப இங்கே உட்கார்ந்துகிட்டிருக்காரும்மா! ஆமா... மரம் நடு இயக்கமாம். அப்படியே... உனக்கே பர்ஸனலாத் தெரிஞ்சவராயிட்டாரா... நல்லதாப் போச்சு போ...! அப்புறம் பள்ளிக்கூடத்து பக்கம் வாம்மா...!'' என்று சில நிமிடங்கள் பேசிவிட்டு ஃபோனை ஆஃப் செய்தார்.

அவனைப் பார்த்துப் புன்னகைத்தார்.

''ரொம்ப நல்ல பொண்ணு!'' என்றார். அவனும் புன்னகைத்தான்.

''தம்பி..! சுரபி... இந்த ஸ்கூல்னால ஒரு வகையில பாதிக்கப்பட்டிருக்கு...'' என்றார். அவன் திகைத்தான். ஒரு பள்ளிக்கூடம் எப்படி ஒருவரை பாதிக்க முடியும்?

''புரியலே...!'' என்றான்.

''சொல்றம்பா...! சொன்னாத்தானே உங்களுக்குப் புரியும்?... சுரபி நம்ம ஸ்கூல்ல பெற்றோர் ஆசிரியர் கழகத்தால நியமிக்கப்பட்ட ஆசிரியராக கொஞ்ச நாள் வேலை செஞ்சுது'' என்றார்.

அவன் கூர்ந்து கேட்க ஆரம்பித்தான். தனக்கான முக்கியமான செய்தி ஏதோ தலைமையாசிரியரிடமிருந்து வரப் போகிறது என்று புரிந்தது.

''ஆமாங்க... தம்பி! ஒரு நாள் சத்துணவுக் கூடத்துக்காக வாங்கி வச்சிருந்த விறகில தீப் பிடிச்சிருச்சு... இத்தனைக்கும் நாங்க அந்த விறகுக் கட்டைத் தள்ளி அந்தக் காம்பவுன்டுச் சுவரோரமாத்தான் வச்சிருந்தோம். காம்பவுன்டைத் தொட்டாப்ல தெருவில் நடந்து போன ஆசாமி யாரோ ஒருத்தர் சிகரெட்டைப் பத்த வச்சுட்டு வீசின குச்சியினால நெருப்புப் பிடிச்சிருச்சு. எப்படியோ தீ பரவியிருச்சு...! பக்கத்துல ஒரு ஆறாம் வகுப்புக் குழந்தை விளையாடிட்டிருந்தது. அந்தக் கட்டு மேல ஏறிடுச்சு. அதைக் காப்பாத்தப் போன ஆயா சேலையில நெருப்பு. சுரபிதான் டக்குனு பாய்ஞ்சு ரெண்டு பேரையும் இந்தப் பக்கம் இழுத்துப் போட்டுச்சு...! ஆனா அந்த முயற்சியில் அந்தப் பொண்ணு கீழ விழுந்ததுல ஒரு பெரிய மரக்கட்டை நெருப்பு... அது கன்னத்துல பட்டுடுச்சு...! அப்ப அந்தப் பொண்ணு பட்ட பாடு இருக்கே...!'' என்றார்.

அவர் குரலில் வேதனை தெரிந்தது.

ரமணன் முகத்தில் வேதனைப் படர்ந்தது!

''அதுக்கப்புறம் ட்ரீட்மென்ட் நடந்துச்சு.. அந்தக் குழந்தையோட அப்பா... கொஞ்சம் வசதியானவர். நல்லா செலவு செய்யத் தயாரா இருந்தாரு. ஆனா... அந்தப் பொண்ணு மறுத்துருச்சு...!'' என்றார்.

''அவங்க முகத்தைப் பார்த்தேன்'' என்றான் ரமணன் - ஆழ்ந்த வருத்தம் தொனித்த குரலில்.



''பாத்தீங்களா?'' என்றார் - ஆதங்கம் தொனிக்கும் குரலில். சற்று நேரம் மேஜையைப் பார்த்தபடி அமர்ந்திருந்தார். பிறகு தொடர்ந்து -

''ரெண்டு உயிரைக் காப்பாத்துச்சு அந்தப் பொண்ணு. அது மட்டுமல்லாம... விறகு நெருப்பில் தானாகத்தான் தவறி விழுந்தேன்னு போலீஸ்ல சொல்லுச்சு. இல்லேன்னா... எனக்குப் பெரிய பிரச்சினை ஆகியிருக்கும்...'' என்றார்.

மறுபடியும் மௌனம்.

''ஆனா... இன்னைக்கும் அந்தப் பொண்ணை நினைச்சா... எனக்குத் தூக்கம் வர்றதில்லை. துரதிஷ்ட வசமா எனக்கு ரெண்டும் பொண்ணாப் போச்சு... ஒரு மகன் மட்டும் இருந்திருந்தா கண்டிப்பா அவனுக்கு அந்தப் பொண்ணைக் கல்யாணம் பண்ணி வச்சிருப்பேன். ஆனா... இப்ப.. அந்த நெருப்புக் காயத்துனாலயே அதுக்கு கல்யாணம் கேள்விக் குறியாயிருக்கு. அந்தப் பொண்ணு 'எனக்கு கல்யாணமே வேண்டாம். நான் சமூக சேவகியாகவே... இருந்துக்கப் போறேன்'னு... சொல்லிட்டிருக்கு...'' என்றார்.

ரமணன் திகைத்துப் போய்க் கேட்டுக் கொண்டிருந்தான்.

''சார்! இப்பல்லாம் பிளாஸ்டிக் சர்ஜரி அது இதுன்னு... நிறைய இருக்கு...! ஓரளவுக்கு முகத்தைத் தேத்திரலாம்'' என்றான்.

''நிறைய செலவாகும்ப்பா! நான் செலவு செய்யறேன்னு... சொல்றேன். அந்தப் பொண்ணு ஏத்துக்க மாட்டேங்குது'' என்றார்.

ரமணன் பெருமூச்செறிந்தான்.

''சமுதாயச் சிந்தனையுள்ள பொண்ணுப்பா'' என்றார்.

''ஆமாங்க... சார்! நான் அவங்கக்கிட்டே அடிக்கடி பேசறனே...!'' என்றான். சற்று நேர அமைதிக்குப் பிறகு -

''அப்புறம்... சார்! என் வேண்டுகோளுக்கு...''

''கண்டிப்பா... ஹெல்ப் பண்றேம்ப்பா! ஆனா... எத்தனை பயலுக ஒழுங்கா... வளர்ப்பாங்கன்னு தெரியலியே!'' என்றார்.

''ஆர்வமுள்ள குழந்தைங்க பேரை மட்டும் கேட்போம் சார்! எப்படியும் கொஞ்சம் குழந்தைங்க ஆர்வம் காட்டினா... மத்த குழந்தைகளும் இன்ட்ரஸ்ட் காட்டுவாங்க'' என்றான்.

''சரிப்பா ! வருஷ ஆரம்பம்தானே இப்போ! முதல்ல ஒரு ஐநூறு கன்றுகளைக் கொடுப்போம். வருஷா வருஷம் அதே குழியில மரம் நடற, மரம் நடு விழா மாதிரி ஆயிடக்கூடாதில்லே...!'' என்றார் தலைமையாசிரியர்.

அவன் சிரித்தான். ''அது அப்படித்தான் சார்...! நிறைய விஷயங்கள் ஃபார்மாலிட்டியா ஆயிடுது...'' என்றான் ரமணன்.

தலைமையாசிரியருடன் சற்று நேரம் மரக்கன்றுகளை வழங்குவது பற்றிப் பேசிக் கொண்டிருந்தான். அதற்குப் பிறகு விடைபெற்றுக் கிளம்பினான்.

அலுவலகத்தில் - வேலையில் ஆழ்ந்துவிட்டான் என்றாலும், அன்றைய வேலைகளை முடித்து, வீட்டுக்குக் கிளம்பும் போது மனம் மீண்டும் சுரபியிடம் தாவியது.

இரண்டு பேரைக் காப்பாற்றுவதற்காக சட்டென்று பாய்வதானால் எவ்வளவு

துணிவு வேண்டும். அழகையே பெண்கள் தங்கள் ஆயுதமாகவும் ஆதாரமாகவும் நினைக்கிற இந்தக் காலத்தில் - அழக சாதனங்களுக்காக மாய்ந்து மாய்ந்து செலவு செய்கிற இந்தக் காலத்தில் - தன் அழகைப் பற்றிக் கவலை கொண்டிராத பெண், அதிலும் அதை ஒரு சேவைக்காகத் துறக்கிற பெண் எவ்வளவு உயர்ந்தவளாக இருக்க வேண்டும்?

அன்றைக்குப் பிறகு ஏனோ... அவன் அவளைத் தொடர்பு கொள்ளவில்லை. ஒன்றிரண்டு முறை தொடர்பு கொண்ட போதும் அவள் கிடைக்கவில்லை. ஆனால் இன்றைக்கு சுரபியின் நினைவே அவனை ஆட்கொண்டது.

அந்தப் பெண்ணின் ஒதுக்கத்தில் இருந்து அவளை வெளியே கொண்டு வர வேண்டும் என்று முடிவு செய்தான். தலைமையாசிரியர் இன்னொரு வேண்டுகோள் வைத்திருந்தார். ஒரு நாள் காலைப் பிரார்த்தனைக் கூட்டத்திலோ, அல்லது அறிவியல் கழகக் கூட்டத்திலேயோ, அவன் வந்து சுற்றுப் புறச் சூழல் பற்றிப் பேச வேண்டும் என்று வேண்டுகோள் வைத்திருந்தார். அதற்காகவும் ஏற்பாடுகள் செய்ய வேண்டும் என்று யோசித்துக் கொண்டே வீட்டுக்குள் நுழையும்போது பூபேந்திரன் ஃபோனில் அழைத்தான்.

''ரமணா...! எங்கே இருக்கே?'' என்றார்.

''இப்பத்தான்டா வீட்டுக்குள்ள நுழையறேன்'' என்றவன் தலைமையாசிரியரைப் பார்த்ததையும் சுரபி பற்றி அவர் கூறியதையும் பகிர்ந்து கொண்டான்.

''நீ சொன்ன அன்னைக்கே நான் நெனச்சேன்டா... இந்தப் பொண்ணு இப்படித்தான் ஏதாவது செஞ்சிருக்கும்...'' என்றான்.

''எவ்வளவு நல்ல மனசுடா!'' என்றான்.

''கண்டிப்பா... அந்தப் பொண்ணு அனுதாபத்தை விரும்பற பொண்ணா இருக்காது...'' என்றான் பூபேந்திரன்.

''ஆமாம்பா...! அப்படித்தான் நானும் நெனச்சேன்'' என்றான். பிறகு ''அந்தப் பொண்ணுக்கு ஏதாவது செய்யணும்பா'' என்றான்.

''ஆமா...!'' என்றான் பூபேந்திரன்.

''முதல்ல... அந்தப் பொண்ணோட ஒதுக்கத்த சரி செய்யணும்'' என்றான் ரமணன்.

''அப்படின்னா..?''

''இப்ப நாம அந்தக் கண்காட்சி பிளான் பண்றோமே அதுல எல்லா ஆக்டிவிட்டீஸ்லயும் அந்தப் பொண்ணையும் இன்வால்வ் பண்ணுவோம்'' என்றான் மறுபடியும்.

''செய்...!'' என்றான் பூபேந்திரன்.

தலைமையாசிரியர் அவனை உரையாற்றுமாறு கேட்டிருந்தது நினைவுக்கு வர தனது அறையில் தேடினான். அப்போதுதான் புரிந்தது - வீடு மாற்றினாலும் கூட இன்னும் தனது புத்தகங்களையெல்லாம் முழுமையாகக் கொண்டு வந்து சேர்க்கவில்லை என்பது

கைக்கடிகாரத்தைப் பார்த்தான். ஏழரை மணியாகி இருந்தது.

சட்டென்று பைக்கை எடுத்தான் ''அப்பா! நான் கொஞ்சம் வெளியே



போயிட்டு வரேன்...!'' என்றான்.

சுரபியின் வீட்டுக் காம்பவுண்டுக்குள் நுழைந்த நேரம் அவனைக் கடந்து சென்ற காரை அவன் கவனிக்கவில்லை.

வாயிற் கதவைத் தட்டினான். வழக்கம் போல அருணாதான் திறந்தாள்.

''எம்.அருணா...! எம் சுரபி இருக்காங்களா?''

''நாங்கள்ளாம் இருக்காம எங்க போறோம்? நீங்கதான் ஊருக்குள்ள இருக்கீங்களான்னு தெரியலே'' என்றாள்.

அந்தக் குற்றச்சாட்டில் இருந்த நியாயம் அவனை உறுத்தியது.

''நாங்கள்ளாம் இருக்கோம். அது மட்டுமில்ல... இந்த ஊருக்கே குடி வந்துட்டோம்ல்ல...'' என்றான்.

''அக்கா...! ரமணன் சார்!'' என்று தங்கை குரல் கொடுக்க, சுரபி வந்தாள்.

வழக்கம் போல நடையில் ஒதுங்க அவன் உற்சாகமாக -

''ஒருத்தர் வந்தா அவங்களை உட்காரக்கூட சொல்ல மாட்டீங்களா?'' என்று அமர்ந்தான்.

''மேடம்... சுரபி! உங்கக்கிட்ட ஒரு ஹெல்ப் கேக்க வந்திருக்கேன்...'' என்றான்.

''சொல்லுங்க.. சார்!'' என்றாள் சுரபி. அந்தக் குரல் மிக எச்சரிக்கையாகக் கையாளப்பட்டது அவனுக்கும் புரிந்தது.

''இல்லே! ஸ்கூல்ல ஒரு ஸ்பீச் குடுக்கச் சொன்னார் ஹெட்மாஸ்டர். சுற்றுச் சூழல் பற்றிப் பேசணும்! உங்ககிட்டே மெட்டீரியல் இருந்தா'' என்றான்.

அவள் சிரித்தாள். ''என்ன சார் இது? நீங்க இந்த மேட்டர்ல அதாரிட்டி. நீங்க என்கிட்டே போயி...''

''அப்படியெல்லாம்.... இல்லே! ஸ்கூல் லெவல் கொஞ்சம் எளிமையாச் சொல்லணும் இல்லே... அதான் உங்கக்கிட்டே கொஞ்சம் டிஸ்கஸ் பண்ணலாம்னு....'' என்றான்.

செய்தார்கள்.

பேசப் பேசத்தான் சுரபி இதில் எவ்வளவு ஆர்வமாக இருக்கிறாள் என்று அவனுக்குப் புரிந்தது.

அவன் மனம் நிறைவானதாக உணர்ந்தான். பேச ஆரம்பிக்கும்போதுதான் அந்தக் காயங்களின் மேல் அவன் மனம் பதிந்து கொஞ்சம் அதிர்ந்து திரும்பியது. ஆனால் கொஞ்ச நேரத்திலேயே விஷயத்தில் கவனம் செல்ல பேச்சு கலகலப்பாய் மாறியது.

சற்று நேரத்திற்குப் பிறகு புறப்படும்போது அவன், மெதுவான குரலில் சொன்னான்.

''ஹெட்மாஸ்டர் உங்க தழும்பைப் பற்றிச் சொன்னார்''

''ரொம்ப எத்தி விட்டுட்டாராக்கும்! அதை விடுங்க சார்!'' என்றாள் சுரபி.

''நாங்க விடத் தயாரா இருக்கோம். நீங்க விடத் தயாரா இல்லையே!'' என்றான் ரமணன்.

அவள் திகைத்தாள்.

''ஆமாங்க... சுரபி...! நீங்க விடத் தயாரா இருந்தா தைரியமா வெளியே வரணும்.

நாலு பேரோட பழகணும்''என்றான்...

அவள் பதில் சொல்ல முடியாமல் நிற்கையில் அவன் சொன்னான்.

''சுரபி! ஒரு காயம் கூட அழகா இருக்க முடியமா என்ன? உங்க காயம்...! அழகா இருக்கு!'' என்று கூறி கிளம்ப...

அவள் திகைப்புடனேயே, அவன் பைக் கிளம்பிச் செல்வதைப் பார்த்தாள்.



8

''ப்ரோகிராம் களை கட்டிருச்சு இல்லே...!'' என்றான் பூபேந்திரன் உற்சாகமாக.

''ஆமாப்பா!'' என்றான் ரமணன். அதற்குச் சற்றும் குறையாத உற்சாகத்துடன்.

அந்தப் பள்ளிக்கூடத்தின் ஐந்து பெரிய அறைகளில் கண்காட்சிக்கான மாடல்கள் வைக்கப்பட்டிருந்தன. கண்காட்சிகளில் வைக்கப் படுவதற்கான மாடல்கள் தயாரிப்பது எப்படி என்று கேள்வி வந்தபோது சுரபிதான் அற்புதமான அந்த யோசனையைச் சொன்னாள். ஐந்தாறு தலைப்புகள் கொடுத்து பள்ளிக் குழந்தைகளையும், கல்லூரி மாணவ, மாணவிகளையும் மாதிரிகள் தயாரிக்கச் சொன்னாள்; அவர்களுக்கும் சிந்திக்க ஒரு வாய்ப்புக் கொடுத்தாற் போல இருக்கும். நோக்கமும் நிறைவேறும் என்றாள்.

அப்படியே செய்தார்கள்.

கல்வித் துறையும் ஆர்வம் காட்டியதால் மாடல்கள் வந்து குவிந்தன. நீர் மாசுபடுதலைக் காட்டும் மாதிரிகள், காற்று மாசு படுதலைக் காட்டுக் மாதிரிகள், ஒலியினால் ஏற்படும் பாதிப்புகள் என்று எல்லாவிதமான மாசுபடுதல்களையும் மாடல்களை வைத்து சுட்டிக் காட்டினார்கள்.

கல்லூரி மாணவர்கள் தங்கள் தகுதிக்கேற்ப சில கண்டுபிடிப்புக்களையும் கூட அறிமுகப் படுத்தினார்கள். சூரிய ஒளியை எப்படிப் பயன்படுத்தலாம் என்பதற்கு அவர்கள் கொடுத்திருந்த யோசனைகள் மிகவும் அற்புதமாக இருந்தன.

ஆச்சரியம் எனன்வென்றால் அவன் வேலை செய்யும் நிறுவனத்தின் முதலாளி குடும்பத்தினர், அவன் அனுப்பியிருந்த அழைப்பிதழை மதித்து வந்ததுதான். அது மட்டுமல்லாமல் சில மாணவர்களின் கண்டுபிடிப்பைப் பாராட்டியதோடு அது போன்ற புதிய கண்டுபிடிப்புகளை சந்தைப் படுத்துவதாக இருந்தால் உற்பத்திச் செலவு என்ன ஆகும் என்பது போன்ற மதிப்பீடுகளையும் கேட்கவும் மாணவர்கள் மிகவும் உற்சாகமானார்கள்.

''சார்! யாரார்கிட்டயோ போய் கேட்டுப் பார்த்தோம். யாரும் ஆர்வம் காட்டலே. இப்படி ஒரு கண்டுபிடிப்பை காலேஜ் ஸ்டூடண்ட்ஸ் செஞ்சுருக்கோம்னு அட்லீஸ்ட் வெளியுலகம் தெரிஞ்சுக்கவாவது செய்யட்டும்னுதான் இந்தக் கண்காட்சிக்கு வந்தோம். லாட்டரி அடிச்ச மாதிரி இருக்கு... ரொம்பத் தேங்ஸ் சார்...'' என்று ரமணனுக்கு மாய்ந்து மாய்ந்து நன்றி சொன்னார்கள்.

ரமணன் புன்னகைத்தான். ''ரொம்ப சந்தோஷப்பட்ராதீங்க! உற்பத்திக்கேத்த



மாதிரி, ஓரளவுக்கு விலை குறைவாவும் கொடுக்கணும்னா... ரொம்ப மெனக்கெடணும்ப்பா...'' என்றான்.

''சார்! இப்படி ஒரு ஸ்டேஜ் வர்றதுக்கு எவ்வளவு உழைச்சிருப்போம் தெரியுமா? பட்ட பாட்டுக்குப் பலன் கிடைக்கறப்போ... இன்னும் கொஞ்சம் உழைக்க மாட்டோமா...'' என்றார்கள்.

''தட்ஸ் தி ஸ்பிரிட்'' என்று அவனும் பாராட்டினான்.

சற்று கழித்து சுரபியிடம் பேசிக் கொண்டிருக்கும்போது சொன்னான்.

''சுரபி... உங்க ஐடியாவுக்குத்தான் நன்றி சொல்லணும். சும்மா சொல்லக் கூடாது. ஸ்டூடன்ட்ஸ் வெட்டிட்டு வாங்கன்னா கட்டிட்டே வந்து நிற்கறாங்க'' என்றான்.

''பின்னே? நாமதான் அவங்களை சரியாப் பயன் படுத்திக்கறது இல்லே! வெறும் மதிப்பெண்கள் வாங்கும் இயந்திரங்களா அவர்களைப் பயன்படுத்திக்கிட்டிருக்கோம்'' என்றாள்.

''என்ன செய்வது? இளைஞர் உலகம் அப்படித்தான் இருக்கு. எல்லா பெற்றோர்களுக்கும் தங்கள் பிள்ளைகள் கம்ப்யூட்டர் என்ஜினியராகணும். இல்லே டாக்டராகணும். எப்படியோ லட்சமா சம்பாதிக்கணும் அப்படின்னு ஆசை. வெறும் பணம் மட்டுமே வாழ்க்கையில்லை வேற சில நோக்கங்களும் வாழ்க்கைக்கு இருக்குன்னு புரியறதில்லை'' என்றான்.

சுரபி புன்னகைத்தாள்!

பள்ளிக்குக் காலையிலேயே வந்து விட்டாள் சுரபி. அதற்கு முன்பாகவே ரமணன் தன் குழுவினரோடு வந்து ஏற்பாடுகளைப் பார்வையிட்டுக் கொண்டிருந்தான். அதற்கு முதல் நாளே கண்காட்சிக்குத் தேவையான எல்லா ஏற்பாடுகளையும் செய்து விட்டு ஒவ்வொரு மாடலுக்கும் இடம் ஒதுக்கிக் கொடுத்து... என்று எல்லா ஏற்பாடுகளிலும் சுரபியும் கைகொடுத்தாள். ஆனால் முதல் நாளைக்கும் இன்றைக்கும் அவளிடத்திலே ஒரு சின்ன மாற்றம் இருந்தது.

முதல் நாள் பள்ளிக்கு வந்த சுரபி தன் முகத்தை மறைத்தாற் போல ஸ்கார்ஃப் கட்டிக் கொண்டு வந்தாள். ரமணன் அதைக் கவனித்தாலும் கவனிக்காதவன் போலவே இருந்து கொண்டான். ''வந்தாளே அதுவே பெரிது...!'' என்று எண்ணிக் கொண்டான். ஆனால் சுரபியின் வருகை எவ்வளவு உதவிகரமாக இருந்தது என்று பிறகுதான் அவனுக்குப் புரிந்தது.

சுரபி அந்தப் பள்ளியில் வேலை செய்தவள் என்பது மட்டுமல்லாமல் தலைமையாசிரியரின் நன்மதிப்பைப் பெற்றவளாக வேறு இருந்ததால் பள்ளியில் இருந்து எவ்வளவு வசதிகளைப் பெற்றுத் தர முடியுமோ அவ்வளவு ஏற்பாடு செய்து கொடுத்தாள்.

அஞ்சறை பெட்டி

## தலைமுடி பராமரிப்பு

6. தலைவாரும் சீப்பு, பிரஷ் ஆகியவற்றை ஒவ்வொருவருக்கும் தனித் தனியே வைத்துக் கொள்வது அவசியம். ஒருவர் தலையில் உள்ள பொடுகு, பேன் போன்றவை மற்றவர்களுக்கு பரவாமல் தடுக்கலாம்.

அலைந்து ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருந்த போது தேநீருக்காக நின்றார்கள். அப்போது சுரபியிடம் ரமணன் சொன்னான்.

''சுரபி...! உங்க மேலேயே உங்களுக்கு நம்பிக்கையில்லேயோன்னு தோணுது'' என்றான்.

''எப்படி?'' என்றாள்.

''எதுக்காக.... இந்த ஸ்கார்ஃப்?'' என்றான்.

அவள் ஒரு நிமிடம் தரையைப் பார்த்தாள். பிறகு சொன்னாள்.

''இல்லே! என் முகத்தைப் பார்க்கறவங்க முகத்துல எல்லாம் ஒரு அதிர்ச்சி தோணும். எதுக்காக அவங்களுக்கு அப்படி ஒரு 'இன்கன்வீனியன்ஸ்' அதனாலதான்...'' என்றாள்.

''இருக்கலாம். முதல் தடவை அப்படித் தோணலாம். ஆனா... பழகிப் போச்சுன்னா... இதை ஒரு விஷயமா எடுத்துக்க மாட்டாங்க...'' என்றான்.

சுரபி ஒன்றும் பேசவில்லை. ஆனால் அவள் அதை உள்வாங்கிக் கொண்டாள் என்று ரமணனுக்குப் புரிந்தது. மேலும் மேலும் வற்புறுத்தலாகப் பேசக்கூடாது என்று எண்ணிய ரமணன் அதற்குப் பிறகு அதைப் பற்றிப் பேசவேயில்லை.

இன்றைக்கு காலையில் சுரபி வந்தபோது ஸ்கார்ஃப் இல்லாமல் வந்தாள். பலருடைய முகங்களிலும் முதலில் ஒரு விதமான அதிர்ச்சி தோன்றி மறைந்தாலும் எல்லாரும் ஒரு சில கணங்களில் தேறிக் கொண்டார்கள். அதோடு மட்டுமல்லாமல் அந்த தழும்பு எப்படி ஏற்பட்டது என்ற காரணக் கருத்தும் அவர்களுக்குள்ளே மெல்லிய குரலில் பரிமாறிக் கொள்ளப்பட்டதாலோ என்னவோ எல்லாரும் சுரபியை ஒருவிதமான மரியாதையோடுதான் பார்த்தார்கள். கொஞ்ச நேரத்தில் அது ஒரு விஷயமே இல்லை என்பது போல் ஆகிவிட்டது.

அது மட்டுமல்லாமல் வேறு ஒன்றும் நடந்தது. விழாவுக்கு முதன்மைக் கல்வி அதிகாரியும் மாவட்டக் கல்வி அதிகாரியும் வந்திருந்தார்கள். கண்காட்சியின் தரம் பார்த்து மகிழ்ந்து போன முதன்மைக் கல்வி அதிகாரி அங்கிருந்தே தன் உதவியாளருக்கு ஃபோன் செய்தார்.

''சார்! சுற்றுப்புறச் சூழல் பற்றி, நிறைய விஷயங்கள் சொல்லியிருக்காங்க... மாடல்ஸ் எல்லாம் சூப்பர். புதிய கண்டு பிடிப்புக்களை வேற அறிமுகப்படுத்தறாங்க. அதனால சுற்று வட்டாரத்துல இருக்கற எல்லாப் பள்ளிக் கூடங்களுக்கும் தகவல் குடுங்க... ஒன்பதாம் வகுப்புக்கு மேல உள்ள குழந்தைகள் எவ்வளவு பேர் முடியுமோ அவ்வளவு பேர் வந்து பார்க்க ஏற்பாடு செய்ங்க'' என்றார்.

ரமணனுக்கு மகிழ்ச்சியாக இருந்தது. நல்ல விஷயங்களை வாங்கிக் கொள்வதற்கு மக்கள் தயாராக இல்லையென்று யார் சொன்னார்கள்? கொடுக்கிற விதத்தில் கொடுத்தால் வாங்கிக் கொள்கிறார்கள். இதுதான் சமயமென்று அவரிடம் ''சார் பர்மிஷன் குடுத்தா... நாளைக்குக் கூட 'எக்ஸ்டென்' பண்ணலாம்...'' என்றான்.

''கண்டிப்பா...! இதுக்கெல்லாம் பர்மிஷன் இல்லாம வேற எதுக்குக் குடுக்கறது? செய்யுங்க சார்?'' என்றார் அதிகாரி.



''காரியவாதி... சார்... நீங்க!'' என்று சிரித்தாள் சுரபி.

ரமணனின் நண்பர் பட்டாளத்தைப் பார்த்து அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது. விளையாட்டாகப் பேசிக் கொண்டார்கள். சிரித்தார்கள். ஆனால் வேலை பாட்டுக்கு ஜம்மென்று நடந்தது. அத்தனை ஆர்வமாகச் செய்தார்கள்.

இருபத்தைந்து பேர் தங்கள் கழகத்தின் மூலமாகச் செலவினங்களைப் பகிர்ந்து கொண்டார்கள் என்பது அவளுக்கு ஆச்சரியமான செய்தி.

''எத்தனை பேருக்கு எவ்வளவு அருமையான செய்திகள் போய்ச் சேருது...'' என்று சிரித்துக் கொண்டாள். சொல்லி முடித்தவுடனே அவள் கண்களில் குறும்பு மின்னியது.

''அப்புறம்?'' என்றாள்.

அவன் முகத்தில் ஒரு குறுகுறுப்பு. ''அப்புறம்?'' என்றான் அவனும்.

''இல்லே! உங்க பானுமதி வர்லையா?'' என்றாள்.

''எங்க பானுமதியா? இல்லம்மா. பானுமதி அவ்வளவுதான்'' என்றான் கண்களில் ஒரு விதமான விசித்திரப் பார்வைத் தோன்ற.

''இல்லையே! அன்றைக்கு வந்து கூப்பிட்டவுடனே மிரண்டு போய் ஓடினீங்களே?'' என்றாள்.

அன்றைக்கு விஷயத்தை அவள் மறக்கவில்லை என்பது நன்றாகப் புரிந்தது.

''ஹல்லோ...! மிரண்டு போய்ப் போகலை. ஜஸ்ட் டு அவாய்ட் எம்பாரஸ்மெண்ட்'' என்றான்.

''ஓஹோ...'' என்றாள்.

அவன் குபீரென்று சிரித்தான். ''என்னடா... வம்பாய் போச்சு... பானுமதி என்னன்னா... 'உங்க சுரபி'ங்கறாப்ல 'நீங்க என்னடான்னா. உங்க பானுமதி'ங்கறாப்ல... அப்பப்பா லேடீஸ் இருக்கீங்களே?'' என்ற தோள் குலுங்கச் சிரித்தான்.

''ஓ! அங்க அவங்கக்கிட்டே 'எங்க சுரபியில்ல வெறும் சுரபி'ன்னு சொல்லீட்டீங்களா?'' என்றான்.

அவன் சிக்கிக் கொண்டாற் போல விழித்தான்.

''இல்ல! பேச்சை மாத்திடுவேன்'' என்றான்.

அவள் இதை எதிர்பார்க்கவில்லை. கொஞ்சம் சங்கடமான மௌனத்துடன் நின்றாள்.

''ம்! ஏதோ கேள்வி கேட்டீங்களே... பானுமதி வர்லையான்னு

''பானுமதிக்கு இதெல்லாம் பிடிக்காதுன்னு நினைக்கறேன். ஏதோ நகை, புடவைக் கண்காட்சின்னு இருந்தா வருவாங்களாயிருக்கும்!'' என்றாள்.

''ஹலோ! பானுமதி... எங்க க்ளோஸ் ரிலேடிவ். தவிர்க்க முடியாத ஒரு நபர். அவ்வளவுதான். புரிஞ்சுக்குங்க'' என்றான்.

இப்படி ஒரு விளக்கத்தை எதற்காக இந்தப் பெண்ணிடம் சொல்கிறோம் என்று அவனுக்குத் தோன்றிய அதே கணத்திலேயே இப்படி ஒரு விளக்கம் எதற்காகத் தனக்கு சொல்லப்படுகிறது என்று அவளும் யோசிக்க ஆரம்பித்தாள்.

அதற்குள் யாரோ அழைக்கவே அங்கிருந்து நகர்ந்தாள் சுரபி. அளவான அழகான கருகருவென்று சுருட்டை முடி. ''புஷ்'' என்று அந்தச் சுருள் முடி எழுந்து

நிற்பதைப் பார்க்கும் போது மிகவும் அழகாக இருந்தது. ரமணனும் சட்டென்று அங்கிருந்து நகர்ந்தான்.

அடுத்த நாள் அலுவலகத்தில் அவனுக்கு சிறப்பு அனுமதி கொடுத்தார்கள். அதனால் கண்காட்சி சிறப்பாகவே நடந்தது.

மாலையில் சின்னதாக ஒரு நிறைவு விழா வைத்திருந்தார்கள். முடிகிற நேரம் பானுமதி வந்தாள். வேக வேகமாக ஒரு சுற்றுச் சுற்றினாள். அவள் சுற்றிப் பார்த்ததே அவன் மனதுக்கு ஒரு நிறைவு தரவேண்டும் என்பதற்காக இருந்தது போலத் தோன்றியதே தவிர இயல்பான ஆர்வத்தினால் அல்ல என்பது அவனுக்குப் புரிந்தது.

ஒரு குறுஞ்சிரிப்புடன் அவன் அவள் ஒவ்வொரு அறைக்குள்ளும் போய் விட்டுப் பத்தே நிமிஷத்தில் வெளிவருவதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான்.

''ம்... நல்லாருக்கு!'' என்றாள் அவன் அருகில் வந்து நின்று கொண்டு.

''அப்படியா? எந்த மாடல் உங்களுக்கு ரொம்ப நல்லாப் பிடிச்சுது?'' என்றான் ரமணன்.

அவள் இந்தக் கேள்வியை எதிர்பார்க்கவில்லை போலும்.

''ம்... ஏன் அப்படிக் கேட்கறீங்க? எல்லா மாடலும்தான் நல்லா இருந்துச்சு...! எல்லா மாடலுக்குப் பின்னாலும் எவ்வளவு உழைப்பு இருக்கு? அப்ப எப்படி இந்த மாடல் நல்லா இருந்துச்சு... அந்த மாடல் நல்லா இருந்துச்சுன்னு சொல்ல முடியும்?'' என்றான்.

''அப்படிப் போடு!'' என்று அவள் சமாளித்த விதத்தை அவன் மனதுக்குள் பாராட்டிக் கொண்டான்.

''சரி...! விழாவுக்கு இருக்கலாமே?'' என்றான்.

''ம்...! கண்டிப்பா இருக்கேன்!'' என்றாள்.

பள்ளியிலே ஒரு சிமெண்ட் மேடை இருந்தது. அதிலேயே மேடை அலங்காரம் செய்தார்கள். பேக்டிராப் மற்ற அலங்காரப் பொருட்கள் எல்லாமே பள்ளியிலிருந்தே கொடுத்து விட்டார்கள். ஆசிரியர்கள் கூட ஆர்வமாக உதவினார்கள். அவர்கள் பாடத் திட்டத்தில் இருந்த பல பாடங்களுக்குத் தேவையான மாடல்கள் இருந்ததால் அந்தக் கண்காட்சி மிகவும் உதவிகரமாக இருந்ததாக மகிழ்ந்து பாராட்டினாரகள். அதனால் வலிந்து உதவி செய்தார்கள்.

ஏற்கனவே தெரிந்தவள் என்பதால், சுரபியைக் கொண்டாடிக் கொண்டார்கள். அவள்தான் சாரணர் இயக்கத்தைச் சேர்ந்த சில மாணவர்களைத் துணைக்கு வைத்துக் கொண்டு மேடை அலங்காரத்தைச் செய்தாள்.

பார்வையாளர்களுக்காகப் போடப்பட்ட இருக்கையில் மூன்றாவது வரிசையில் அமர்ந்து கொண்டு கிட்டத்தட்ட அவளை முறைத்துக் கொண்டிருந்தாள் பானுமதி.

ரமணனோ சுரபியோ அதைக் கண்டு கொள்ளும் நிலையில் இல்லை. வேலைகள் நிறைய இருந்தன.

சுரபி இன்னொரு வேலையும் கூடச் செய்தாள். விழா நிகழ்வுகளையெல்லாம் மேடையின் இடது புற ஓரத்தில் மறைவான இடத்தில் அமர்ந்து தொகுத்தும் கொடுத்தாள்.



விழா துவங்கு முன்னர் அந்தப் பள்ளி மாணவர்கள் தாமாகவே முன் வந்து ஒரு மணி நேரம் கலை நிகழ்ச்சிகள் நடத்தினார்கள். இப்படிக் கிடைத்த எதிர்பாராத ஒத்துழைப்புகளினால் ரமணன் பெரிதும் மகிழ்ந்து போனான்.

நிறைவு விழா வெகு நேரம் நடைபெற்றால், மக்கள் அவரவர் இடங்களுக்குப் போய்ச் சேர்வது கஷ்டமாகிவிடும் என்ற எண்ணத்தில் ஏழரை மணிக்கு முடிய வேண்டும் என்று திட்டம் செய்திருந்தார்கள். அதன்படியே நிறைவுற்றது.

கிட்டத்தட்ட பதினைந்தாயிரம் பேர் அந்தக் கண்காட்சியைப் பார்த்திருந்தார்கள் என்ற புள்ளி விவரம் ரமணனுக்கும் அவன் நண்பர்களுக்கும் பெரிதும் ஊக்கத்தைத் தந்தது. விழா நிறைவுக்குப் பிறகு, விழா அமைப்பாளர்களுக்கு இரவு உணவு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

சப்பாத்தி, கிச்சடி, இட்லி என்று எளிமையான உணவு வகைகள். ரமணன் பானுமதி கிளம்பிவிட்டாளா என்று சுற்றிலும் ஒருமுறை கண்ணோட்டம் விட்டான். அவளோ தன் வயதொத்த இரு பெண்களுடன் பேசிக் கொண்டு ரமணனையே நோட்டம் விட்டுக் கொண்டு இருந்தாள்.

அந்தப் பெண்கள் கிளம்பிய பின்பும் அவள் நிற்கவே ரமணன் வேறு வழியின்றி அவளையும் அழைக்க வேண்டியதாயிற்று.

பானுமதி..! அமைப்பாளர்களுக்கு டிஃபன் ஏற்பாடு பண்ணியிருக்கு...! வாங்க சாப்பிடலாம்...!'' என்றான்.

''நான்தான் அமைப்பாளரில்லையே!'' என்று அவள் கிளம்பி விடக் கூடும் என்ற எண்ணம் இருந்தது. ஆனால் அவளோ -

''தேங்ஸ்... அத்தான்!'' என்று டிஃபன் பரிமாறப்படும் அறைக்குள் வந்தாள். சாப்பிட அமர்ந்தாள்.

சுரபி சில ஆசிரியர்களுடனும், மாணவ மாணவிகளுடனும் சேர்ந்து கொண்டு உற்சாகமாகப் பரிமாறினாள்.

பானுமதி தனது கடுப்பை அடக்கிக் கொண்டு சுமுகமாக இருக்க முயற்சிக்கிறாள் என்பது தெளிவாகத் தெரிந்தது.

ரமணன் நண்பர்களோடு சேர்ந்து மாடல்களை அறைகளில் இருந்து வெளியே எடுக்க ஏற்பாடுகள் செய்து கொண்டிருந்த போது பானுமதி அங்கே வந்தாள்.

''அத்தான்... நான் கிளம்பறேன்...!'' என்றாள்.

''அம்மா... அப்பா வர்லையோ?!'' என்றான் அவன்.

''அது... ஒரு கல்யாணம்! ஆக்சுவலா நானும் அதுக்குப் போயிருக்கணும்... ஆனால் அத்தான் இவ்வளவு தூரம் ஏற்பாடு பண்ணியிருக்கிற கண்காட்சிக்கு நானே வர்லைன்னா... எப்படின்னுதான் வந்தேன்'' என்றாள்.

''தேங்ஸ்!'' என்றான்.

''நல்லா இருந்துச்சு இல்லே!'' என்றான் ரமணன். ''ஆமாம்! இந்த ஊர்ல இப்படியெல்லாம் நடத்த முடியுமாங்கற மாதிரி கலக்கீட்டீங்க. ஆனா ஒரு விஷயத்துல ஜாக்கிரதையாயிருங்க... அத்தான்...''

''எதுல?'' என்றான் ரமணன். தேவையில்லாத ஏதோ ஒன்றைச் சொல்லப் போகிறாள் அவள் என்று அவனுக்குப் புரிந்தது. கண்களைச் சுருக்கிக் கொண்டு பார்த்தான். அவள் பார்வை அவனை நேராகச் சந்திக்கவில்லை.

''அத்தான்! உங்களை வளைச்சுப் போட முயற்சி நடக்குது. நேரடியா முடியாதவங்க அறிவுங்கற பேரால உங்களை வளைச்சுப் போட முயற்சிக்கறாங்க.''

''வாட் டு யு மீன்?'' என்றான் ரமணன்.

''ஐ மீன் வாட் ஐ ஸே?'' என்று நிற்காமல் நகர்ந்தாள் பானுமதி.

''சே... இவளோட!'' என்று எண்ணிக் கொண்டே திரும்பியவன் சுரபி கண்களில் நீர் மல்க நிற்பதையும், சரேலென்று அவ்விடத்தை விட்டு நகர்வதையும் பார்த்துத் திகைத்து நின்றான்.



9

ஒரு கண்ணாமூச்சி ஆட்டம் நடந்து கொண்டே இருந்தது. எப்போது ரமணன் ஃபோனில் அழைத்தாலும் சுரபி ஏதோ வேலையாக வெளியே போயிருந்தாள்.

ஒன்று மயில்வாகனன் எடுத்தார். அல்லது அருணா எடுத்தாள். அருணா கூட வழக்கமான வம்புப் பேச்சு பேசவில்லை.

ரமணன் ஒரு கட்டத்தில் கடுப்பாகி விட்டான். இன்னொரு புறத்தில் பானுமதிக்கும், அவனுக்கும் இடையே அதே போல ஒரு கண்ணாமூச்சி ஆட்டம் நடந்து கொண்டிருந்தது.

பானுமதி அழைக்கும் போதெல்லாம் ''நான் ஒரு மீட்டிங்கில் இருக்கிறேன். பிறகு அழைக்கிறேன்'' என்று மெசேஜ் போனது.

முன்பே ஒருமுறை பானுமதி அவனிடம் அழகில்லாத பெண்கள் ஆண்களை வளைப்பதற்காக அறிவு ஜீவிகளாகக் காட்டிக் கொள்கிறாகள் என்பது போல பேசியிருக்கிறாள். ஆனால் இந்த முறை அவனுக்கே கோபம் கிளம்பியது என்றால் கூடவே ஒரு சந்தேகமும் இருந்தது.

சுரபி அங்கே நிற்கிறாள் என்பதைத் தெரிந்து கொண்டுதான் பானுமதி அப்படிப் பேசி விட்டுச் சென்றாளோ என்று தோன்றியது. அந்த விஷயத்துக்காக சுரபி கண் கலங்கிப் போனது அவனுக்குள் சற்றே ஏமாற்றத்தை ஏற்படுத்தியிருந்தது.

எவ்வளவு புத்திசாலியான பெண்களும் இந்த மாதிரியான விஷயங்களால் காயப்படக்கூடும் என்பது அவனுக்குப் புதிராக இருந்தது.

தன்னுடைய வருத்தத்தையெல்லாம் திரட்டி ஒரு பத்திரிகைக்குக் கட்டுரையாக அனுப்பினான்.

''உலகத்திலேயே அழகான பெண் யார்?'' என்று ஒரு அறிஞரைக் கேட்டபோது ''மதர் தெரசா'' என்று அவர் பதில் சொன்னதாகப் படித்திருந்தான். அதை மேற்கோளாகக் காட்டி அந்தக் கட்டுரையை ஆரம்பித்திருந்தான்.

''இதுதான் அழகு. இது அழகில்லையென்று யார் வரையறுத்தது? நீளமூக்குத்தான் அழகு என்றால், ஜப்பானியப் பெண்கள் அழகானவர்கள் இல்லையா? கறுப்பு நிறத் தோல் படைத்தவர்கள் தான் அதிக நோய் எதிர்ப்புச் சக்தி பெற்றிருப்பார்கள். ''மெலனின்'' என்ற வேதிப் பொருளின் வேலைதான்



திறம் என்பது.

கிராமப் புறங்களில் உழைப்பால் கறுத்துப் போயிருந்தாலும், திண்ணென்று உறுதியான கை, கால்களோடு கண்கள் மின்ன நடமாடுகிற அவர்களிடம் ஒரு தன்னம்பிக்கையும் கம்பீரமும் இருக்குமே அதை எதனால் அளவிடுவது?

தன்னுடைய அழகு தன்னுடைய தேவைகள் என்று மட்டுமே பார்த்துக் கொண்டிராமல் சமுதாயத் தேவைகளையும், சமுதாயப் பிரச்சினைகளையும் யார் எண்ணுகிறார்களோ அந்த மாதிரிப் பெண்கள்தான் சமுதாயத்திற்கு தேவையானவர்கள். அழகானவர்கள்.'' என்று போயிருந்தது அவன் கட்டுரை.

அந்தக் கட்டுரையை எழுதி முடித்தவுடனேயே அவனுக்குள்ளே ஒரு திருப்தி மலர்ந்தது என்பதால், அது பிரசுரமானதற்குப் பிறகு முக்கியமான ஒரு வேலை செய்தான்.

சுரபிக்கு ஏனோ.. மனம் வெறுமையாகவே இருந்தது.

மகளிர் சுய உதவிக் குழு ஒன்று ஆரம்பிப்பதற்காக ஒரு குழுவினர் அவளிடம் வந்து போய்க் கொண்டிருந்தார்கள். அவர்களுக்கான ஆலோசனைகள் கொடுதல் அழைத்துப் போய் வருதல் என்று அவளுக்கு வேலைகள் இருந்தன. இருந்தாலும் அந்த நிகழ்வை அவளால் மறக்கவே முடியவில்லை.

உள்ளே முடங்கிக் கிடந்த தன்னை மறுபடியும் வெளியே கொண்டு வந்தற்காக அவள் ரமணனுக்கு பெரிதும் நன்றிக் கடன் பட்டிருந்தாள். அந்தப் பள்ளி விழாவில் ஓடியாடி வேலை செய்ததில் - அது வெற்றிகரமாக நடந்து முடிந்ததில் அவள் பெரிதும் மகிழ்ச்சியடைந்தாள்.

இனிமேல், தலைமையாசிரியரிடம் போய்க் கேட்டு அந்தப் பள்ளியிலேயே ஆசிரியர் வேலைக்குக் கூடப் போகலாமா என்ற யோசனையிலும் கூட இருந்தாள். அந்த அளவிற்கு வெளியுலகைச் சந்திக்கிற துணிவு அவளுக்குள் ஊறியிருந்தது. ஆனால் அத்தனையும் அந்த பானுமதியின் வார்த்தைகளில் பொடியாகிப் போனது.

ஏனோ ரமணனை வளைத்துப் போடுவதற்காகத்தான் தான் அது போல நிகழ்வுகளில் பங்கு கொள்வதாக ஆகிப் போனது.

ரமணன் தன்னிடம் நன்றாகப் பழகுகிறார். தன் மீது அக்கறை காட்டுகிறார். அதற்காக அவரை வளைத்துப் போடுவதாக ஆகிவிடுமா என்ன?

அப்போது அவள் மனம் ஒரு குறுக்குக் கேள்வி போட்டது.

''இரு.. இரு... சுரபி...! நன்றாக யோசித்துச் சொல்! உனக்கு ரமணனின் மேல்



## தலைமுடி பராமரிப்பு

7. கூந்தலின் நுனி பிளந்திருந்தால் அது ஆரோக்கியக் குறைவின் அடையாளம். தேய்ந்தும், பிளந்தும் போன கூந்தலின் நுனியை சீராக வெட்டி விட்டால், அடர்த்தியாக இருப்பது போன்று இருக்கும்.

ஆர்வம் இல்லையா... என்ன?''
இந்தக் கேள்விக்குப் பிறகு சுரபி தவித்துப் போனாள். அந்தக் கேள்வியை
மேற்கொண்டு ஆராயவும் பயந்தாள்.
விழா முடிந்தவுடன் அன்றைக்கு துக்கம் மேலோங்கியிருந்தது என்றால்,
அடுத்த நாள் முதல் சிந்தனை மேலோங்கியிருந்தது.
எங்கு திரும்பினாலும் ரமணனின் முகமே கண்ணுக்குள் வந்து நின்றது.
திடுக்கிட்டுப் போனாள்.
பானுமதி உரிமைக்காரி போலும். அதனால்தான் கோபப்படுகிறான். ஏன்
அன்றைக்குக் கூட பானுமதி வந்து அழைத்ததும் ஏதோ கட்டுப்பட்டவர் போல
ஓடினாரே?
நிறத்தில், அழகில், அந்தஸ்தில் பானுமதியின் பக்கத்தில் தான் நிற்க
முடியுமா? இந்த வடு மட்டும் இல்லாவிட்டால், தானும் ஏதோ பார்க்கிற
அளவுக்குத்தான் இருப்போம். இருந்தாலும்..?''
மெல்லத் தந்தையிடம் விசாரித்தாள்.
''ஏம்ப்பா...! அந்த பானுமதியும் ரமணன் சாரும் ரொம்ப நெருங்கின
சொந்தமோ?'' என்று.
''ஆமாம்மா! ரொம்ப நெருங்கின செ ந்தம். அண்ணாமலை அந்தப்
பையனுக்கு மாமன் முறையாகுது. அதுனால அந்தப் புள்ளை அவனுக்கு மாமன்
புள்ளை. முறை மாப்பிள்ளை. அண்ணாமலையும், கண்ணம்மாவும் அந்தப்
புள்ளை பானுமதியும் அந்தத் தம்பியை உபசரிக்கறதைப் பார்த்தா வளைச்சுப்
போடணும்னு எண்ணம் இருக்கும் போல இருக்கு...''
சுரபி மனதளவில் தளர்ந்து போனாள். ஆனால் அவளது மனமே கேட்டது.
''இப்படி நீ தளர்ந்து போவதன் பொருளென்ன...! உனக்கும் இன்ட்ரஸ்ட்
இருக்குன்னு அர்த்தமா? என்று.
படிப்படியாக அவள் மனம் அதை ஏற்றுக் கொள்ள வேண்டிய நிலைக்குப்
போனது.
வெறும் நட்பாக மட்டும் இருந்திருந்தால் தொடர்ந்து அவள் தொலை
பேசியில் கிடைத்திருப்பாள்.
''வேண்டாம்! இந்த மட்டில் விலகிக் கொள்வது நல்லது. இன்னும் ஆழமாகப்
பழகி பின் விலகுவது கஷ்டம். அதிலும் அந்த பானுமதியோடு அவரை
பார்க்கையில் மனதுக்கு இன்னும் கஷ்டமாகும்'' என்று எண்ணிக் கொண்டாள்.
அவளது விலகலே அவன் மனதுக்குள் சந்தேகத்தை விதைக்கக் கூடும் என்று
தோன்றவில்லை.
''உலகத்திலேயே மிக அழகான காயம் உங்களோடது'' என்று அவன்
அன்றைக்குச் சொன்ன போது, தன் மனம் ஏன் இறக்கை கட்டிக் கொண்டு
பறந்தது என்று இப்போது புரிந்தது.
பல சிந்தனைகளோடு நடைக்கு வந்தவள் திகைத்து நின்றாள்.
ரமணன் கை நிறையப் புத்தகங்களோடு ஹாலுக்குள் நுழைந்து
கொண்டிருந்தான். குறும்பாகச் சிரித்தான்.
''எங்கேயாவது தப்பிச்சுப் போறதுக்கு முன்னாடி புடிச்சுரணும்னு வந்தேன்''



என்றான்.
அவள் தடுமாறிப் போனாள்.
''வாங்க!'' என்றாள் - ஒலியே எழும்பாத குரலில்.
''பின்னே... வேறென்ன சொல்வீங்க? உள்ளேயே வந்துட்டதுக்கு அப்புறம்
போங்கன்னா சொல்ல முடியும்?'' அவன் வேடிக்கை போலப் பேசினாலும் அந்தக்
குரலில் ஆதங்கமும் இருந்தது.
''இல்லே நீங்க ரெண்டு மூணு தரம் கூப்பிட்டதை அருணா.. சொன்னா! ஆனா
இங்கே ஒரு சுயஉதவிக் குழு ஆரம்பிக்கறாங்க... அதுக்கு உதவி
செய்யறதுக்காக... கொஞ்சம் அலைஞ்சுக்கிட்டிருந்தேன்.''
''ஓ! சோஷியல் சர்வீஸ்தான் காரணமா? எங்கே நம்மளை அவாய்ட
பண்றீங்களோனு நினைச்சுட்டேன்'' என்றான்.
அவன் அப்படி நேரடியாகக் கேட்கவும் சற்றுத் திகைத்தாள். பிறகு ஒரு சங்கட
மான பார்வையுடன் ''நான் எதுக்கு உங்களை அவாய்ட் பண்ணணும்? என்றாள்.
அவன் அதற்கு ஏதாவது விளக்கம் சொல்வான் என்று எதிர்பார்த்ததற்கு மாறாக
அவனும் கூடச் சேர்ந்து கொண்டு ''அதானே?'' என்றான்.
அவள் சிரித்துச் சமாளித்தாள். அவன் தன் கையிலிருந்த புத்தகங்களை
எதிரே இருந்த டீபாயில் வைத்து விட்டு அமர்ந்தான்.
சுரபி அவசரமாக உள்ளே போய் தண்ணீர் எடுத்து வந்து கொடுத்தாள். அவன்
தண்ணீரை வாங்கி ''மடக்'' ''மடக்'' கென்று குடித்து விட்டு நிமிர்ந்தான்.
''அன்றைக்கு ஸ்கூல்ல ஸ்பீச் குடுக்கறதுக்கு ரெஃபரன்ஸுக்காக வாங்கிட்டுப்
போனேனே அந்த புத்தகங்கள்'' என்றான்.
''ஓ...!'' என்றாள்.
''சுரபி...!'' என்றான். குரலில் ஒரு குழைவு இருந்தது. என்னவோ
தெரியவில்லை. இன்றைக்கு அருணா அங்கே நிற்கவில்லை. உள்ளே
போய்விட்டாள்.
சுற்று முற்றும் பார்த்து விட்டு ''அப்பா.. இல்லையா?'' என்றான்.
''அப்பா... வெளியே போயிருக்காங்க...'' என்றாள். அவன் குரல் மீண்டும்
குழைந்தாற் போலக் கிளம்பியது.
''சுரபி...! நான் உங்களை இப்படி நினைக்கவேயில்லை'' என்றான்.
அவள் ஒன்றும் பேசவில்லை.
''பானுமதி மாதிரிப் பொண்ணுங்க அப்படித்தான் பேசுவாங்க. ஆனா சுரபி
மாதிரிப் பொண்ணுங்க இப்படி ரியாக்ட் பண்ணக்கூடாதே..!?'' என்றான்.
அவள் மௌனமாக எதிரே இருந்த நாற்காலியில் அமர்ந்திருந்தாள். கை
புடவையை நீவிவிட்டு கொண்டிருந்தது.
''பின்னே... அவங்க..!'' என்று இழுக்க.
''சுரபி.. எனக்கும் உங்களுக்கும் இடையே ஒரு நட்பு இருந்தா அதைத் தீர்மானிக்
கறதும், தொடர்றதும் நாம்! அதைப் பத்திப் பேச அவங்க யாரு?'' என்றான்.
''அவங்க... உங்களுக்கு முறைப் பொண்ணாமே?'' என்னால
உங்களுக்குள்ளே பிரச்சினை வந்துரக் கூடாது இல்லே?'' என்றாள்.
அவன் குபீரென்று சிரித்தான். ''நீங்க பேசறதைப் பார்த்தா... எனக்கும்

அவங்களுக்கும் ஏதோ கல்யாணமே நிச்சயமாயிட்ட மாதிரியும், உங்களா அந்த 'ரிலேஷன்ஷிப்' பாதிக்கப்பட்ட மாதிரியும் இல்லே... தெரியுது?''

அவள் விழித்தாள். அவன் சிரித்துக் கொண்டே தொடர்ந்தான்.

''ஹலோ...! அப்படியெல்லாம் எதுவும் இல்லே! ஜஸ்ட் வேற ஒ பொண்ணோட பழகினாலே கோபிச்சுக்கற பொண்ணோட குப்பை கொட் முடியுமா?'' என்றான்.

அவள் முகம் மலர்வதை ஆழமாகப் பார்த்தான். ''சுரபி'' என்று ஒ பத்திரிகையை நீட்டினான். அவள் வாங்கிக் கொண்டாள்.

''இதுல ஒரு கட்டுரை வந்திருக்கு! படிச்சுப் பாருங்க...!'' என்றான்.

அவள் வாங்கிக் கொண்டாள். மேலும் ஒன்றிரண்டு வார்த்தைகள் பே விட்டுக் கிளம்பினான்.

வீட்டிற்குள் நுழைந்தவுடனே அப்பா கேட்டார் ''ரமணா..! எங்கேப்ப போயிருந்தே?'' என்று.

''சுரபியோட வீட்டுக்கு!'' என்றான்.

''ஓ...!'' என்றார் அப்பா சிந்தனையுடன். அம்மா பரிமாறிய டிஃபனை சாப்பிட் விட்டு வந்து அப்பாவின் எதிரில் வந்து அமர்ந்தான்.

''ரொம்ப நல்ல பொண்ணுப்பா...!'' என்றான்.

''ஆமா...! அன்னைக்கு ஃபங்ஷன்ல ஓடியாடி வேலை செஞ்சதே...'' என்றா தொடர்ந்து ''ஆனா.. பாவம்..! அது முகத்திலே என்னப்பா... அப்படி ஒ கோரமான காயம்...?!'' என்றார் அப்பா.

''காயம்தான் கோரம்பா.. ஆனா.. ஏற்பட்டதற்குப் பின்னாடி இருக்கற காரண இருக்கே... அது ரொம்ப அழகு..'' என்றான்.

விவரித்துச் சொன்னான். அப்பாவும் உள்வாங்கிக் கொண்டார். பிறகு மெல்லிய குரலில் சொன்னார்.

''அப்பா...! இதெல்லாம் கேட்கறதுக்கு ரொம்ப நல்லா இருக்கு. அந்த பொண்ணோட மனசும் தியாகமும் ரொம்ப அருமையான விஷயங்கள். ஆன இன்னொரு பக்கம் யோசிச்சுப் பாரு! மயில்வாகனனுக்குப் பெரிய வசதிக கிடையாது. ரெண்டும் பொண்ணுங்க... அந்தப் பொண்ணுங்களை கரையேத் வேண்டாமா? நல்லா இருக்கற பொண்ணுங்களையே கரையேத்தறது கஷ்டம இருக்கு. இப்படி ஒரு காயத்தை வேறு வச்சுக்கிட்டா...அந்தப் பொண்ணுக் மாப்பிள்ளை பார்க்க வேண்டாமா? வாழ்க்கையையே சிக்கலாக்கிக்கிச்சே அந்த பொண்ணு..?'' என்றார் வருத்தத்துடன்.

''அப்படி ஏன்பா... நினைக்கறீங்க..? உலகத்துல நல்லவங்கன்னு யாருமே இருக்க மாட்டாங்களா? அந்தப் பொண்ணோட தியாக மனப்பான்மைய புரிஞ்சுக்கறவங்க இருக்க மாட்டாங்களா?'' என்றான்.

''என்னமோப்பா.. நீ சொல்றதும் நியாயமாத்தான் இருக்கு!'' என்ற அப்பாவிட சற்று நேரம் வேறு விஷயங்கள் பேசிவிட்டு -

''சரிப்பா...! தூங்கப் போறேன்...!'' என்று போனான்.

தூங்கப் போய் விட்டாலும் தூக்கம் வராமல் புரண்டு புரண்டு படுத்து கொண்டிருந்தான்.





## அஞ்சறைப் பெட்டி

### தலைமுடி பராமரிப்பு

*8. தலைக்கு பயன்படுத்தும் சீப்பு, பிரஷ்களை குறைந்தது 15 நாட்களுக்கு ஒருமுறை நன்கு சுத்தப்படுத்தி வைக்க வேண்டும். அப்போது தான் முடியில் அழுக்குச் சேராது.*

''அப்பா! கொஞ்சம் நடந்துட்டு வரேன்'' என்றபடி வெளியே நகர்ந்தான் அதே சமயம் அவன் செல்ஃபோன் ஒலித்தது.

பார்த்தான். சுரபி வீட்டு எண்!

''சுரபி...!'' என்றான் உற்சாகமாக.

''ரமணன் சார்! கட்டுரை ரொம்ப நல்லா இருந்தது'' என்றாள்.

''தேங்ஸ்! பள்ளிக் கூடத்து கண்காட்சிக்குப் பிறகு நான் எழுதினது'' என்றான்.

'நான் அதிலே' ஒரு செய்தி வைத்திருக்கிறேன். புரிந்ததா?' என்ற கேள்வி அதிலே இருந்தது.

''ஆமாங்க... சுரபி! அழகு... அழகில்லேங்கறதெல்லாம்... நம்ம அளவுகோல்கள்தான் சுரபி'' என்றான்.

''கேட்க நல்லாருக்கு...! படிக்க நல்லாருக்கு...!'' என்று அவள் இழுத்தாள்.

''வாழ்க்கையிலும் நல்லாத்தான் இருக்கும்'' என்றான் ரமணன்.

''வேண்டாம்... ரமணன்! காம்ப்ளெக்ஸோட ஒருத்தரோட வாழறதைக் காட்டிலும் தனியா இருக்கிறதே மேல்...!'' என்றாள்.

''அதைத் தீர்மானிக்கறதுக்கு நீங்க யாரு...?'' என்றான் ரமணன்.

''இல்லைங்க...ரமணன்...! கல்யாணம்கறது மட்டுமே ஒரு வாழ்க்கையின் முடிவான குறிக்கோள் இல்லை. ஃபாரின்ல எத்தனையோ பெண்கள் தனியாவே இருக்கறாங்களே! அது மாதிரி நானும் சமுதாயமே என்னோட உறவா நினைச்சு இருந்துட்டுப் போறேன்...'' என்றாள்.

''பார்க்கலாம்... சுரபி..! அதுக்கான நேரம் வரும்போது பார்க்கலாம். இப்போதைக்கு எதைப் பத்தியும் யோசிக்காம நிம்மதியா இருங்க...'' என்றான்.

''ஆமா...! அப்படித்தான் இருக்கணும்'' என்றாள்.

''எனிவே, இப்படி உடனே கூப்பிட்டு பாராட்டினத்துக்கு தேங்ஸ்...'' என்றான்.

வீட்டுக்குத் திரும்பிய பின் தனது பீரோவைத் குடைந்தான். பள்ளியில் நடந்த நிகழ்ச்சியில் எடுக்கப்பட்ட புகைப்படங்கள் ஒரு கவரில் இருந்தன. இன்னும் ஆல்பத்தில் போட்டு வைக்கவில்லை.

மேடையின் பக்கவாட்டுப் பகுதியில் ஒரு சேரில் அமர்ந்தபடி ''மைக்''கில் பேசிக் கொண்டிருந்த சுரபியையும் ஃபோட்டோ பிடித்திருந்தார்கள். அதில் அவளது தழும்பு மிகுந்த கன்னம் தெளிவாகத் தெரிந்தது.

அந்த ஃபோட்டோவை மட்டும் உருவி தன் கையில் வைத்துக்கொண்டான்.

தலையணையை உயர்த்தி அமர்ந்து கொண்டான்.

மெல்ல தன் வலக்கையால் அந்த ஃபோட்டோவை வருடிக் கொடுத்தான்.

''வருவான் சுரபி..! உன் நல்ல மனசைப் புரிந்து கொள்வதற்கு ஒருத்தன் வருவான்'' என்று மெல்ல முணுமுணுத்துக் கொண்டான்.

அதே நேரத்தில் சுரபி தன் வீட்டில் அவனைப் பற்றியே யோசித்துக் கொண்டு படுக்கையில் சாய்ந்திருந்தாள்.

ரமணனின் தந்தையோ ஆழ்ந்த கலக்கம் தோன்ற தன் படுக்கையில் புரண்டு கொண்டிருந்தார். வெகு நேரத்திற்குப் பின்தான் உறங்கினார்.

யாருடைய உணர்வுகளைப் பற்றியும் கவலை கொள்ளாமல் அந்த இரவு மெல்ல ஊர்ந்தது. நிலவு சிரித்துக் கொண்டு மேலேறியது.



## 10

''அம்மா..!'' என்று ஆர்வமாக ஓடிப் போய்க்கட்டி கொண்டாள் சுரபி.

உலகநாயகி - சுரபியின் அம்மா. அக்கா மகளுக்குப் பிரசவம் என்று உதவிக்குப் போய் ஒரு மாதம் தங்கியிருந்தவர் இன்றைக்குத்தான் திரும்பியிருந்தார்.

''நீயே சமாளிச்சுட்டியாடி...!'' என்றார் சுரபியிடம். ஆதரவாக ஒரு நிமிடம் மகளை மேலும் கீழும் பார்த்துக் கண்ணால் அளந்தவர்-

''ஏண்டி... பொண்ணே... இப்படி இளைச்சுப் போயிட்டே?'' என்றார் ஆதங்கத்தோடு.

''ஆமா... வீட்டைப் பாத்துக்கறேன் - வேலை பாக்கறேன்னுட்டு அலைஞ்சுக்கிட்டே.... நேரத்துக்கு சாப்பிட்டாத்தானே'' என்றார் மயில்வாகனன்.

''இனியென்னப்பா... அம்மா வந்தாச்சில்லே..! தயாராயிருவேன்...'' என்று சிரித்தாள் மகள்.

உறக்கக் கலக்கத்தில் இருந்து கண்ணைத் துடைத்தபடி எழுந்து வந்தாள் அருணா.

''அம்மா... வா? யாரோ தூரத்து உறவு மாதிரித் தெரியுதேன்னு... பார்க்க வந்தேன்'' என்றாள் தூக்கக் கலக்கத்துடன்.

''லொள்ளு... பாத்தியா? தூரத்து உறவாம். நாலு வச்சாத் தெரியும்'' என்று சிரித்தார் உலகநாயகி.

''நல்லா நாலு...வை! அம்மா இல்லாத சமயம் என்னை அடிக்கறியேன்னு ஊரைக் கூட்டுவாளேன்னுதான் நானும் இதுவரைக்கும் செல்லமா வச்சுகிட்டேன்'' என்றாள் சுரபி.

''அம்மா... நைட்ல டிராவல் பண்ணிட்டு வந்துருக்கே...! போய் ரெஸ்ட் எடு.. போ.. நானே இன்னைக்கும் பாத்துக்கறேன்.'' என்று அம்மாவுக்கு காஃபி கலந்து கொடுத்தாள் சுரபி.

சுரபி பம்பரமாய்ச் சுழன்று வேலை பார்ப்பதை அம்மா ஒரு வித ஆச்சரியத்தோடு பார்த்து விட்டு அறைக்குப் போனார்.

அம்மா வந்து விட்டாரே என்று நிம்மதி அடைவதற்குப் பதிலாக பிரச்சினைகள்தான் ஆரம்பித்தன சுரபிக்கு.

அம்மா ஊருக்குப் போயிருந்ததால் வேலைகள் இருந்தன. நேரம் ஓடியது. இப்போதும் அம்மாவிடம் போய் ''அம்மா என்னால சும்மா இருக்க முடியலம்மா!''



என்று வேலைகளை இழுத்துப் போட்டுக் கொண்டாலும் நேரம் நிறைய இருந்தது.

**''ஐடில் மைண்ட் இஸ் டெவில்ஸ் வொர்க்ஷாப்''** என்று ஆங்கிலத்தில் சொல்வார்களே அது போல. மனம் என்னென்னவோ செய்தது. கிறுக்குப் பிடித்தாற் போல அலைந்தது. ரொம்பவும் ஆராய்ந்து பார்த்தது. அப்படி ஆராய்ந்து பார்த்ததில் ஒரு விஷயம் தெளிவாகப் புரிந்தது. அது என்னவென்றால் அவள் மனம் அவளிடம் இல்லை என்பதுதான் அது.

எங்கே போய் விட்டது என்று தேடிப் பார்க்கையில் அது ரமணனிடம் போய் நின்றது. அதிர்ந்து போனாள்.

களத்தில் போட்டியில் இருந்த இன்னொரு நபரான பானுமதியின் தகுதிகளுக்கு முன்னால், தான் எந்த விதத்திலும் இணையாக முடியாது என்று அவளுக்குத் தெரிந்தது!

தன் மேல் ரமணன் வைத்திருப்பது மதிப்பு. தேவையில்லாமல் கற்பனைகளை வளர்த்துக் கொண்டு காயப்படுவதற்கு பதிலாக இப்போதே இல்லை என்று முடிவெடுப்பது நல்லது.

இன்னொரு மனது சொன்னது அவளுக்கு. ரமணன் நேரில் வருகிற போதும் ஃபோனில் பேசுகிற போதும் அவனது வார்த்தைகளில் ஒரு குழைவு இருந்ததே என்று. ''போடி... பைத்தியம் அது நட்புக்கு அடையாளமாக இருக்கலாம். இல்லை... அனுதாபத்தின் அடையாளமாக இருக்கலாம். அனுதாபத்தையெல்லாம் நேசம் என்று நினைத்துக் கொண்டு குழம்பிக் கொள்ளாதே...'' என்று தனக்குத் தானே உபதேசம் செய்து கொண்டாள்.

அன்றைக்கு வெள்ளிக்கிழமை! மாலை நேரமாகி இருந்தது. சுற்று முற்றும் பார்த்தாள். வெளியில் போய் விட்டு வந்தால் மனம் அமைதியாகும் போல இருந்தது.

''அம்மா...! நான் கோயிலுக்குப் போயிட்டு வரேன்'' என்று கிளம்பினாள்.

''போயிட்டு வாடி...!'' என்றார் அம்மா. ஊரில் இருந்து வந்ததிலிருந்து அம்மா கவனித்துக் கொண்டுதான் இருந்தார். ஒரு மாதிரி தன் மகள் துவண்டு போய் இருக்கிறாற் போல இருந்தது. ''பாவம்! தான் ஒரேயடியாக ஒரு மாசம் போய் உட்கார்ந்து கொண்டதில் மகள் ரொம்பவும் உழைத்து விட்டாள் போலும்'' என்று எண்ணிக் கொண்டார். ''பாவம்! அவளும் வெளியே போய் விட்டு வரட்டும்!'' என்று எண்ணிக் கொண்டார்.

''ஏ... அருணா! வரயாடி... கோயிலுக்குப் போயிட்டு வரலாம்'' என்றாள் சுரபி.

''அக்கா.. நா வர்லே! எனக்கு நிறைய ஹோம் வொர்க் இருக்கு'' என்றாள் தங்கை.

''சரி''யென்று கிளம்பினாள் சுரபி.

கோயில் சுற்றுப் பிரகாரத்தில் நடந்து கொண்டிருந்த போதுதான் பார்த்தாள். சற்று முன்னே போய்க் கொண்டிருந்தாள் பானுமதி.

பேசாமல் வெளிப் பிரகாரத்துக்குப் போய் விடலாமா என்று யோசித்தாள். திடீரென்று அந்த யோசனைத் தோன்றியது.

சரசரவென்று பானுமதியின் அருகில் போனாள். ''ஹலோ'' என்றாள்.

'நீ எங்கே... இங்கே... ' என்பது போலப் பார்த்தாள் பானுமதி.

''கோவிலுக்கு வந்தேன்...'' என்ற சுரபி மெது மெதுவாகத் தான் நினைத்த காரியத்தைச் செயல்படுத்தினாள்.

விளைவு?

சற்று நேரத்தில் கோயிலை விட்டு வெளியே வந்தபோது இருவரும் கலகலவென்று சிரித்தபடி பேசிக் கொண்டு வெளியே வந்தார்கள்.

''அகிலாண்டம்..!'' என்று எட்டிப் பார்த்தார் ஈசுவரமூர்த்தி.

மும்முரமாக மகனுக்கு டிஃபன் தயார் செய்து கொண்டிருந்த அகிலாண்டம் திரும்பிக் கணவனைப் பார்த்தார். ''என்னங்க...!'' என்றார்.

''என்ன செய்யறே?'' என்று அடுப்பு மேடை அருகில் வந்து நின்றார்.

''தம்பிக்குப் பிடிச்ச தக்காளி சேமியா'' என்றார் அகிலாண்டம்.

''ம்..!'' என்று தயங்கினாற் போல நின்றார். அப்போதுதான் அகிலாண்டத்திற்குக் கணவன் ஏதோ பேச விழைகிறார் என்று புரிந்தது.

''என்னங்க..!'' என்றார்.

''அகிலாண்டம்!'' என்று மறுபடியும் தயங்கினார் ஈசுவரமூர்த்தி.

''ஒரே நிமிஷம்'' என்று கடைசியாக ஒரு கிளறு கிளறு விட்டு அடுப்பை அணைத்து விட்டு மூடியைப் போட்டு பாத்திரத்தை மூடி வைத்து விட்டுக் கையைத் துவாலையால் துடைத்துக் கொண்டு வெளியே வந்தார் அகிலாண்டம். ஈசுவரமூர்த்தியும் பின் தொடர்ந்தார்.

''இல்லே...! மகனுக்குப் பிடிச்ச உப்புமா, கிச்சடி சேமியான்னு செய்யறே... ஒ.கே! மகனுக்குப் பிடிச்ச எல்லாத்தையும் ஏத்துக்குவியான்னு தெரியலியே?'' என்றார்.

''ஏன் அப்படி சொல்றீங்க?'' என்று புதிராகப் பார்த்தார் அகிலாண்டம்.

''அகிலா...! உன் மகனுக்குக் கல்யாணம் பண்ணிக்கலாம்னு ஒரு எண்ணம் வந்துருச்சு...'' என்றார்.

அகிலாண்டம் வாயெல்லாம் பல்லானார். ''அப்படியா?'' என்றார் ஆனால் கணவன் முகத்தில் அப்படி ஆர்வம் இல்லாததைக் கண்டவள் புன்னகை அப்படியே பாதியில் நின்றது.

''என்னங்க?'' என்றார் கவலையுடன்.

ஈசுவரமூர்த்திக்கு முதல் நாள் தனக்கும் மகனுக்கும் இடையே நடந்த பேச்சுவார்த்தை மனதில் ஓடியது.

அகிலாண்டம் கோவிலுக்குப் போகிறேன் என்று போயிருந்தார். வழக்கம் போல செடிகளைப் பார்வையிட்டு விட்டு கம்பராமாயணத்தை கையில் வைத்துக் கொண்டு சேரில் அமர்ந்தார் ஈசுவரமூர்த்தி.

''அப்பா..!'' என்று வந்தான் மகன்.

''என்னப்பா?'' என்று நிமிந்து பார்த்தார்.

''அப்பா... உங்ககிட்டே பேசணும்! என்றான்.

''பேசலாமே?'' என்றார். மகனே அந்த இடைவெளியில் ஒரு சேரை எடுத்துக் கொண்டு வந்து போட்டு அமர்ந்தான்.





## அஞ்சறைப் பெட்டி

### தலைமுடி பராமரிப்பு

9. ஈரமான தலைமுடியை சீப்பைக் கொண்டோ 'ஹேர் டிரையர்' கொண்டோ, சீவவோ, காய வைக்கவோ கூடாது. மெல்லிய டவலால் தலைமுடியை துவட்டி, விரல்கள் கொண்டு கோதி தலைமுடியை காய வைக்க வேண்டும்.

''அப்பா..! நான் இந்த ஊருக்கு கிளம்பி வந்தப்ப அம்மா மனசுல ஒரு ஆசை இருந்துச்சே... அது நிறைவேறிடும் போல இருக்கு....'' என்றான்.

''அப்பா இந்த ஊர்ல ஒரு பெண்ணை எனக்கு ரொம்பவும் பிடிச்சிருக்கு...!'' என்றான்.

அப்பா அவன் எதிர்பார்த்ததைப் போல ஆர்ப்பரிக்கவில்லை ''மேலே சொல்லு...!'' என்பது போலப் பார்த்தார்.

''அப்பா..!'' என்று ஆரம்பிக்கு முன்பே அவர் கேட்டார்.

''பானுமதியா... சுரபியா?'' என்று.

அவன் ஒரு கணம் திகைத்தாலும் நேர்ப்பார்வையோடு அவரைப் பார்த்தபடி சொன்னான் ''சுரபிப்பா!'' என்று.

அப்பா சற்று நேரம் ஒன்றும் பேசவில்லை. ஒரு நீண்ட பெருமூச்செறிந்தார். பிறகு சொன்னார்.

''தம்பி... நல்லா... யோசிச்சுக்க...! இளமையிலே வீரமாகவும் தியாகமாகவும் தெரியற விஷயம் எல்லாம், பின்னால நடைமுறை வாழ்க்கையில ஒத்து வரும்னு சொல்ல முடியாது!'' என்றார்.

''அப்பா... வாழ்க்கையைத் தீர்மானிக்கறது தோற்றமா... குணமா?''

''தோற்றமும் வேணும்ப்பா!''

''வெறும் தோற்றத்தை மட்டும் வச்சுகிட்டு உத்தரப்பிரேதசம் காலியா இருந்தா.. என்ன செய்ய?''

அப்பா ஒரு நிமிடம் ஒன்றும் பேசவில்லை. பிறகு ''தம்பி... உங்க அம்மாவை யோசிச்சுப் பாரு. மகனுக்கு அப்படிப் பொண்ணு பார்க்கணும் இப்படிப் பொண்ணு பார்க்கணும் பெரிய கனவெல்லாம் வச்சிருக்காப்பா.''

''தெரியும்பா...! ஆனா.. அம்மா, அன்பின் அடிப்படையில யோசிக்கறவங்க...! ஆனா... நீங்க.. என் மனசைப் புரிஞ்சுக்கறவங்க'' என்றான்.

''தம்பி..! பாக்கறவங்க... எல்லாரும் முகத்தைச் சுளிப்பாங்க...''

''பழகினா, மனசை மாத்திக்கப் போறாங்க!''

''...............!''

''அப்பா! பானுமதி மாதிரிப் பொண்ணோட எல்லாம் என்னால வாழவே முடியாது. ப்ளீஸ்! சுரபியோட இன்ட்ரஸ்ட்டும், என்னோட இன்ட்ரஸ்ட்டும் ஒத்துப் போகும். ஷோகேஸ் டால் எனக்கு வேண்டாம்ப்பா...! ப்ளீஸ்... அம்மாகிட்டே பேசுங்க...'' என்றான்.

''எனக்கே.. மனசு தெளிவாகலையே தம்பி..!''

''ஆகும்ப்பா. ஆகும்! வாழ்ந்தா சுரபியோடதான்னு நான் முடிவெடுத்துட்டேன்னா அப்புறம் உங்க மனசு தெளிவாகித்தானே தீரணும்''

மகன் தன் கடைசி அஸ்திரத்தைப் பிரயோகிக்கிறான் என்பதைப் புரிந்து

கொண்ட அப்பா மறுபடியும் ஒரு பெருமூச்சு விட்டு விட்டு.

"சரிப்பா..! நீ அப்படியொரு முடிவுக்கு வந்ததுக்கப்புறம்... நான் என்னத்தைப் பேச?..." என்றார்.

அப்படி சொன்னது மட்டுமல்லாமல் இப்போது தன் மனைவியோடு பேசவும் தயாராக இருந்தார்.

சுரபி யார், என்ன என்றும், அவள் தோற்றம் பற்றியும் அவர் விளக்கவும் அகிலாண்டம் கொஞ்சம் திகைத்துத்தான் போனார்... மெல்லிய குரலில் சொன்னார்.

"மயில்வாகனன் அண்ணன் நல்லவர்தான்! ஆனா... அதுக்காக... இப்படியொரு பெண்ணை..!" என்று இழுக்க.

"உன் மகன் பிடிவாதமா இருக்கான்... அகிலா" என்றார் ஈசுவரமூர்த்தி.

"வேணும்னா... நீ கொஞ்சம் பேசிப்பாரு..." என்றார்.

அகிலாண்டம் பேசிப் பார்த்தார்.

"அம்மா...! நீயும் ஒரு பொண்ணுதானே? உனக்கொரு மகள் இப்படி இருந்திருந்தா... நீ கலங்கியிருப்பே இல்லே! ஒரு வேளை எனக்குக் கல்யாணமாகி வந்த பொண்ணுக்கு இப்படி ஆகியிருந்தா என்ன பண்ணியிருப்பே?" என்றான்.

"இருந்தாலும்..." என்று அகிலாண்டம் இழுக்க.

"அம்மா... அப்பாகிட்டே ஒரு விஷயம் சொன்னேனே! அப்பா... சொல்லலியா?" என்றான்.

"என்ன?" என்றார் அகிலாண்டம்.

"எனக்கு வாழ்க்கைன்னு ஒண்ணு இருந்தா... அது சுரபியோடுதான்னு சொன்னனே... அதைச் சொல்லலியா?" என்றான். வெகு உறுதியோடு சொன்னான்.

அம்மா சற்று நேரம் அமைதியாகி விட்டார். ஆழ்ந்த மௌனத்தில் இருந்து விஷ...த்தை உள்வாங்கிக் கொண்டார். பிறகு கணவனைத் திரும்பிப் பார்த்தார்.

"இதுக்கு மேல நாம என்னங்க... சொல்றது?" என்றார்.

தொடர்ந்த இரண்டு நாட்களிலும் அந்த வீட்டில் அவன் இருக்கும் நேரங்களில் எல்லாம் ஆழ்ந்த மௌனம் நிலவியது.

ரமணன் தெளிவாகவே இருந்தான். ஆரம்ப கட்ட அதிர்ச்சி தெளியட்டும் என்பது போல உறுதியாக இருந்தான். இரண்டு நாட்கள் கழித்து அப்பா மெதுவாக அவன் அறையில் எட்டிப் பார்த்தார்.

"தம்பி! உன் விருப்பப் படியே ஏற்பாடு பண்ணிடலாம்" என்றார்.

அவன் திரும்பி அவரைப் பார்த்தபடி எழுந்து நின்றான். "அவசரமே இல்லைப்பா...!" என்றான்.

மேற்கொண்டு சற்று நேரம் பேசினார். அம்மா முதலில் ஆர்வமாகக் கலந்து கொள்ளவில்லை என்றாலும், பிறகு மனம் தேறிக் கொண்டவர் போல பேச ஆரம்பித்தார்.

"அவசரப் பட வேண்டாம்! மெதுவா அடுத்த வாரத்துக்கப்புறம் பேச்சு வார்த்தை ஆரம்பிக்கலாம்" என்றான்.

"சரிப்பா..." என்றார்கள். இரண்டு பேரும் வேறு ஒரு வேண்டுகோள்



வைத்தார்கள்.

"தம்பி! உன்னோட வாழ்க்கை! உனக்குப் பிடிச்ச பொண்ணாவே இருக்கட்டும். ஆனா... கல்யாணம் ஓரளவுக்காவது கிராண்டாப் பண்ணணும். அதுக்கு ஒத்துக்கணும்" என்றார்.

அதற்கு அவன் ஒத்து கொண்டான். அடுத்த இரண்டு நாட்களும் அவன் மகிழ்ச்சியாகவே நடமாடிக் கொண்டிருந்தான்.

சுரபியிடம் தான் இனிப் பேச வேண்டிய அவசியம் இல்லை. பெற்றோர்களே போய்ப் பெண் கேட்கட்டும் என்று இருந்தான். அப்பாவும், அம்மாவும் கூட அந்த முடிவுடன்தான் இருந்தார்கள்.

இரண்டு நாட்கள் போயிருக்கும்!

அப்பாவிடமிருந்து ஃபோன் வந்தது. அதுவும் அலுவலக நேரத்தில் அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது. "அப்பா என்ன இந்த நேரத்துல!" என்று.

"தம்பி! நான்தான்..." என்றார்.

"சொல்லுங்கப்பா..."

"தம்பி! அண்ணாமலை வந்திருக்காப்ல! பானுமதியை மருமகளா ஏத்துக்குங்கன்னு கேட்கறாருப்பா" என்றார்.

ரமணன் இதை எதிர்பார்க்கவில்லை. அவன் எதுவும் சொல்வதற்குள்ளாக அவரே தொடர்ந்தார்.

"தம்பி! அவரு பேசறதைப் பார்த்தா - சுரபிப் பொண்ணுக்கு உன்னைக் கல்யாணம் பண்ணிக்கறதுல இன்ட்ரஸ்ட் இல்லேங்கற மாதிரித் தெரியுது."

"ஓ!" என்றவன் ஒரு நிமிடம் யோசித்து விட்டு வேறு ஒரு ஆலோசனை சொன்னான்.

"சரிப்பா!" என்று அப்பா அந்த ஆலோசனையை ஏற்றுக் கொண்டார். ஆனால் இங்கே, ரமணன் சிந்தனையில் ஆழ்ந்து விட்டான். கூடவே அதிர்ச்சியிலும் ஆழ்ந்தான்...




"கெட்டி மேளம்! கெட்டி மேளம்!"

ஆளுக்கு ஆள் முழங்கினார்கள். ரமணன் மணப் பெண்ணின் கழுத்தில் தாலி கட்டினான். மெல்லக் குனிந்து மணமகளின் முகம் பார்த்துச் சிரித்தான். அவளும் அவன் முகம் நோக்கிச் சிரித்தாள்.

மணமக்கள் இருவரின் பெற்றோர்களைக் காட்டிலும் மிகவும் மகிழ்ச்சியோடு மணமேடைக்கருகில் நின்று கொண்டு அட்சதை தூவினார் வஜ்ரவேல். எல்லாரும் கையை இறக்கிய பின்பும் கூட அவர் கையை இறக்கவில்லை.

அன்பும், ஆதுரமுமாகப் பார்த்துக் கொண்டு நின்றிருந்தார்.

மணமகனும், மணமகளும் ஒருவரை ஒருவர் ஒரு நிமிடம் ஆழப் பார்த்துக் கொண்டார்கள்.

"சுரபி! நான்தான் ஜெயித்தேன்... பாத்தியா?" என்று சிரித்தான் ரமணன்.

"நானும்தான்...!" என்றாள் சுரபி.

"அப்படிப் போடு...!" என்று ரமணன் சிரிக்க "ஆமாம்! உங்களை ஜெயித்தேன் இல்ல...!" என்றாள்.

மறுபடியும் ரமணன் சிரித்தான்.

"என்னடா... வேலைக்கு வர்றேன்னுட்டு வந்தே! பாத்தா கடைசியில பெரிய வேலை பண்ணியிருக்கே..!" என்று நண்பர்கள் கலாட்டாவில் இறங்கினார்கள்.

ஈசுவரமூர்த்தியும் அகிலாண்டமும் ஒரு விதமான நினைவுகளோடு பார்த்துக் கொண்டிருந்தார்கள் என்றால் மயில்வாகனனும் உலகநாயகியும் ஏதோ தெய்வ தரிசனத்தால் புளகாங்கிதம் அடைந்தவர்கள் போலப் பார்த்துக் கொண்டு நின்றார்கள்.

பானுமதியும் அந்த அரங்கில் இருந்தாள். பார்வையாளர்கள் வரிசையில் இரண்டாவது வரிசையில் அமர்ந்திருந்தாள். கொஞ்சம் வருத்தம் தோன்றியது போலும். மீட்டுக் கொண்டாள்.

எல்லாரும் வரிசையாகப் பரிசுகள் அளிக்க வந்த போது அவளும் வந்தாள்; வாழ்த்தினாள்.

"சுரபி...! நீ ரொம்ப லக்கி..! ரமணன் நீங்களும்" என்றாள். பெற்றோர்கள் உடன் இருந்தார்கள். என்ன இருந்தாலும் அண்ணாமலை முகத்தில் வாட்டம்தான்.

"மாமா! விருந்தாளிங்க மாதிரிக் கிளம்பிராதீங்க...!" என்றான் ரமணன்.

"இல்லேப்பா! இன்னொரு முக்கியமான ஃபங்ஷன் வெளியூர்ல... கண்டிப்பா அதுக்குப் போகணும். சொல்லப் போனால் காலையிலயே போயிருக்கணும். பானுதான் 'அத்தான் கல்யாணத்துக்கு நாம போகலேன்னா... நல்லா இருக்காது'ன்னு ரொம்ப வற்புறுத்துச்சு..." என்றார்.

"சரிங்க மாமா...!" என்றான்.

சுரபி இந்த நேரத்தில் தான் பேசுவதற்கு எதுவும் இல்லை என்பது போல லேசான ஒரு புன்னகையுடன் நின்றாள்.

அவர்கள் அந்தப் பக்கம் போனவுடன் மனைவியிடம் திரும்பி "வருத்தம் இருக்கும் இல்லே?" என்றான்.

சுரபி ஏதோ பதில் சொல்லு முன்பாக வேறு யாரோ வாழ்த்த வரவே, கவனம் மாறினார்கள்.

திருமணத்திலே கூட சாமர்த்தியமாக சுற்றுப்புறச் சூழ்நிலைப் பாதுகாப்பது பற்றிய பிரச்சாரம் செய்தார்கள்.

திருமணம் முடிந்தவுடன் சில நண்பர்கள் பேசினார்கள். வஜ்ரவேல் தலைமை தாங்கினார்.

"நம்ம ஊரு மாப்பிள்ளை" என்று ரமணனைப் பற்றிக் குறிப்பிட்டார்.

"தன் வீடு, தன் மக்கள், தன் குடும்பம் என்று வாழும் கடுகு போன்ற உள்ளம் உடையவர்ளாக இல்லாமல் சமுதாயத்தைப் பற்றி யோசிக்கிற உள்ளம் உடையவர்களாக ஒத்த சிந்தனை இருக்கிற இருவரும் ஒன்று சேர்ந்தது நம்ம ஊருக்கு நன்மை. அதிர்ஷ்டம். அதிலும் சுரபி எங்க பள்ளிக் கூடத்துல டீச்சரா இருந்த பொண்ணு. எனக்கு மகளைப் போல. சொல்லப் போனா சுரபி மறுபடியும் நம்ம பள்ளிகூடத்துக்கு வேலை செய்ய வரணும். ரமணன் தம்பியும் சுற்றுப் புறச் சூழலைப், பாதுகாக்கறதுல ரொம்ப ஆர்வமா இருக்காரு. அவர்கள் நம்மைச் சந்தோஷப் படுத்தறதுக்கு முயற்சிக்கிற மாதிரி, நம்ம ஊரும் அவர்களோட நல்ல



நோக்கத்துக்கு மதிப்புக் குடுத்து அவர்களை நல்லா வச்சுக்கணும்" என்றார்.

வாழை இலையில் பரிமாறுவது, மக்கும் பொருட்களாலாகிய தம்ளர்கள் என்று எல்லா இடங்களிலும் தங்கள் கருத்தை மெய்ப்படுத்திருந்தார்கள். திருமண மேடைகூட பனை ஓலையால் அழகாக அமைக்கப்பட்டிருந்தது.

அதே சமயம்!

காரில் போய்க் கொண்டிருந்த பானுமதியின் மனதில் அந்த அனுபவம் நினைவுக்கு வந்தது.



**அஞ்சறைப் பெட்டி**

**தலைமுடி பராமரிப்பு**

10. தலைமுடி உறுதியாகவும், நீளமாகவும், அடர்த்தியாகவும் இருக்க வாரத்தில் ஒருமுறை நல்ல எண்ணெய் தேய்த்துக் குளிக்க வேண்டும். வாரத்திற்கு இரு முறை தலையைக் கழுவ வேண்டும். மூன்று முறை நல்ல தேங்காய் எண்ணெயை முடிக்கு தடவி பின்னல் இடவும்.

அன்றைக்குக் கோயில் பிரகாரத்தில் நடந்து போய் கொண்டிருந்தாள் பானுமதி.

"ஹலோ...!" என்று சுரபி அருகில் போய் நின்றாள்.

பானுமதி ஒரு விதமான எரிச்சலுடன் திரும்பி "நீ எங்கே இங்கே?" என்பது போல அவளைப் பார்த்தாள்.

"நானும் கோவிலுக்கு வந்தேன்" என்றாள் சுரபி - அவள் கேள்வியைப் புரிந்தவள் போல.

பானுமதி லேசாகப் புன்னகைத்தாள். அப்படிப் புன்னகைப்பதற்கு பதிலாக அவள் புன்னகைக்காமலே இருந்திருக்கலாம் போலத் தோன்றியது சுரபிக்கு. ஆனாலும் தன் காரியத்திலேயே கண்ணாக இருந்தாள் சுரபி.

"என்ன மேடம்! ரமணன் சார் உங்களுக்கு க்ளோஸ் ரிலேடிவ் இல்லே!"

"ம்...!"

"ரமணன் சார் உங்களைப் பற்றி நிறையச் சொல்லியிருக்காரு..." என்றாள்.

பானுமதியின் நடையின் வேகம் கொஞ்சம் குறைந்தது. மெதுவாகத் திரும்பி சுரபியைப் பார்த்தாள்.

"ரமணன் சார் எங்க வீட்டுக்கு அடிக்கடி வருவாரு. அது... எனக்கும் அவருக்கும் சுற்றுப் 'புறச் சூழல் பாதுகாபபு' 'மாசுக் கட்டுப்பாடு' 'மரம் வளர்க்கறது', இந்த மாதிரி விஷயங்கள்ல ரொம்ப... இன்ட்ரஸ்ட். அதனால அது பற்றிப் பேசறதுக்கு வருவாரு" என்றாள்.

பானுமதி அமைதியாகக் கேட்டுக் கொண்டாள்.

'சோழியன் குடுமி சும்மா ஆடாது...' என்பது போல இவள் எதற்காக இப்படி மேலே விழுந்து பிடுங்குகிறாள் என்று அவளுக்குள் எண்ணம் ஓடியது. ஆனால் வெளிக்காட்டிக் கொள்ளவில்லை.

சுரபி உற்சாகமாகத் தொடர்ந்தாள். "சொல்லப் போனா... ரமணன் சாருக்கு ரொம்ப நன்றி சொல்லணும். ஏன்னா... ஒரு விதமான காம்ப்ளெக்ஸ்ல இருந்த என்னை அவருதான் வெளியே கொண்டு வந்தார். பாவம் அவருக்கு என் மேல அனுதாபம். நீங்க இப்படியே உள்ளேயே முடங்கிக் கிடந்தீங்கன்னா... உங்க

தன்னம்பிக்கையே போயிடும். வெளியே வாங்க'' அப்படீன்னு ரொம்ப ஊக்கப் படுத்தினார்.''

பானுமதி அதே அமைதியில் இருந்தாள். ஆனால் காது கொடுத்துக் கேட்டாள்.

''அதனாலதான்... நானும் ஃபங்ஷன்லயெல்லாம் போய்க் கலந்துக்கிட்டேன். முதல்ல தயக்கமா ஃபீல் பண்ணினப்ப ''சுரபி! முதல்ல வேணா உங்க கன்னத்துத் தழும்பை எல்லாரும் அதிர்ச்சியாய்ப் பார்ப்பாங்க... அப்புறம் பழகிடும். எப்பவும் ஒரு விஷயம் பழகிப் போனா... வி டேக் இட் ஃபர் கிராண்டட்'' அப்படீன்னார். நானும் யோசிச்சேன். எப்படியும் என் வாழ்க்கையில் நான் கல்யாணம் பண்றதில்லேனு முடிவு பண்ணியிருக்கேன். சோஷியல் சர்வீஸ்தான் என் வாழ்க்கைன்னு இருக்கும்போது, நான் வெளியே போய்த்தானே ஆகணும். ரமணன் சார் சொல்றது சரிதானேன்னு யோசித்தேன்'' என்றாள்.

''கல்யாணமே பண்ணிக்கப் போறதில்லேன்னு முடிவு பண்ணியிருக்கேன்'' என்ற சொற்களை மட்டும் நிறுத்தி நிதானமாகச் சொன்னாள். அந்த வார்த்தைகள் காதில் விழுந்தவுடனே பானுமதியின் முகபாவமே மாறியது. ஆர்வமாகத் திரும்பி சுரபியின் முகத்தைப் பார்த்தாள்.

''ஏன் சுரபி... அப்படிச் சொல்ற! ஆஃப்ட்ரால் இந்தக் காயத்துக்காக கல்யாணம் பண்ணிக்காம இருக்கணுமா... என்ன? அப்படியும் ஏத்துக்கற ஒரு நல்லவர் கிடைக்காமலா போயிருவார்?'' என்றாள் ஆறுதல் போல.

''கிடைப்பான்... மேடம்! ஆனா... அவன் கல்யாணம்னு வரும்போதே தான் ஏதோ தியாகி போலவும் அதற்காக நான் வாழ்நாள் பூரா நன்றிக் கடன் படணும்கிற மாதிரியுமான ஒரு எண்ணத்திலேயே வாழ்க்கை பூராவும் நடத்துவான். அது எதுக்கு?'' என்றாள் சுரபி.

பானுமதி உற்சாகமானாள்.

''ஆமா...! ரமணன் அத்தான் ரொம்ப நல்லவர்'' என்றாள்.

''ஆமா!'' என்று சுரபி ஒத்து ஊதினாள். மேலும் ''அது மட்டுமில்லே! உங்க உறவுக்காரர் வேற. உங்களைப் பற்றி அடிக்கடி சொல்லுவாரு...'' என்றாள்.

''ம்...! அப்படியா?'' என்றாள் கண்கள் படபடக்க.

''ஆமா! நான் கூட கேலி செய்வேன். பானுமதி மேடம் உங்களுக்கு முறைப் பொண்ணாச்சே..! அப்படீன்னு '' என்றாள்.

பானுமதி புன்னகைத்தாள். அந்தப் புன்னகையில் தெரிந்த ஆர்வம் பார்த்து சுரபிக்கு கொஞ்சம் பாவமாக இருந்தது. நாம் செய்கிற வேலை தேவையில்லாத வேலையோ என்று தோன்றியது.

''எனக்கென்னமோ... மேடம்... ரமணன் சாருக்கு உங்களை மாதிரி ஒரு பொண்ணு அமையணும். அவரை எப்படியாவது இந்த ஊர்லயே கட்டிப் போடணும்னு ஒரு எண்ணம்!''

பானுமதி சுத்தமாக இதை எதிர்பார்க்கவில்லை. சுரபி அதைக் கவனிக்காதவள் போலத் தொடர்ந்தாள்.

''ஆமாம்... மேடம்! அப்படி ஒருத்தர் இந்த ஊர்ல இருந்தா... இந்த ஊருக்கு எவ்வளவோ நல்லது நடக்கும்...'' என்றாள் சுரபி.

பானுமதி அதற்குப் பிறகு சுரபியிடம் கலகலப்பாகப் பேசினாள். சுரபி அந்த நேரம் வேறு விஷயங்கள் பேசி விட்டு, வந்த வேலை முடிந்தது. என்பது போல நகர்ந்தாள்.



அதை நம்பிக் கொண்ட பானுமதி அன்றைக்கே தன் தாயிடம் ஜாடை மாடையாகச் சொன்னாள்.

''அம்மா...! ரமணன் அத்தான் ரொம்ப நல்லவர் இல்லே...!''

ரமணனுக்கு இந்தப் பெண் என்ன திடீரென்று நற்சான்றிதழ் கொடுக்கிறாள் என்று எண்ணிக் கொண்ட அம்மா ''ரமணன் மட்டுமா..? அவங்க அம்மா... அப்பா எல்லாரும் நல்லவங்கதான்... இல்லே..?'' என்றார் அம்மா.

'இது என்னடா... அம்மா... புரிந்து கொள்ளமாட்டேன் என்கிறாரே' என்று யோசித்த பானுமதி -

''இல்லேம்மா...! ரமணன் அத்தான் நல்ல வேலையில இருக்காரு! குடும்பமும்... நல்ல குடும்பம்'' என்றாள் மறுபடியும்.

அம்மாவுக்கு இப்பொழுது நன்றாகப் புரிந்தது. ''ஓஹோ... அப்படியா... சொல்றே?! நல்ல குடும்பம்தான். அப்பா... கூட உனக்குக் கல்யாணம் பண்ணணும்கிற ஐடியாலதான் இருக்காரு...'' என்றார்.

'என்னடா... அம்மா... சம்பந்தம் இல்லாமப் பேசறாங்க...' என்று மகளும் நினைக்கவில்லை. 'உன்னோட ஐடியா புரிஞ்சுது' என்று அம்மாவும் சொல்லவில்லை. ஆனால் கனகாரியமாக கணவரிடம் பேசினாள் கண்ணம்மா.

''அது சரி..! ஐடியா... எல்லாம் நல்லாத்தான் இருக்கு! அந்தப் புள்ளை இந்த ஊருக்கு வந்து ஆறு மாசம் கூட ஆகலை. அதுக்குள்ள கல்யாணம் ஏற்பாடு பண்ணுவாங்களா இல்லையான்னு தெரியாம.. எப்படிப் போய்க் கேட்கறது?'' என்றார் அண்ணாமலை.

''இதப் பாருங்க! ஒரு பொண்ணு - மாப்பிள்ளைன்னு இருந்தா... கேட்கறதுதான். சம்மதமா இருந்தா சரின்னு சொல்லப் போறாங்க... இல்லேன்னா... ஏதாவது காரணம் சொல்லப் போறாங்க... அவ்வளவுதானே?'' என்றார் கண்ணம்மா.

''அதுவும் சரிதான்'' என்று தோன்றியது அண்ணாமலைக்கு. அந்த வாரத்திலேயே ஒரு நல்ல நாள் பார்த்து, ரமணனின் பெற்றோரைப் பார்க்க அவர்கள் வீட்டிற்குப் போனார்.

ரமணனின் அப்பாவும், அம்மாவும் உற்சாகமாகத் தான் வரவேற்றார்கள். சற்று நேரம் உள்ளே போய்விட்டு வந்த ரமணனின் அப்பாவிடம் ஏதோ மாறுதல் தெரிந்தாற் போல இருந்தது. ஒருவேளை அந்த சுரபிப் பொண்ணைக் கல்யாணம் பண்ணுகிற ஐடியா இருக்குமோ என்ற எண்ணம் தோன்றியது. அதனால் தான் இயல்பாகப் பேசுவது போல -

''ஈசுவரமூர்த்தி! நம்ம ஊர்ல தம்பி கொஞ்சம் நெருங்கிப் பழகுகிற வூடுங்க ரெண்டுதான். அந்த மயில்வாகனன் வீடு, இன்னொண்ணு நம்ம வீடு. அந்த சுரபிப் பொண்ணுதான் தெரியுமே... பாவம். அடுத்த வூட்டுப் பொண்ணை நாம எதுவும் சொல்லக் கூடாது. அதுவும் என்னமோ கல்யாணமே பண்ணிக்கப் போறதில்லே. சோஷியல் சர்வீஸ் பண்ணப்போறேன்னு தீர்மானமா இருக்காமே. அப்புறம் அதை விட்டா... நம்ம வூடுதான். அதான் யோசிச்சேன் கல்யாணம்கற பந்தம் வந்தா இன்னும் நெருங்கிடுவோமில்லே!'' என்றார்.

மறைமுகமாக அவர் சொல்ற கருத்தை உள்வாங்கிக் கொண்டார் ஈசுவரமூர்த்தி. அவருக்கும் ஒரு வகையில் நிம்மதியாக இருந்தது. என்னதான் பையன் விரும்பினாலும் அந்தப் பெண்ணே மாட்டேன் என்று சொல்லிவிட்டால்

பிரச்சினைக்குத் தீர்வு கிடைத்து விடுமல்லவா என்று எண்ணிக் கொண்டா மறுபடியும் உள்ளே போய் மகனிடம் பேசினார்.

அப்பாவிடமிருந்து இந்த விஷயமாக ஃபோன் வரவும் ரமணன் கொஞ்ச அதிர்ந்துதான் போனான். இந்த சுரபி எதற்காக இப்படியெல்லாம் சொல்கிறாள் அப்படி யாரிடம் சொன்னாளாம்? என்று கொஞ்சம் நொந்துதான் போனான் ஆனால் தொய்ந்து விடவில்லை.

''அப்பா! வந்தவங்க மனசு கோணாமப் பேசி அனுப்புங்க!'' என்றான்.

''தம்பி! அந்த சுரபிப் பொண்ணு!'' என்று அவர் இழுத்தார்.

''சுரபி மேட்டரை என்கிட்ட விடுங்க! சுரபியை நான் டீல் பண்ணிக்கறேன்'' என்று சொன்னவன் திடீரென்று யோசனை வந்தது போல-

''அப்பா! ஒண்ணு பண்ணுங்க...! பானுமதியோட ஜாதகம் கொண்டு வர சொல்லுங்க. பொருத்தம் பாத்துக்கறோம்னு சொல்லுங்க''

''நாங்க எங்க ஜோசியர்கிட்டே பார்த்தோம். பொருத்தம் இருக்குன்னு சொன்னா?''

''இன்னும் நாம ஜாதகம் கொடுக்கவேயில்லையேப்பா. எங்களுக்குன்னு ஒரு ஜோசியர் இருக்காரு. அவருகிட்டே கேட்கணும்னு... சொல்லுங்க'' என்றார்.

''சரிப்பா!'' என்றார் அப்பா. அப்படியே செய்தார்.

புதிதாக ஜாதகம் என்று ரமணனின் அப்பா பேசவும், அண்ணாமலை கொஞ்சம் திகைத்தார்.

''சரி... அதுவும் நல்லதுதான். நான் ஜாதகம் கொண்டு வரேன். நீங்க பாருங்க! உங்க பையனோட ஜாதகமும் குடுங்க'' என்றார்.

''நாளை மறுநாள் நல்ல நாள். நீங்களும் கொண்டு வாங்க! நாங்களும் தரோம். ஒரே சமயத்துல மாத்திக்கலாம்...'' என்றார் ஈசுவரமூர்த்தி.

அன்று மாலை வீட்டுக்கு வந்த ரமணன் நடந்ததையெல்லாம் அப்பாவிடம் கேட்டுத் தெரிந்து கொண்டான் ரமணன்.

''தம்பி! அவர் சொல்றதைப் பார்த்தா இந்த சுரபிப் பொண்ணு தானே போய் பானுமதிகிட்டே பேசியிருக்கும் போலே...'' என்றார்.

''அப்பா...!'' என்று தயங்கினான்.

''சொல்லுப்பா...!''

''அப்பா...! பானுமதியும் கொஞ்சம் பில்டப் பண்ணுவாப்ல. ஏற்கனவே ஒரு மேட்டர்ல, சுரபியைப் பத்தி அது மட்டமாப் பேசியிருக்கு... அப்புறம் அது பற்றி ஹெச்.எம். வேற மாதிரி சொன்னாரு'' என்று நடந்ததைச் சொன்னான்.

''ஓ...!'' என்றார் அப்பா சுருதி இறங்கிய குரலில்.

''அது சரிப்பா! சுரபி... கல்யாணம் பண்ணிக்கலேன்னு சொன்னா... நாம எப்படிப்பா வற்புறுத்த முடியும்?''

அவன் முகத்தில் சொல்லவொண்ணா வேதனை தோன்றியது. முகத்தைத் திருப்பிக் கொண்டான். உணர்ச்சிகளைப் போராடி அடக்கினான். இறுகிய குரலில்,

''சுரபி... தும்பை விட்டுட்டு வால் பிடிக்கிற கதையா என்னென்னமோ பண்ணிக்கிட்டிருக்கு! கொஞ்சம் காம்ப்ளெக்ஸ்ப்பா..! எனக்கு ஏதோ நல்லது பண்றதா நினைச்சிட்டு...'' என்றவன் திரும்பி உறுதியான பார்வையாகப் பார்த்தான்.





## தலைமுடி பராமரிப்பு

*11. ஒவ்வொருவரும் தனியாக டவல் மற்றும் தலையணை பயன்படுத்தினாலே, பொடுகு மற்றும் பேன் போன்றவை தலைமுடியின் அருகில் வராது. தலைமுடியும் நன்றாக வளரும்.*

''அப்பா! அண்ணாமலை மாமா ஜாதகம் குடுத்தா... வாங்கிக்கிட்டு 'எங்க ஜோசியர் சேராதுன்னு சொல்லிட்டாரு. எப்பவுமே நாங்க அவர் சொல்படிதான் கேட்போம்'னு சொல்லிடுங்க. ப்ளீஸ்ப்பா! கோ - ஆபரேட் பண்ணுங்க'' என்றான்.

''அது சரிப்பா! நான் கோ-ஆப்ரேட் பண்றேன். எங்களுக்கு உன் சந்தோஷம்தான் முக்கியம்'' என்றார் அப்பாவும் உறுதியான குரலில்.

அதற்குப் பிறகு அவன் செய்த வேலை மயில்வாகனன் வீட்டுக்கு ஃபோன் செய்ததுதான்.

மயில்வாகனன்தான் எடுத்தார்.

''மாமா! சுரபிகிட்டே பேசணும்'' என்றான்.

அவர் ஒரு நிமிடம் தயங்கினார். ''அது எங்கயோ வெளிய போயிருக்கு!'' என்றார்.

''அப்படீன்னு சொல்லச் சொன்னாளாக்கும். மாமா! விஷயம் புரிஞ்சுக்குங்க. நான் சுரபியைக் கல்யாணம் பண்ணணும்னு நினைக்கறேன். ஆனா உங்க மக தியாகம் பண்றதா நினைச்சுக்கிட்டு ஏதேதோ பண்ணுது மாமா! அது கிட்ட சொல்லுங்க - ரமணன் கல்யாணம்னு பண்ணினா சுரபிங்கற பொண்ணைத்தான் பண்ணுவானாம். இல்லேன்னா வாழ்நாள் பூராவும் கல்யாணமே பண்ண மாட்டானாம் அப்படீன்னு சொல்லுங்க!... உங்களுக்கெல்லாம்.. சம்மதம்னா.. இதோ இங்கே நான் இந்த ஃபோன்லயே இருப்பேன். சரியா பத்து நிமிஷம் கழிச்சுக் கூப்பிடுங்க'' என்று ஆஃப் செய்தான்.

சரியாகப் பத்து நிமிடம்.

ஃபோன் ஒலித்தது. செல்ஃபோன்.கையில் எடுத்தான்.

''நான் சுரபி பேசறேன்'' என்று அநதப பக்கம் சுரபியின் குரல் ஒலித்தது.

''அதானே பார்த்தேன்! இண்ணைக்கு மட்டும் ஃபோன் வராம இருந்துச்சு மவளே...'' என்று கோபம் போல ஆரம்பித்தவன் சிரித்து விட்டான்.



## 12

''ரொம்ப அழகாயிருக்கு... இல்லே!'' என்று சிலாகித்துக் கொண்டார்கள் ரமணன் - சுரபி இருவருமே!

அழகான மலைப் பிரதேசம். மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியில் உள்ளடங்கிய கிராமம். புதிதாக வேலைக்குச் சேர்ந்தவன் என்பதால் நிறைய விடுமுறை கொடுக்க முடியாத நிலையில் அவனது அலுவலகத்தில் பிரத்தியேகமாக அவனுக்கு ஒரு உதவி செய்திருந்தார்கள்.

ஒரு மூலிகைத் தேடல் என்கிறாற் போல ஒரு ப்ராஜெக்ட் கொடுத்து, சக

கம்பெனியின் கெஸ்ட் ஹவுஸில் தங்குகிற வசதியும் செய்து கொடுத்திருந்தார்கள். ''ஃபீல்டு வொர்க்குக்கு ஃபீல்ட் வொர்க்குமாச்சு. பர்ஸனல் வேலையுமாச்சு'' என்று கிண்டல் செய்து சிரித்தார் மேனேஜர்.

ரமணன் லேசான வெட்கப் புன்னகையுடன் அந்த ப்ராஜெக்டை வாங்கிக் கொண்டான். அப்படித்தான் அந்த உள்ளடங்கிய கிராமத்திற்கு வந்திருந்தார்கள்.

எங்கு பார்த்தாலும் பசுமையாக இருந்தது. ஆனாலும் ரமணன் பெருமூச்செறிந்தான்.

''சுரபி...! முன்னேயெல்லாம் இந்த மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதியில கண்ணுக்குத் தெரிந்த அளவுக்கு இப்போது உயரமான மரங்கள் இல்லை தெரியுமா'' என்றான்.

''ஆமா! மக்கள் தாம் இன்னது செய்கிறோம் என்று அறியாமல் செய்கிறார்கள்'' என்று அவளும் தன் பங்குக்கு பெருமூச்செறிந்தாள்.

ஸ்வெட்டருக்குள் முடங்குகின்ற மனைவியைத் தன் தோள் சால்வையோடு சேர்த்துக் கொண்டான் ரமணன். குபீரென்று சிரித்தான்.

''ரொம்பக் கெட்டிக்காரி மாதிரி போய் பானுமதிகிட்டே பேசினே இல்லே?'' என்றான். அவள் திரும்பி சிந்தனையுடன் பார்த்தாள்.

''ஆமாங்க! அப்புறம் எப்படிங்க கதை மாறுச்சு?'' என்றாள்.

''கதை மாறுச்சா? நாங்கதான் மாத்தினமில்ல?'' என்றான்.

''எப்படி?'' என்றாள் அவள் ஆர்வமாக.

''எல்லாம் உன்கிட்ட கத்துக்கிட்ட பாடம்தான். உன் பாடத்தை நானும் படிச்சேன்.'' என்றான்.

விரிவாகச் சொன்னான்.

சுரபி.. தான் ஏதோ தியாகம் செய்கிறாற் போலவும், ரமணனுக்கும், பானுமதிக்கும் நல்லது செய்கிறாற் போலவும் எண்ணிக் கொண்டு ஏதோ செய்திருக்கிறாள் என்று ரமணனுக்குப் புரிந்தது.

'என்னடா... இது புத்திசாலியென்று தான் நினைத்த பெண், இப்படியெல்லாம் செய்கிறாளே' என்று வருத்தமாக இருந்தது. ஆனால் இனிமேல் சுரபியுடம் பேசிப் பயனில்லை என்பது தெரிந்தது.

வேறு வழியை நாட முடிவு செய்தான். பானுமதிக்கு ஃபோன் செய்தான்.

''பானு...! நான் உன்கிட்டே பேசணும்!'' என்றான்.

பானுமதி குளிர்ந்து போனாள். ''தாராளமா... அத்தான்!'' என்று உற்சாகமானாள்.

''எப்ப பேசலாம்?'' என்றான் ரமணன் - குரலில் எந்த விதமான உணர்ச்சியையும் காட்டாமல்.

''இன்னைக்கே... இன்னைக்கே பேசலாம்'' என்றாள். பிறகு,

''எங்கே?'' என்றாள்.

''எங்கேன்னாலும் சரி''

அவள் கொஞ்சம் யோசித்து விட்டு ''அத்தான் ! எங்க அம்மா, அப்பா... ரெண்டு பேருமே இன்னைக்கு ஒரு விசேஷத்துக்காக வெளியூர் கிளம்பறாங்க. எங்க வீட்டுலயே பேசலாம். இனிமே நாம எதுக்குப் பயப்படணும்?'' யாருக்குப் பயப்படணும்?'' என்றாள்.

அவன் ஒன்றும் பேசவில்லை. ஆனால் மாலை ஆறுமணிக்கெல்லாம் அவள்



வீட்டுக்குப் போனான்.

''என் ரூமுக்குப் போயிரலாம்'' என்றாள்.

''இல்ல... பானு...! இங்கயே பேசுவோம்...'' என்றான்..

''சொல்லுங்க அத்தான்!'' என்றாள்.

''பானுமதி... எனக்கு ரெண்டு மூணு கேள்விங்க இருக்கு'' என்றான்.

''கேளுங்க... அத்தான்''

''ஏன்... பானு..! யாராவது மனசுல ஒருத்தரை வச்சுக்கிட்டு இன்னொருத்தரை கல்யாணம் செய்வாங்களா?'' என்றான்.

அவளுக்குப் புரியவில்லை. ''நிச்சயமா... மாட்டாங்க அத்தான்! அதுக்கப்புறம் வாழ்க்கையே நரகமாயிரும் இல்லே...!'' என்றாள்.

''அதேதான்! அப்படியொரு நிலைமை நமக்கு வேணுமா?'' என்றான்.

அவள் திகைத்தாள் ''அத்தான்...! என்ன சொல்றீங்க?''

அவன் ஆழமான குரலில் - ஆனால் அழுத்தமாகச் சொன்னான்.

''ஆமா பானுமதி..! என்னை மன்னிச்சுரு..! என் மனசுல சுரபிதான் இருக்காப்ல...'' என்றான்.

அவள் முகத்தில் கோபம் கொப்பளித்தது. ''அத்தான்! உங்களுக்கு ரோஷமே இல்லையா? அந்தப் பொண்ணு என்னமோ நான் கல்யாணமே பண்ணிக்கப் போறதில்லே... சமூகசேவை செய்யப் போறேங்குது.''

''யார் கிட்டே சொல்லுச்சு?''

''என்கிட்டேயே! தானா... வந்து என்கிட்டே சொன்னாப்ல!''

''தானா.. வந்து உன்கிட்டே எதுக்குச் சொல்லுது?'' அவள் திகைத்தாள். ''அதை அவகிட்டேதான் கேட்கணும்?''

''கேட்க வேண்டியதில்லே! நான் சொல்றேன். தன்னோட சொத்தை உன்கிட்டே விட்டுக் குடுக்கறாளாம். தியாகமாம்!'' என்றான் கோபத்தோடு.

பானுமதி தன்னுடைய ஏமாற்றத்தையும் கோபத்தையும் அடக்கிக் கொள்வதற்காகப் போராடிக் கொண்டிருந்தாள். அவன் கண்டு கொள்ளாதவன் போலத் தொடர்ந்தான். அறுவை சிகிச்சையின் போது வலிக்கத்தான் செய்யும். ஆனால் விளைவு இருவருக்கும் நல்லதுதானே!

''முதலாவது விஷயம்... சும்மா 'ஜஸ்ட் லைக் தட்' கை மாத்தி விடறதுக்கு நான் ஒண்ணும் ஜடப்பொருள் இல்லே! இரண்டாவது அப்படி யாரோ ஒருத்தர் விட்டுக் கொடுத்து அந்த வாழ்க்கை வாழற அளவுக்கு உனக்குத் தகுதிக் குறைவும் இல்லே...'' என்றான்.

இரண்டாவது வாக்கியம் அவளுக்குள் கொஞ்சம் ஆறுதலைத் தந்தது. அவன் இனிமையாகத் தன் கருத்தை இறக்கினான்.

''பானு...! நல்லா யோசிச்சுப் பாரு! உனக்கென்ன அழகில்லையா? அந்தஸ்தில்லையா'' என்றான்.

''அதானே...'' என்பது போல் அவள் பார்த்தாள்.

''அப்படியிருக்கையிலே, சுரபி தன் வாழ்க்கையை உனக்கு விட்டுக் கொடுக்கணுமா என்ன?''

பானுமதி கொஞ்சம் நிமிர்ந்து அமர்ந்தாள்.

''பானு! கண்டிப்பா... என்னை விட உனக்கு நல்ல மாப்பிள்ளை கிடைப்பான்.''

ப்ராஜக்ட்ல கவனம் செலுத்துங்க.'' என்றாள்.

''தேங்ஸ்... சுரபி! அந்தப் ப்ராஜக்டனால சமுதாயத்துக்குப் பெரிய ஒரு நன்மை கிடைக்கும். அது இந்த... மக்காத பொருட்கள்ன்னு பிரிக்கிறோம் இல்லே. அதுகளையும் மக்கவைக்கறதுக்கு முடியுமானு பாக்கற ஒரு முயற்சி. ஃபார் எக்ஸாம்பிள் - சில வகையான பிளாஸ்டிக் கவர் எல்லாம் மக்கவே மக்காது. மாடுங்க வயித்துக்குள்ளே போனா பெரிய தொல்லை பண்ணிடும். அந்த மாதிரிப் பொருளை மக்க வைப்பதற்கான முயற்சிதான் அது. முடியுமானு தெரியலே. ஆனா முயற்சியிலே இருக்கேன்'' என்றான்.

''எப்படி?'' என்றாள் சுரபி ஆர்வமாக.

''இல்ல சுரபி! வெள்ளியங்கிரி மலைப் பகுதியிலே ஒரு மலைவாழ் மனிதரை சந்தித்தேன். அவர் ஒரு மூலிகை காண்பிச்சார். எப்பேர்ப்பட்ட பொருளையும் சாம்பலாக்கற சக்தி அந்த மூலிகைக்கு இருக்காம். மக்காத பொருட்களையெல்லாம் அந்த மாதிரி சாம்பல் பண்ணினாலே போதுமே! அதான் அந்த மூலிகையை வளர்த்து ஆராய்ச்சி பண்றேன்'' என்றான்.

''செய்ங்க! நம்ம வாழ்க்கை எங்கே போயிருது. இப்ப மட்டுமில்லே எப்பவுமே உங்களோட எல்லா முயற்சிகளுக்கும் நான் துணையா இருப்பேன்'' என்றாள்.

அவன் தன் சந்தோஷத்தை வேறு வகையில் வெளிப்படுத்தினான். பிறகு சொன்னான்.

''பாத்தியா! இதனாலதான் நீ வித்தியாசமான பொண்ணுன்னு சொன்னேன். இப்படியெல்லாம் பானுமதி கிட்டே சொல்ல முடியுமா?''

''ஓஹோ... சொல்ல முடிஞ்சிருந்தா - அவங்களைக் கல்யாணம் பண்ணியிருப்பீங்களா?'' அவள் பொய்க் கோபம் காட்டினாள்.

அவன் ரசித்துச் சிரித்தான். அருகில் இழுத்துக் கொண்டான். ''இப்ப என்னமோ கோபம் காட்டறே? அவகிட்டே போய் உங்களை மாதிரிப் பொண்ணுதான் ரமணன் சாருக்குப் பொருத்தம்னு சொல்லியிருக்கே!'' என்று வலது காதைப் பிடித்துத் திருகினான்.

அவள் அசடு வழியச் சிரித்தாள். பிறகு அவன் மார்பில் சாய்ந்து கொண்டாள். மெல்லிய குரலில் சொன்னாள்.

''ரமணன்... நிஜம்மா.. சொல்லங்க...! உங்க அம்மாவுக்கும், அப்பாவுக்கம் இந்த முடிவுல கொஞ்சம் வருத்தம்தானே?''

அவன் ஒரு நிமிடம் மௌனம் சாதித்தான். பிறகு சொன்னான்.

''முதல்ல... கொஞ்சம் வருத்தம்தான்! ஆனா... உன்னோட குணம் தெரிஞ்சு மனசைத் தயார் படுத்திகிட்டாங்க. உன்னோட பழக ஆரம்பிச்சதும் நல்லாப் புரிஞ்சுகிட்டாங்க. 'ஆமாப்பா. நீ சொன்னது ரொம்பக் கரெக்ட். குணம்தான் முக்கியம் அப்படீங்கறாங்க'' என்றான்.'

சுரபி மகிழ்வாகப் புன்னகைத்தாள்.

ரமணன் மேலும் தொடர்ந்தான். ''சுரபி! நம்ம நாட்டு மக்களோட நிறம் கறுப்பு! அது நம்மோட பெருமை! ஆனா... மக்கள் ஏன் இப்படி சிவப்புத் தோலுக்கு முக்கியத்துவம் கொடுக்கறாங்கன்னே... தெரியலே. இந்தத் தாழ்வு மனப்பான்மைக்கு எதிராத்தான் நான் போராடறேன். நம்மிடம் இருக்கிற எல்லாமும் - அதாவது நம்ம இயற்கை சார்ந்த வாழ்க்கை முறை, கலாச்சாரம்,



குடும்ப அமைப்பு இதெல்லாம் நமக்குப் பெருமை தரக் கூடிய விஷயங்கள். இதுக்காக நாம தலை நிமிர்ந்து நடக்கணுமே தவிர தலைகுனியக் கூடாது. ஒரு அருமையான பாட்டு இருக்குத் தெரியுமா?

**''குஞ்சி யழகும் கொடுந்தானைக் கோட்டழகும்**
**மஞ்ச ளழகும் அழகல்ல - நெஞ்சத்து**
**நல்லம் யாமென்னும் நடுவுநிலைமையான் மாந்தர்க்குக்**
**கல்வி யழகே அழகு''ன்னு**

கல்வியும், அறிவும், உழைப்பும்தான் அழகான விஷயங்கள் தங்கம்''என்றான்.

சுரபி ஆழ்ந்து கேட்டுக் கொண்டு ஆமோதித்தாள். அவன் மேலும் தொடர்ந்தான்.

பானுமதியின் அழகால் என்னைப் பெத்தவங்க ஆகர்ஷிக்கப் பட்டிருக்கலாம். ஒருவேளை அப்படியொரு கல்யாணம் நடந்திருந்தாக் கூட, கொஞ்ச நாள்ல அவளோட குண விசேஷம் புரிஞ்சு போயிருந்தா - வருத்தம்தான் மிஞ்சியிருக்கும். அதனால இனிமே பானுமதியைப் பத்தி நாம பேச வேண்டாம். புரியுதா?'' என்றான்.

அவள் வேகமாகத் தலையாட்டினாள். அவள் தலையாட்டிய விதம் பார்த்து அவன் சிரித்தான்.

''இப்பக்கூட நாம தேனிலவுக்கு வர்லே!'' என்றான் ரமணன்.

அவள் திகைப்பாய்ப் பார்க்க, அவன் சிரித்துக் கொண்டே மேலே சொன்னான். ''நான் சொன்னேனே! அந்த மூலிகை இந்தப் பகுதியிலே கொஞ்சம் விளையறதாய் சொன்னாங்க. அதைக் கண்டுபிடிக்கணும். 'லார்ஜ் ஸ்கேல்'ல, விளைவிக்க முடியுமானு பாக்கணும். ப்ராஜக்ட் வொர்க்காகத்தான் வந்திருக்கேன் புரியுதா?'' என்றான்.

''ஆமா..! ஃபீல்ட் வொர்க்?'' என்று அவள் கலகலப்பாகச் சிரித்தாள். அவனும் அதில் கலந்து கொண்டான்.

''சுரபி... ஒரு விஷயம் நல்லா ஞாபகம் வச்சுக்க. என் மனம் கவர்ந்த அழகி நீதான். நானும் ஒன்றும் லேசுப்பட்ட ஆளில்லை. இந்த அழகுக்கு அழகானேன்'' போதுமா?''

அவள் கண்கள் படபடக்க ''அழகுக்கு அழகானேன்'' என்று சொல்லிக் கொண்டாள். எது அழகு என்று புரிந்து கொண்டவர்களாய் இருவரும் இணைந்து சிரித்தார்கள்.

சுற்றிலும் இருந்த பசுமைக் காட்சியும் சேர்ந்து சிரித்தது.